அறைவு 03 இயம் 45 May 23-29, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

aat @ VBC
026 2227622 - 07702 03 201

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# கிழக்கில் இயல்பு நிலை பாதிப்பு

## நான்கு அமைப்புக்களின் கூட்டு நடவடிக்கை



பேருந்துத் தரிப்பிடம் திருகோணமலை

கிழக்கு மாகாணம் நேற்றைய தினம் இயல்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்ததாக திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புங்குடுதீவில் நடைபெற்ற பாலியல் வன்புணர்வுக்கொலையைக் கண்டித்தும் சம்பூர் மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தக் கோரியும் நான்கு அமைப்புக்களால் கோரப்பட்டிருந்த பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும் நடவடிக்கையானது வெற்றிகரமாக நடைபெற்றதை அடுத்தே கிழக்கின் இயல்புநிலை ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

கிழக்கு மாகாணத் தமிழ் 17

### கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பு

**மட்டக்களப்பில் நாம் திராவிடர் அமைப்பினர் கோரியதற்கு அமைய வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தம்**



மட்டக்களப்பு

# தமிழ்த் தேசிய இருப்பிற்குக் கிடைத்த வெற்றி

## சம்பூரில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

சம்பூர் மக்களின் ஒட்டு மொத்தக் குரலாய் வெளி வந்த தவராசா பிறேம்குமார் அவர்களது உணவொறு- ப்புப் போராட்டத்தின் வெற்றியானது தமிழ்த் தேசத்தினுடைய இருப்பிற்- குக் கிடைத்த வெற்றி எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கடந்த 21ம் திகதி சம்பூர் மக்களின் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றிக்காக வாழ்த்துச் சொல்வதற்காக அங்கு சென்றிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உணவுத் தவிர்ப்புப் போரில் ஈடுபட்ட பிறேம்குமாரைச் சந்தித்து உரையாடும் போதே 17



உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட பிரேம்குமாருடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

## "நடக்க வேண்டியவைகள் இனி நடக்கும்"

-இரா. சம்பந்தன்-



"இடைக்காலத்தடை முடிவிற்கு வந்துள்ளது. தற்போது தடை இல்லை. அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஜூன் 16ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆகவே 17

## சம்பூரிற்கு மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பயணம்

சம்பூர் மக்களின் போராட்டத்தை அடுத்து கடந்த 20ம் திகதி கிளிவெட்டி முகாமிற்கு திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி அதி வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் மக்கள் 17



## தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமைக்காக

### தாக்குதல் நடத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வணிக பீட சிங்கள மாணவர்கள் இருவரே தம்மீது தாக்குதல் நடத்திய வர்கள் என தாக்குதலுக்கு உள்ளான அபிவிருத்தி உத்தியோகத்தர் அடையாளம் காட்டியுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த சனிக்கிழமை (16.05.2015) நடைபெற்றுக் கொண்டிருந்த விதாதா தொழில்நுட்பக் கண்காட்சியின் இறுதி நிகழ்வில் செங்கலடி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தரான 17

## மீள்குடியேற்றம் தொடர்பாக ஆராய்வு

சம்பூரில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் எவ்வாறான பங்களிப்புக்களை வழங்கலாம் என்பது தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று நேற்று நடைபெற்றுள்ளது.

கல்வி அமைச்சர் தண்டாயுத பாணியின் தலைமையில் 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# அதிகாரப் பரவலாக்கத்தின் சாத்தியமும் ஆபத்தும்!

இலங்கையில் வாழும் இரண்டு தேசிய இனங்களில் ஒன்றான தமிழர்கள் தமது சுதந்திர வாழ்விற்கான போராட்டங்களை பந்நெடுங்காலமாக நடத்திக்கொண்டே இருக்கின்றார்கள்.

இப்போராட்டத்திற்கான தீர்வாக 2009ம் ஆண்டில் முடிவிற்கு வந்த யுத்தத்தின் பின்னர் இலங்கை அரசினால் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற அதிகாரப் பரவாக்கத்தை ஏற்றுக்கொள்ளும் முனைப்புக்கள் வலுப்பெற்று வருகின்றன.

அதிகாரப்பரவலாக்கத்தின் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ள முடியுமா? என்பதும் அவ்வாறு தீர்த்துக்கொள்ள முடியுமாயின் அவ் அதிகாரப் பரவலாக்கம் என்பது எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்பதனையும் புரிந்துகொண்டால் மட்டுமே அதிகாரப் பரவலாக்கம் என்ற தீர்வை மனமொத்து ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு தமிழ் மக்களால் வர முடியும்.

ஒரு உச்ச பீடத்தில் குவிந்துள்ள அதிகாரங்களை அவ் உச்ச பீடத்திற்கு அடுத்த மட்டங்களுக்கு கையளிப்பதையே அதிகாரப் பரவலாக்கம் எனலாம்.

உச்ச பீடத்திற்கும் அதன் அடுத்த படிநிலைகளுக்கும் இடையில் இருக்கும் நம்பிக்கையே அதிகாரப் பரவலாக்கத்தைச் செய்வதற்கு முதற்கண் அடிப்படையாக அமைகின்றது.

இலங்கையின் அதிஉச்ச பீடமாகக் காணப்படுவது நாடாளுமன்றமே! எனில் நாடாளுமன்றமானது அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுமானால் அது தன்னகத்தே கொண்டுள்ள அதிகாரங்களை அடுத்த படிநிலைக்கு வழங்க வேண்டிய தேவை உள்ளது. எனில் நாடாளுமன்றத்திற்கு அடுத்த படிநிலையாக இலங்கையில் காணப்படுவது மாகாண சபைகளே! ஆக மொத்தம் தமிழர்களின் பிரச்சனைக்கான தீர்வாக அதிகாரப்பரவலாக்கம் என்பது வழங்கப்படுமானால் அவ்வதிகாரப்பரவலாக்கத்தைச் செயற்படுத்தும் நிலையில் இருக்கப் போவது மாகாண சபையாகவே இருக்கும். முடிவாக தமிழருக்கான தீர்வு மாகாண சபைக்குள் முடக்கப்பட்டுவிடும்.

அதிகாரப்பரவலாக்கத்தின் ஆபத்தே எந்தக்கணத்திலும் வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற்றுக்கொள்ள உச்சபீடத்திற்கு அதிகாரமுள்ளது என்பதே!

அதாவது அதிகாரப் பரவலாக்கமானது நிரந்தரமானதாக எப்போதுமே இருக்கப்போவதில்லை. அதன் உள்ளடக்கங்களை மாற்றவும் அல்லது ஒட்டுமொத்தமாக மீளப் பெற்றுக்கொள்ளவும் அதிகாரம் உள்ளவர்களாக அந்தந்தக் காலங்களில் நாடாளுமன்றத்தில் ஆட்சிக் கட்டில் இருக்கின்ற மனிதர்களால் முடியும்.

அதற்கான அண்மைக்கால உதாரணமாக திவிநெகும சட்டமூலம் ஊடாக மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் சிலவற்றை மத்திய அரசு வரித்துக்கொண்டதனைக் குறிப்பிடலாம்.

ஆக மொத்தம் அதிகாரப் பரவலாக்கம் என்பது நிரந்தரமற்றதாகவும் தற்காலிகமானதாகவும் இருக்கின்றது.

அத்துடன் ஒரு தேசிய இனம் மற்றொரு தேசிய இனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளும் வகையிலேயே இவ் அதிகாரப் பரவலாக்கம் அமையப் போகின்றதே ஒழிய இரண்டு தேசிய இனங்களையும் சமமாக மதிக்கத்தக்கவகையில் இந்த அதிகாரப்பரவலாக்கம் நிகழப் போவதில்லை.

இதனால் மீண்டும் இரண்டாம் நிலைக்கே அதிகாரப் பரவலாக்கம் வழிசமைக்கப்போகின்றது. சிந்திப்போமா?

## வாகரையில் 2வது ஈரோஸ் அலுவலகம்

போராட்டமானது புனிதமானது போராட்டத்தின் போது போராட்ட வழிமுறைகளை பின்பற்றாமையினால் அது பயங்கரவாத அமைப்பாக மாறி எமது மக்கள் பல முப்புக்களை சந்திக்க நேரிட்டது.என்று ஈழவர் ஜனநாயகக் முன்னனியின் (ஈரோஸ்)செயலாளர் நாயகம் இ.பிரபாகரன் தெரிவித்தார்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் கதிரவெளிக் கிராமத்தில் ஈரோஸ் கட்சியின் அரசியல் பணிமனையினை ஞாயிற்றுக்கிழமையன்று (17.05.2015) வைபவ ரீதியாக திறந்து வைத்து அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்களிடையே உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வலுவலகமானது இப்பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்ட இரண்டாவது அலுவலகம் என்பது குறிப்பிடத்தக்கது.



## யாழ் திருமலைப் பேருந்தின் மீது தாக்குதல்

யாழில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது வவுனியாவில் வைத்து 21ம் திகதி மாலை 7 மணியளவில் கல்வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழில் இருந்து திருகோணமலை சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பயணிகள் பேருந்து மீது வவுனியா, தாண்டிக்குளம், சோயா வீதிப் பகுதியில் வைத்து உந்துருளியில் வந்த இனந்தெரியாத நபர்கள் கல் வீசி தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்ததுடன் சாரதியும் காயமடைந்தார்.

இருப்பினும் பேருந்துச் சாரதி சாதுரியமாக வீதியோரமாக பேருந்தை நிறுத்தியதால் அதில் பயணித்த ஐம்பதிற்கும் மேற்பட்ட பயணிகளுக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா காவல்துறை மேற்கொண்டு வருகின்றனர் . (நன்றி மலரும்.கொம்)




## சிவன் கோவிலில் திருநாவுக்கரசர் குருபூசை

அருள்மிகு விஸ்வநாத சுவாமி அறநெறிப் பாடசாலையும், இந்துசமய கலாசார அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்திய திருநாவுக்கரசர் குருபூசை கடந்த 17.05.2015 ஞாயிற்றுக்கிழமை சிவன் ஆலய மகேஸ்வரி மண்டபத்தில் அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி.அன்னலெட்சுமி வேலாயுதம் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிவன் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ.சு.கிருஸ்ணகுமாரக் குருக்கள் பூசை வழிபாடுகளை நடாத்தி வைத்து ஆசியுரையும் வழங்கினார். அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளை அடுத்து திருகோணமலை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் சி.மகேந்திரராசா சிறப்புரை ஆற்றினார்.

இறுதியாக 2013-14ம் ஆண்டுகளில் இந்துசமய கலாச்சார திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிகளில் சித்தியடைந்தவர்களுக்கு பாராட்டுப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டது. (விது)

## காட்டுயானைகளின் பசிக்கு இரையாகும் மீள்குடியேற்றக் கிராமமான வீரஞ்சோலை


குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வீரஞ்சோலை கிராம மக்கள் காட்டு யானைகளின் தொல்லையால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

வீரஞ்சோலை கிராமத்திற்குள் கடந்த புதன்கிழமை இரவு உட்புகுந்த யானைகள் தர்மலிங்கம் சந்திரகாந்தன் என்பவரின் தென்னந்தோட்டம் மற்றும் பயிர்ச் செய்கைகளை துவம்சம் செய்ததுடன் வீட்டின் ஒரு பகுதியையும் சேதப்படுத்தியுள்ளன.

வீரஞ்சோலை ஒரு மீள் குடியேற்ற கிராமமாகும். இக்கிராம மக்கள் இப்பகுதியில் மீள் குடியேற்றப்பட்ட போதும் எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற நிலையிலேயே வாழ்ந்து வருவதாகவும் ஜீவனோபாயத் தொழிலாக செய்கை பண்ணப்படும் வீட்டுத்தோட்டப் பயிர் செய்கைகளை காட்டு யானைகள் துவம்சம் செய்து வருவதாகவும் இதனால் தாம் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கிராமத்திற்குள் ஊடுருவும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு இங்கு வாழும் ஏழை மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





## மாணவிகளைக் கௌரவித்தது "விடியல்"

அலஸ்தோட்டம் விடியல் சமூக சேவைகள் சங்கமானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு அலஸ்தோட்ட கிராமத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் விதவை பெண்களுக்கு உலர் உணவு வழங்கும் திட்டமும், கடந்த வருடம் க.பொ.சா பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வும், 18.05.2015 திங்கட்கிழமை மதியம் 2.30 மணியளவில் அலஸ்தோட்டம் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ கிருபாகரன் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் முதன்மை அதிதியாகத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் க. செல்வராஜா கலந்துகொண்டார். க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்த மதுசாந்தினி, மிதுசா, தர்மி மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர். (அச்சுதன்)



## மட்டிக்களியில் விபத்து

திருகோணமலை மட்டிக்களி லோவர் வீதியில் 21.05.2015 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் பிக்கப் வாகனம் ஒன்றுடன் மோட்டார்சைக்கிலுடன் விபத்தடைந்தது.

இவ்விபத்தில் மோட்டார்சைக்கலில் பயணித்த இருவர் திருகோணமலை பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அச்சுதன்)



## படைப்பாளிகள் சந்திப்பு

கனடாவில் இயங்கும் படைப்பாளிகள் உலகமையம் திருகோணமலைப் படைப்பாளிகளைச் சந்திக்கும் நிகழ்வை இன்று காலை 9.30 மணிக்கு நகரசபை மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ளது. மேலதிகத் தகவல்களுக்கு சிவரமணியை 0774137959 ஊடாகத் தொடர்பு கொள்ளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது தினமாக தொடரும் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், புங்குடுதீவு மாணவியின் கொலையை கண்டித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றாவது நாளாகவும் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்த மாணவியின் கொலையை கண்டித்தும் கொலையாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்குமாறு கோரியும் மட்டக்களப்பு செங்கலடி மத்திய கல்லூரி மாணவிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இந்த மாணவியின் கொலையை கண்டித்து தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் கல்லடியில் கண்டன ஊர்வலம் நடைபெற்றது. கல்லடியிலுள்ள சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாக ஆரம்பமான இந்த கண்டன ஊர்வலம் கல்லடி மணிக்கூட்டு கோபுரம்வரை சென்றது. இந்த மாணவியின் கொலையை கண்டிதும் இக்கொலையுடன் தொடர்புடையவர்களுக்கு உரிய தண்டனை வழங்குமாறு கோரியும் கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா விளையாட்டுக்-கழகத்தின் ஏற்பாட்டில் கண்டனப்பேரணி இடம்பெற்றது.




## காணிப்பயன்பாட்டு வரைபடம் உருவாக்க திட்டம்

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்-குழுவின் சிபாரிசுக்கு அமைய உருவாக்கப்பட்ட காணிப் பயன்பாட்டு திணைக்களத்தினால் காணிப் பயன்பாட்டு வரைபடம் தயாரிப்பதற்கான பங்காளர்களை தெளிவுபடுத்தும் கூட்டம் களுவாஞ்சிக்குடி பிரதேச செயல-கத்தில் கடந்த செவ்வாய் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் தலைமை-யில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திணைக்கள தலைமைக் காரியாலயத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.கிருபாமூர்த்தி, காணிப் பயன்பாட்டுத் திணைக்களத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டு இதற்கான விளக்கங்களை முன்வைத்தனர்.

அத்துடன் தரிசு நிலங்களை பயனுள்ள வகையில் எவ்வாறு பயன்படுத்தலாம், காணிக்கான பாதுகாப்பை ஏற்படுத்தவது சம்மந்தமாக விரிவான விளக்கங்கள் இதன்போது முன்வைக்கப்-பட்டமை குறிப்பிடத்-தக்கதாகும்.



# மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## முத்திரையிடப்படாதவை ரத்து

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் பொருட்கொள்வனவில் ஈடுபடும் நுகர்வோரை பாதுகாக்கும் வகையில் வர்த்தக நிலையங்களிலுள்ள நிறுவை அளவு கருவிகளுக்கு முத்திரை பதிக்கும் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வர்த்தக நிலையங்களில் முத்திரையிட-ப்படாத தராசுகள் பாவனை-க்கு முற்றாக தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் வருடாந்தம் இந்த முத்திரையிடும் பணிகளை திணைக்களம் மேற்கொண்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பொறுப்ப-திகாரி ஏ.எல்.நௌசாத் தெரிவித்தார்.

## மானியம் மாற்றியோர் கைது

ஏறாவூர், மீராகேணி கிராமத்திலுள்ள அரிசி ஆலையொன்று நேற்று திடீரென்று சுற்றிவளைக்கப்பட்ட நிலையில், மானிய உரத்தை மாற்றி பொதி செய்ததாகக் கூறப்படும் 5 பேர் கைதுசெய்யப்பட்டதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

அரசாங்கத்தினால் மானியமாக குறைந்த கட்டணத்தில் விவசாயி-களுக்கு வழங்கப்படும் உரத்தை விவசாயிகளிடமிருந்து மிகக் குறைந்த விலைக்கு பெற்று அதன் பொதியை மாற்றி அதிக விலைக்கு விற்பனை செய்யும் தொழில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்திருக்கின்றது.

இது தொடர்பாக மட்டக்களப்பு குற்றத்தடுப்பு புலனாய்வுப் காவல்துறைக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து இந்த அரிசி ஆலை சுற்றிவளைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கஞ்சா வைத்திருந்தவர் கைது

மட்டக்களப்பு, ஏறாவூர் நகரில் விற்பனைக்கு கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவரை கடந்த வியாழக்கிழமை காலை கைதுசெய்துள்ளதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர். மட்டக்களப்பு போதைப்பொருள் தடுப்பு புலனாய்வு காவல்துறையினர் மோப்பநாயின் உதவியுடன் இந்தச் சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன், இவரிடமிருந்து 20 கிராம் நிறையுடைய 10 கஞ்சா கட்டுக்களை கைப்பற்றியதாகவும் கூறினர். சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

## தொலைந்து போன கட்டப்பட்ட மாடுகள்

பிரதான வீதியில் மண்முனைப்பற்று பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் மாடுகள் அலைவதனால் விபத்துச்சம்பவங்கள் அதிகரித்துவருவதாக குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுவந்ததை அடுத்து மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச சபையினால் கடந்த செவ்வாய்க்கிழமை வீதிகளில் நின்றுகொண்டிருந்த போது பிரதேசசபையின் செயலாளரின் தலைமையில் பிரதான வீதியில் திரிந்த சுமார் 53 மாடுகள் பிடிக்கப்பட்டு சாண்டோ சங்கரதாஸ் மைதானத்தில் அடைக்கப்பட்டிருந்தன. இருப்பினும் அடைக்கப்பட்டிருந்த மாடுகளை வேலிகளை வெட்டி மாடுகளை அகற்றியதற்கு எதிராக காத்தான்குடி காவல் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

வீதிகளில் திரியும் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு கால்நடை வளர்ப்பாளர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டபோதிலும் தொடர்ச்சியாக கட்டாக்காலி மாடுகள் வீதிகளில் நடமாடியேவந்தமை குறிப்பிடத்தக்கது.

# யார் சொன்னது இலங்கையில் இன ஐக்கியம் மலருமென்று!!!

## எம் ஆடைகளை உருவி இரத்தத்தைக் குடித்த ஒரு பூதத்தின் முன்னே ஐயா தர்மம் தாருங்கள் என்று பல்லைக் காட்டியபடி காத்துக் கிடப்பது இன்னும் எவ்வளவு நாட்களுக்கு

புதிய ஆட்சியில் தமிழருக்கான தீர்வு உறுதி என சிலர் நம்பி கொண்டு இருப்பது போல் தெரிகிறது. ஆனால் உண்மை என்ன............. .

நேற்றைய ஆங்கில பத்திரிகை ஒன்றின் மக்கள் கருத்து பகுதியில் ஒரு சிங்கள குடிமகன் எழுதுகிறான்... சம்பூர் அனல் மின்நிலையம் தாமதப்படுத்தபடுவதனால் இலங்கை மின் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளுமாம் என. ஆக அவனின் மனதிலும் அந்த பத்திரிகை நிறுவனத்தின் மனதிலும் இருப்பது என்ன. சம்பூருக்கான போராட்டங்கள் தீவிரம் அடைந்துள்ள இப்போதைய காலப்பகுதியில் இப்படியான கருத்துக்களுக்கு முக்கியம் கொடுக்க வேண்டியதன் அவசியம்தான் என்ன.... தமிழன் எலும்புக்கூடாய் கிடப்பினும் பெரும்பான்மை மக்கள் மனதில் கிஞ்சித்தும் இரக்கம் என்பது வரப்போவதேயில்லை.

மே பதினெட்டாம் நாள் புலிகளின் தலைவரின் நினைவஞ்சலி படத்தை இணையத்தில் பதிவேற்றி இருந்தார்கள். அதற்கு கிடைத்த விருப்பு வாக்குகளும் பகிர்வுகளின் எண்ணிக்கையும் கூறும் செய்திதான் என்ன.... இவ்வளவு ஊழல்கள் செய்தும் மகிந்தவுக்கான ஆதரவு தளம் பெருகி வருவதன் காரணம் அவர் தமிழரை அழித்தவர் என்பது மட்டுமே.

என்னதான் நாங்கள் குத்துகரணம் போடினும் 2009 இற்கு முன்னான நிலை அடையப்பட போவதில்லை. சர்வதேசம் என்பதும் போர்குற்ற விசாரணை என்பதும் ஒரு மாயையே. நான் அடிக்கடி கூறுவேன் ஈழத்தில் தமிழரின் இருப்பு ஐம்பது ஆண்டுகளுக்கு மட்டுபடுத்தப்பட்டுள்ளது என. ஆனால் அதில் ஒரு திருத்தம் மிஞ்சி போனால் ஒரு பத்து ஆண்டுகள் மட்டுமே. ஏனெனில் இலங்கையின் அடுத்த பிரதமர் மகிந்த ராஜபக்சதான். உண்மையில் ஸ்ரீ.சு.க பிளவுபடப்போவதில்லை. இப்போதைய நிலையில் மைத்திரியும் சந்திரிகாவும் மட்டுமே அந்த கட்சியிலிருந்து வெளியேற்றபடுவார்கள் போலுள்ளது. அந்த கட்சியில் அடி முதல் முடி வரை மகிந்த கோசமே பாடப்படுகிறது.

தேர்தல் பிரசாரங்களில் கிளப்பப்பட போகும் இனவாதத்தில் பெரும்பான்மை மக்களின் அமோக ஆதரவுடன் மகிந்த அணி ஆட்சி அமைக்கும். இந்தியாவுக்கும் அமெரிக்கா-வுக்கும் ஒரு பாடத்தை கற்பிக்க பெரும்பான்மையின வாக்காளர்கள் தயாராய் உள்ளனர். இந்தியா மற்றும் அமெரிக்காவின் இராஜதந்திரங்கள் இங்கு செல்லுபடியாக போவதில்லை. ஏனெனில் மகிந்த சிங்கள மக்களின் அமோக ஆதரவு பெற்ற ஒரு தலைவர்.

செப்டம்பர் மாதத்தின் பின்னர் இலங்கையின் சிறுபான்மை மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேணும்.... அப்படி ஒருவர் இருந்தால்... ஐ.நா ஏதாவது திட்டங்கள் போட்டு இலங்கையில் தலையிட முயன்றால் ரசியா மற்றும் சீனா உதவியுடன் இலங்கை அந்த திட்டங்களை கூட தடுத்து விடும். இதுவே யதார்த்தம்.

ஆக இன ஐக்கியம் என்பது இல்ங்கையின் தமிழருக்கு தேவையே ஒழிய பெரும்பான்மை மக்களுக்கு அல்ல. எங்களின் ஆடைகளை உருவிய, இரத்தங்களை குடித்த ஒரு பூதத்தின் முன்னே ஐயா தருமம் தாருங்கள் என்று பல்லை காட்டியபடி காத்து கிடப்பது இன்னும் எவ்வளவு நாட்களுக்கு.... எங்களின் அம்மணங்களை மறைக்க காலம் ஒரு கோமணத்தைதானும் தராதா...............

**தேத்தாமரத்தான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றாளியை கண்டுபிடிக்கும் வரை ஓய்வில்லை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை வழக்கில் தம்மீது குற்றம் சுமத்துவதற்கு எவ்வித சாட்சியங்களும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தெரிவித்துள்ளார். ஊடக சர்க்கஸ் அடிப்படையில் இந்த வழக்கை சில தரப்புக்கள் முன்னெடுத்து செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை விசாரணையின் பின்னர் கருத்துரைத்த கொலையுண்ட பாரத லக்ஸ்மனின் மகளான ஹிருணிகா பிரேமசந்திர, தமது தந்தையின் கொலை வழக்கை மேல்நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றமை முக்கிய முன்னேற்றமாகும்.

இந்தநிலையில் தமது தந்தையின் மரணத்துக்கு காரணமானவர்களை சட்டத்துக்கு முன் கொண்டு வரும் வரையில் ஓயப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

## 130 பேரும் அநுராதபுர சிறைச்சாலையில்

மாணவி வித்யா, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, யாழ். நீதிமன்ற வளாகத்தில் அமைதியின்மையை தோற்றுவிக்கும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 130 பேரும் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து வட பகுதியின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

யாழ். நகரில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பில் கண்டறிவதற்காகவும், கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் பொலிஸ் மாஅதிபரும் அங்கு விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சத்தியாகிரகத்தில் பிக்குமார்



வில்பத்து சரணாலயத்தில் முன்னெடுக்கப்படுவதாக கூறப்படும் காடழிப்பை தடுத்து நிறுத்துமாறு கோரி பிக்குகள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

## நீதியரசர் யாழ் விஜயம்

பிரதம நீதியரசர் ஸ்ரீபவன், பொலிஸ் மா அதிபர் இலங்கக்கோன் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்றுக்கு வருகை தந்தனர். யாழ். நீதிமன்றுக்கு வருகை தந்த அவர்கள் இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாகவும் ஆராய்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் வருகையை முன்னிட்டு நீதிமன்றத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## 20வது திருத்தத்திற்கு ரணில் தடை



20 ஆவது சீர்த்திருந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதைத் தடுக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் செயற்படுகின்றனர் என்று குற்றம்சாட்டியுள்ளார் தேசிய அரசிலிருந்து கடந்த வியாழன் அன்று வெளியேறிய முன்னாள் வீடமைப்பு, சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா.

எனினும், 20 ஆவது சீர்த்திருந்தச் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக எதிர்க்கட்சிகளை இணைத்துக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## வடக்கில் மீளவும் பயங்கரவாதம் தலைதூக்கும் ஆபத்து

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பாடசாலை மாணவி வித்தியா மீதான வல்லுறவு மற்றும் கொலையின் பின்னணியில் வடக்கின் சிவில் வாழ்க்கை மீண்டும் ஒருமுறை பாதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்-களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாத பட்சத்தில் வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தோற்றுவிக்கப்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவத்தினர் தங்களது தளங்களில் மாத்திரமே நிலைகொண்டுள்ளனர். இதனால் இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் பேண முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் நாட்டின் சட்டம் ஒழுங்குக்கு பாரிய அச்சுறுத்தலானதுடன், மிக மோசமான நடவடிக்கை-யொன்றுக்கும் வழிசமைத்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், தமிழ் ஆயுததாரிகள் மீண்டும் தலைதூ-க்குவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும், எனவே சம்பவத்துடன் தொடர்புடையவர்-களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

## நால்வர் வெளியேறினர்

பிரதமர ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாடுகளைக் கண்டித்தே தேசிய அரசிலிருந்து தாங்கள் நால்வரும் அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்தனர் என நாடாளுமன்ற மஹிந்த யாப்பா, டிலான் பெரேரா, பவித்ரா வன்னியாராச்சி, ரத்நாயக்கா ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன, வீடமைப்பு, சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா, சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி மற்றும் பொதுநிர்வாகம் ஜனநாயக ஆட்சி இராஜாங்க அமைச்சர் . சீ.பி. ரத்னாயக்க ஆகியோரே தமது பதவி விலகல்கள் குறித்து ஜனாதிபதிக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்படி நால்வரும் தமது அமைச்சுப் அதவி இராஜினாமா தொடர்பான முடிவை அறிவித்தனர்.



## இனி தலையீடில்லை

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வர்த்தக நடவடிக்கைகளில் தலையீடு செய்யப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

## மணலைப் பொதி செய்யலாம்:

வடமாகாண சபையின் 28 ஆவது அமர்வு கைதடியில் உள்ள மாகாணசபை அலுவலகத்தில் பிரதி அவைத் தலைவரர் அன்ரனி ஜெகநாதன் தலைமையில் இடம்பெற்றது. உறுப்பினர் பரஞ்சோதியினால் யாழ் மாவட்டத்தின் கட்டடத் தேவைகள் மற்றும் வீடமைப்பு திட்டங்குளுக்க கூட மணலை பெற முடியாத நிலைமை காணப்படுவதாகவும் இதனால் பலர் தொழில் இழந்து இருக்கின்றனர் எனத் தெரிவித்து பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்து முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கும்போது - எதிர்காலத்தில் பொது மக்களின் மணல் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் தேவைக்கு ஏற்ப மணலை பெறும் வகையிலும் மணலை பொதி செய்து விற்பனை செய்வது சம்பந்தமாக யோசனைகளை மேற்கொண்டு வருகிறார் என தெரிவித்துள்ளார்.

## "கபட நாடகத்தை நம்ப மாட்டோம்"

மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் உள்ளூர் விசாரணை என்பது காலத்தை இழுத்தடிக்கும் ஒரு செயலாகவும் தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் முட்டாள்களாக்குவதற்கான ஒரு செயற்பாடாகவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பார்க்கின்றது என த.தே.கூ வின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரித்தார்.


மேலும் அரசாங்கத்தின் இந்தக் கபடத்தனமான நிகழ்ச்சிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ள மாட்டாது என்பதுடன், தமிழ் மக்களும் சர்வதேச சமூகமும் இந்த அரசாங்கத்தின் இத்தகைய கபடத்தனமான நடவடிக்கை-களைப் புரிந்துகொள்ள-வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## மீண்டும் வலுப்பெறும் ஐஎஸ்ஐஎஸ்




சிரியாவின் வரலாற்றுக் காலத்திய நகரமான பல்மேரா நகரத்தை மீண்டும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ள ஐஎஸ் பயங்கரவாதிகள் வலுவான நிலையில் போராட்டங்களைத் தொடர்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை உறுதிப்படுத்தியுள்ள ஈராக்கியத் தகவல்கள் ரமாடி நகரின் கிழக்கில் இருந்து முன் நகர்ந்துள்ள தீவிரவாதிகள் ஈராக்கிய நகரான ஹுசைபாவைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவிக்கின்றன.

அத்துடன் தற்பொது ஈராக்கின் முக்கிய இராணுவ மற்றும் வான்படைக் கேந்திர நிலையமான ஹபானியா வை நோக்கி வருவதற்காக பானியாவிற்கும் ரமாடிக்கும் இடையிலுள்ள சிறிய நகரான காலிதியா நகரைக் கைப்பற்றும் முயற்சிகளில் ஐஎஸ் ஈடுபட்டுள்ளதாகவும் ஈராக்கியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு சிரியாவிலுள்ள தேசிய வைத்தியசாலை அண்மையில் ஐஎஸ்சின் கைகளில் வீழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு உக்ரேனில் சித்திரவதைகள்



உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள், யுக்ரைனின் அரச படைகள் ஆகிய இருவருமே போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளனர் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான அம்னெஸ்டி இண்டர்நேசனல் குற்றஞ்சாட்டியுள்ளது.

அரச படைகளுக்கும், ரஸ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல்கள் தொடருகின்ற நிலையில் அங்கு நடைபெறும் மோதலில் ஈடுபட்டுள்ள இந்த இருதரப்புமே கைதிகளைச் சித்திரவதை செய்துள்ளனர் என்று அந்த அமைப்பு கூறுகிறது.

அதிலும் குறிப்பாக பிரிவினைவாதக் குழுக்கள் சட்டவிரோதக் கொலைகளிலும் ஈடுபடுகின்றன எனவும் அம்னெஸ்டியின் அறிக்கை தெரிவிக்கிறது.

முப்பதுக்கும் அதிகமான கைதிகளிடம் உரையாடி தகவல்களை சேகரித்த பிறகே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று கூறும் அம்னெஸ்டி, பலர் சீராக தாங்கள் அனுபவித்த கொடுமைகளைத் தெரிவித்தனர் எனவும் கூறுகிறது.

இதுமட்டுமன்றி அவர்களின் வாக்குமூலங்களுக்கு அப்பாற்பட்டு, எக்ஸ்ரே மூலம் எடுக்கப்பட்ட படங்களில் எலும்புகள் முறிந்து போனதும் தெரியவந்துள்ளது என்றும், மருத்துவமனைப் புகைப்படங்களும் காயங்கள் ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றன எனவும் அம்னெஸ்டி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## ஈபிள் கோபுரத்தில் அதிகம் இழப்பது ஆசிரியர்களே!



பாரிஸ் நகரிலுள்ள உலகப் புகழ்வாய்ந்த ஈபிள் கோபுரத்தில் பணியாற்றும் பணியாளர்கள் நடத்திவரும் பணிப்புறக்கணிப்பால் தற்காலிகமாக அக்கோபுரத்தைச் சுற்றலாப் பயணிகளுக்குத் திறந்து வைப்பதை பிரான்ஸ் நிறுத்தியுள்ளது.

“பிற்பொக்கட்” திருடர்களின் கைவரிசையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பைத் தொடர்கின்றனர்.

இத்திருட்டில் அதிகம் பாதிக்கப்படுவது ஆசிரியர்கள் என்றும் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## வாய் திறக்கும் வட கொரிய உளவாளி

உயர்வகுப்புக்களில் பாடங்களைப் பயின்றுகொண்டிருந்த எனது 22வது வயதில் நான் முன்னாள் தென்கொரிய சனாதிபதியின் படையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

நான் எதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிந்து கொள்ளாமலே நான்கு ஆண்டகளாக விசேட திறன் மிக்க பல்கலைக்கழகம் ஒன்றில் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டேன். அப் பயிற்சிகளில் மிக முக்கியமானது உளவியல் பயிற்சியாகவே இருந்தது. எந்த நிலையில் நான் தென்கொரியர்களால் சிறைப்பிடிக்கபட்டாலும் எனது மரணத்தை நானே உருவாக்கிக் கொள்ளும் வகையான உளிவியல் பயிற்சிகளே அவை. தவிரவும் நீச்சல், துப்பாக்கிச் சூட்டுப்பயிற்சி மற்றும் தற்காப்புக் கலைகளில் தேர்ச்சி என யாவும் நிறைவு பெற்ற நான் தயாரான போது தான் தெரிந்தது நான் உளவாளியாகச் செல்லப் போகின்றேன் என்று என வடகொரிய உளவாளியொருவர் தென் கொரிய ஊடகமொன்றுக்குச் செவ்வியுள்ளார்.

## வங்காலி மக்களின் தற்கொலைப் பயணம்

வங்காள விரிகுடாக் கடலில் மேலும் பல படகுகளில் வங்காலி இன மக்கள் நாட்டை விட்டுத் தப்பியோடும் முயற்சியில் தம் வாழ்வைப் பணயம் வைத்திருக்கலாம் என அஞ்சப் படுகின்றது.

வங்காள விரிகுடாக் கடலில் வங்காலி இன மக்கள் இருநூறு பேரை நேற்று மியன்மார் கடற்படையினர் மீட்டதை அடுத்தே இந்த அச்சம் பரவலாகியுள்ளது.

மியன்மாரில் உள்ள சிறுபான்மையின முஸ்லிம்களான றொங்கியா இன மக்களே இவ்வாறு நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலையிலுள்ளனர்.

மியன்மாரில் வாழும் இச்சிறுபான்மை இன மக்களை அந்நாடு நாடற்றவர்களாகக் கருதுவதுடன் மியன்மாரில் அவர்களுக்கு குடியுரிமையும் மறுக்கப்பட்டுள்ளது.

## “நீங்கள் போகலாம்”

அமெரிக்க உளவு விமானத்தின் விமானியை சீன கடற்படை அதிகாரி ஒருவர் கோபத்துடன் எச்சரித்துள்ளதாக தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க அதி நவீன கண்காணிப்பு விமானமான P8-A சர்வதேச வான்பகுதியில் இருந்த வருவதாக அமெரிக்க பைலட் கூற அவருடன் ரேடியோவில் பேசிய சீன அதிகாரி ஆத்திரத்துடன் "இது சீன கடற்படை, நீங்கள் போகலாம்" என்று கூறியுள்ளதாக தெரிகின்றது

## இன்று முதல்வராகின்றார் ஜெயலலிதா

தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக இன்று காலை 11 மணிக்கு ஜெயலலிதா பதவியேற்கிறார். ஆளுனரை நேற்று சந்தித்த ஜெயலலிதா, தனது புதிய அமைச்சரவையில் இடம்பெறும் அமைச்சர்களின் பட்டியலை ஆளுனர் ரோசைய்யாவிடம் அளித்துள்ளார்.

ஆளுனரைச் சந்தித்த பிறகு, நகரின் பிரதான சாலையில் இருந்த எம்.ஜி.ஆரின் சிலைக்கு மரியாதை செலுத்தினார் ஜெயலலிதா.

உள்துறை, காவல்துறை உள்ளிட்ட துறைகளை முதலமைச்சர் ஜெயலலிதா கவனிப்பார்.

தற்போது முதலமைச்சராக இருக்கும் ஓ. பன்னீர்செல்வம் நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை பல்கலைக்கழகத்தில் உள்ள நூற்றாண்டு விழா அரங்கில் ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்கும் நிகழ்வு நடக்கவிருக்கிறது.

ஆளுனர் ரோசைய்யாவைச் சந்தித்த பிறகு, ஆளுனர் மாளிகையிலிருந்து புறப்பட்டு நகரின் பிரதான சாலையான அண்ணா சாலையில் உள்ள எம்.ஜி.ஆர், அண்ணா, பெரியார் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். 7 மாதங்களுக்குப் பிறகு ஜெயலலிதா முதன் முறையாக வெளியில் வருவதால் அவரைக் காண ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அவரது போயஸ் கார்டன் இல்லத்திற்கு வெளியிலும், ஆளுனர் மாளிகைக்குச் செல்லும் வழி, சிலைகளுக்கு மரியாதை செலுத்துவதற்குச் செல்லும் வழிகளில் குவிந்திருந்தனர். பல இடங்களில் மேடைகள் அமைக்கப்பட்டு, சினிமா பாடல்களுக்கு நடனக் கலைஞர்கள் நடனமாடினர்.

ஜெயலலிதாவைப் பார்க்கக் கூடிய தொண்டர் கூட்டத்தின் காரணமாக சென்னையின் பல இடங்களில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதன் காரணமாக, சென்னை நகரில் பல பகுதிகளில் நன்பகல் 12 மணி முதல் நான்கு மணிவரை கடுமையான போக்குவரத்து நெரிசல் நிலவியது. பல பகுதிகளில் வாகனங்கள் நகர முடியாமல் ஸதம்பித்தன.

## சிறுவருக்கு ஆசையைத் தூண்டிய பெண்ணுக்குச் சிறை

அமெரிக்காவில் 24 வயது பெண்மணி ஒருவருக்கு, சிறுவர்களை ஏமாற்றி செக்ஸ் ஆசையை தூண்டிய குற்றத்திற்காக 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அரிசோனா மாகாணத்தில் உள்ள கிளேன்டில் நகரில் வசித்து வரும் அன்னா அரியேலா ஹெர்னான்டஸ்(24) என்ற பெண்மணி, சமூக வளைதளங்கள் மூலம் சிறுவர்களை மயக்க திட்டமிட்டுள்ளார்.

அதன்படி, தன்னை 15 வயது பெண்ணாக அறிமுகம் செய்து கொண்ட இவர், சிறுவர்களை தனது காதல் வலையில் வீழ்த்தியுள்ளார்.

தன்னோடு பழகிய சிறுவர்களோடு பாலியல் உறவு கொண்டதோடு மட்டுமல்லாமல், அவர்களை போதை மருந்து உட்கொள்ளவும் பழக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வினையடி நீ எனக்கு.. 16



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

– நான் வழிபட இந்த உலகத்தில்
எத்தனையோ கடவுள்கள் இருக்கிறார்கள்
நான் பின்பற்ற இந்த உலகத்தில்
எத்தனையோ மதங்கள் இருக்கின்றன.
ஆனால் நான் காதலிக்க
இந்த உலகத்தில்
நீ மட்டும்தான் இருக்கிறாய்.–

– தபு சங்கர்–

'உங்களை அன்புடன் வரவேற்கிறோம்' என்ற கருத்துப்பட ஆங்கில வசனங்களை தாங்கி மிக அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது கிழக்குப் பல்கலைக்கழக மெயின் ஹோல்.

ஒரு ஆணும் பெண்ணும் கட்டிப் பிடித்துக் கொண்டு ஆடுவதாகவும், இருவரும் அமர்ந்து பேசுவது போன்றும் இன்னும் பல வகையான அசைவுகளில் கலர் வானிஸ் பேப்பர்களில் உருவம் வெட்டி ஹோலின் சுவர்களில் எல்லாம் ஒட்டப்பட்டிருந்த படங்கள் மிக அழகாக இருந்தது. இரு வரிசைகளிலுமாக கதிரைகள் அடுக்கப்பட்டு மேடையில் ஒலிவாங்கிகளும் தனிப்பட்ட முறையில் ஒருசில கதிரைகளும் என தயார்படுத்தப்பட்டிருந்தன.

அன்று சீனியர்ஸ் மாணவர்கள், ஜுனியர்ஸ் மாணவர்களுக்காக நடாத்தும் 'சோஷல் பங்ஷன்' நடைபெறவிருந்தது.

பல்கலைக்கழகம் களைகட்டியிருந்தது. பொதுவாக பல்கலைக்கழகங்களில் முதலாம் வருட மாணவர்களாக வரும் மாணவர்களை அவர்களுக்கு முன்னர் பல்கலைக்கழகம் வந்து இரண்டாம் வருட மாணவர்களாக இருக்கும் சீனியர்ஸ் மாணவர்கள் 'ராக்கிங்' என்ற பெயரில் பகிடிவதை செய்வது வழக்கம். இது ஒரு அன்புத் தொல்லையாக புதுமுக மாணவர்கள் தமது கூச்சசுபாவங்களை உதரித்தள்ளி ஏனைய மாணவர்களுடன் பரஸ்பரம் பழகவும் சீனியர்ஸ் மாணவர்களுடன் பழகவும் என பல்கலைக்கழகத்தில் மாணவ மாணவிகள் மத்தியில் ஒரு அன்னியோன்னியத்தை வளர்ப்பதற்கும் இந்த 'ராக்கிங்' உதவுகிறது.

சில வேளைகளில் இந்த 'ராக்கிங்' நிகழ்வே ஒரு திட்டமிட்ட பழிவாங்கலாகவும் மாறிவிடுவது வேதனைக்குரியதாக இருப்பினும் பல்கலைக்கழகங்கள் தோறும் இந்த 'ராக்கிங்' நடவடிக்கை மட்டும் ஒழிந்ததாக இல்லை. இதற்கு காரணம் இதனை ராக்கிங் செய்யும் மாணவர்களும் 'ராக்கிங்' வாங்கும் மாணவர்களும் கூட விரும்புவதேயாகும்.

ஆனாலும் இந்த 'ராக்கிங்' நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுவதில்லை. கல்வியாண்டைப் பொறுத்தும் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களுக்கான பாடத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதைப் பொறுத்தும் ஒரு மாதமோ இரண்டு மாதமோதான் நடைபெறும். அதற்குப் பின்னர் 'சோஷல் பங்ஷன்' என்ற பெயரில் சீனியர்ஸ் மாணவர்கள் ஒரு விழாவை நடத்தி புதிய மாணவர்களுக்கு விருந்து வைப்பார்கள். அதனைத் தொடர்ந்து புதிய மாணவர்களுக்கு 'ராக்கிங்' நடைபெறாது. இரு சாரரும் தோழமையுடன் பழக ஆரம்பித்து விடுவார்கள்.

இதில் புதிய மாணவர்களை 'ஜுனியர்ஸ்' என்றும் அவர்களுக்கு ஒருவருடம் மேற்பட்டவர்கள் 'சீனியர்ஸ்' என்றும் அவர்களுக்கு மேற்பட்ட மூன்றாம் ஆண்டு மாணவர்களை 'சுப்பர் சீனியர்ஸ்' என்றும் இறுதி வருட மாணவர்களை 'சுப்பர் சுப்பர் சீனியர்ஸ்' மாணவர்கள் என்றும் அழைக்கும் வழக்கம் பல்கலைக்கழகங்களில் வழமையாக இருந்தது.

மீண்டும் அடுத்த வருடம் இவ்வருடம் முதலாம் ஆண்டு மாணவர்களாக இருந்தவர்கள் சீனியர்களாக புதிதாக வரும் புதிய மாணவர்களுக்கு 'ராக்கிங்' புரிவார்கள். அதனைத் தொடர்ந்து 'சோஷல் பங்ஷன்' என இந் நடைமுறை காலகாலமாக பல்கலைக்கழகங்களில் ஒரு மரபாகவே நடைபெற்று வருகின்றது.

'சோஷல் பங்ஷன்' முடிந்து இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின்னர் ஜுனியர்ஸ் மாணவர்கள் அதற்கு நன்றி தெரிவிக்கும் முகமாக தமது சீனியர்ஸ் மாணவர்களுக்கு 'மாபொல பங்ஷன்' என்ற பெயரில் ஒரு விழாவை நடத்தி ஒரு விருந்து கொடுப்பார்கள். ஆனால் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை 'சோஷல் பங்ஷன்' என்பது ஒரு அங்கீகரிக்கப்பட்ட விழாவாகவும் விரிவுரையாளர்களும் கலந்து கொள்ளும் ஒரு முக்கிய நிகழ்வாக நடைபெறும்.

அன்றும் அப்படித்தான் அன்றைய சனிக்கிழமை விடுமுறை தினத்தை கருத்தில் கொண்டு அந்த 'சோஷல் பங்ஷன்' ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக அன்று வளாகம் முழுவதும் இரண்டாம் ஆண்டு சீனியர்ஸ் மாணவர்களையும் முதலாம் ஆண்டு ஜுனியர்ஸ் மாணவர்களையுமே காணமுடிந்தது.

அனைத்து ஜுனியர்ஸ் மாணவர்களும் தம்மை பலவாறாக அலங்கரித்துக் கொண்டு அவ்விழாவில் கலந்து கொள்ளத் தயாராகினர். பெண்களும் அப்படியே அலங்காரம் பண்ணி பல நிறங்களில் சாறி உடுத்திக் கொண்டு மணப் பெண்களைப் போலவே தயாராகிவிடுவர்.

நேரம் காலை 9.00 மணியைக் காட்டத் தொடங்கவும் பல்கலைக்கழக விடுதிகளில் இருந்து ஆண்களும் பெண்களுமாக ஜுனியர்ஸ் மாணவிகளும் மாணவர்களும் வெளிக்கிட்டு மெயின் ஹோலை நோக்கி செல்லத் தொடங்கினர். மட்டக்களப்பு நகரத்தில் இருந்து வரும் ஒருசில மாணவர்களும் மாணவிகளும் பஸ்ஸில் வந்து பல்கலைக்கழக வாசலில் இறங்கி வளாகத்துக்குள்ளே செல்லத் தொடங்கினர்.

நிவேதாவும் புறப்பட்டு தனது தோழிகளுடன் வெளியே வந்தாள். மெல்லிய சிவப்பு நிற காஞ்சிபுரம் சாரியுடுத்தி தனக்கு கழுத்தில் சிறிய அட்டியலும் அணிந்து அவளது அலங்காரம் மிக பிரமாதமாக இருந்தது. ஏற்கனவே அழகான அவளுக்கு அந்த அலங்காரம் மேலும் அழகைக் கொடுத்தது. ஒரு திரைப்பட நடிகையைப் போல அழகாக இருந்தது அவளது மேக்கப்.

அவளைப் போலவே அவளது தோழிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிறத்தில் காஞ்சிபுரம் சாரியே அணிந்திருந்தனர். அனைவரும் திருமணப் பெண்களுக்கிணையான அலங்காரத்தில் தம்மை அலங்கரித்திருந்தனர்.

அந்த இருவார கம்பஸ் வாழ்க்கையில் நிவேதா தனது மிக நெருக்கமான தோழிகளாக இருவரைப் பிடித்திருந்தாள். அவர்களே அவளது ரூம்மேட்டாக அமைந்ததும் மிக வசதியாக போய்விட்டது. சுகந்தியும் பவித்திராவும் நிவேதாவுக்கு மிகவும் பிடித்த தோழிகளாகி விட்டார்கள். இருவரும் அவளது குணத்துடன் ஒத்துப் போகக்கூடியவர்களாக மட்டுமன்றி அவளைப் போலவே கலை ஆர்வமிக்கவர்களாகவும் அவள் எடுக்கும் பாடங்களையே அவர்களும் எடுப்பவர்களாகவும் இருந்தனர்.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய**
**நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின்**
**கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல்**

ஒரு பெண்ணுக்கோ ஆணுக்கோ வாழ்க்கைத்துணை எவ்வாறு நன்றாக அமைந்தால் வாழ்க்கை இன்பமாக போகுமோ அது போன்றே கல்லூரி நாட்களிலும் ரூம்மேட்ஸ் நன்றாக அமைந்தால் தான் கல்லூரி வாழ்க்கையே இனிக்கும். தம்முடன் ஒத்துவராத நண்பர்களை ரூம்மேட்ஸாக கொண்டால் அங்கு நட்பு சீராக அமையாதது மட்டுமல்ல அது கல்வியையே பாதித்து விடவும் செய்யும். அந்த வகையில் நிவேதா தனக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை மட்டுமல்ல பொருத்தமான ரூம் மேட்டயும் தேடிக்கொண்டாள்.

'நிவேதா போவமா...?' பவித்திராவின் கேள்விக்கு... 'ஓம்... எல்லாம் ரெடி நிவேதா நீதான் லேட்... இப்ப ரதன் பார்த்தக் கொண்டிருக்கப் போகுது...' சுகந்தியின் கிண்டல் பேச்சால் நிவேதாவின் முகம் மேலும் சிவந்தது.

கடந்த சில நாட்களுக்குள்ளேயே ரதன் நிவேதா காதலை பல்கலைக்கழகம் அறிந்து கொண்டது. ராக்கிங் செய்த சீனியர்ஸ் மாணவர்கள் கூட இருவரையும் சேர்த்து வைத்தே ராக்கிங் செய்தனர்.

ஒருசில சீனியர்ஸ் மாணவர்கள் நிவேதாவின் அழகில் மயங்கி அவளைக் காதலிக்க நினைத்தாலும் ரதன் நிவேதா காதல் கதை அங்கு பரவலாக அடிபட தொடங்கியதால் தமது எண்ணத்தைக் கைவிட்டுவிட்டனர். இதில் ஒருசிலருக்கு ரதனின் மேல் கோபமும் இருந்தது. சிலருக்கு வியப்பும் இருந்தது. ஜுனியர்ஸ்சாக இருக்கும்போதே ராக்கிங் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் அவர்கள் சந்திக்க முடிந்தது. கதைக்க முடிந்தது, காதலிக்க முடிந்தது அவர்களுக்கு வியப்பாகவே இருந்தது.

நிவேதாவும் பவித்திராவும், சுகந்தியும் புறப்பட்டு வெளியே வந்தனர். பல்கலைக்கழகத்திற்கு முன்னால் இருந்த அந்தப் பெரிய வளவுக்குள் ஆண்கள் விடுதியும் பெண்கள் விடுதியும் தனித்தனியாக இருந்தது. இடையே சில விடுதிகளில் விரிவுரையாளர்கள் தங்கியிருந்தனர். ஆண்கள் விடுதிப் பக்கமிருந்து ரதனும் அவனது நண்பர்களும் வருவது தெரிந்தது.

ரதன் கடும் நீல கலரில் ரவுசர் அணிந்து மெல்லிய நீல நிறத்தில் சேட்டும் அணிந்து 'டை' கட்டியிருந்தது மிகவும் அழகாக இருந்தது. கால்களில் சூவும் கரங்களில் மணிக்கூடுமாக இதுகாலவரை ராக்கிங் பீறியட்டில் அவர்கள் அணியாமலிருந்ததை எல்லாம் அணியும்போது அழகு மேலும் தூக்கலாக காட்டியது.

ரதன் நிவேதா வருவதைக் கண்டுவிட்டு அவர்கள் அருகில் வந்தான்.

"ரதன் இப்படியே பார்க்க மாப்பிள்ளை மாதிரியே இருக்கீங்க..." பவித்திராதான் பேச்சைத் தொடங்கினாள், நிவேதாவும், சுகந்தியும் சிரித்துக் கொண்டனர்.

"ஏன் நீங்க மட்டும் என்னவாம். திருமணப் பெண்களைப் போலவே மேக்கப் செய்திருக்கீங்க..."

"நாங்க மட்டுமா மேக்கப் செய்திருக்கம்...! உங்கட நிவேதாவும் தானே..." "நிவேதா... இயற்கை-யிலேயே அழகுதானே..."

"அப்பஎன்னா நாங்க இயற்கையில அழகில்லையா...?" சுகந்தி கேட்டாள்.

"நான் அப்படி சொல்லலியே... நிவேதா இயற்கையில் அழகு என்றுதான் சொன்னன்..."

"ஓ... நீங்க ஜொலிக்கா நகைக்கிறீங்களா... இது மறைமுகமாக அப்படித்தான் சொல்லுது..."

நால்வரும் நகைச்சுவையாக கதைத்தபடி மெயின் ஹோலுக்கு செல்லத் தொடங்கினர். பவித்திராவும் சுகந்தியும் ரதனையும் நிவேதாவையும் பின்னே விட்டு முன்னே சென்றனர்.

"ரதன் நீங்கள் உண்மையிலேயே அழகாக இருக்கிறீர்கள். என் கண்ணே பட்டுவிடும் போல இருக்கு."

"நிவேதா நான் சொல்ல வேண்டியதை நீங்க சொல்லிட்டீங்க. இவளவு நாளும் இந்த அழகை எங்கே மறைத்து வைத்திருந்தீங்க என்றே தெரியல்ல. வானத்து தேவதையைப் போல் எனக்கொரு கவிதையே எழுத வேண்டும் போல் இருக்கு."

ரதன் சொல்ல சொல்ல நிவேதாவின் முகம் சிவக்கத் தொடங்கியது. பொதுவாகவே பெண்கள் புகழ்ச்சிக்கு அடிமையாகி விடுவார்கள். அதுவும் ஒரு ஆண்மகன் மனசுக்குப் பிடித்தவன் தன் அழகைப் பற்றி வர்ணிக்கும்போது அவள் மிகவும் உணர்ச்சிவசப்படுகிறாள். நிவேதாவும் அப்படித்தான். ஆனாலும் ரதனின் வர்ணிப்பில் உண்மையிருந்தது. அது அவளுக்கும் புரிந்தே இருந்தது. ஊருக்கும் தெரிந்தே இருந்தது.

"சோஷல் பங்ஷன்" ஆரம்ப நிகழ்வாக குத்துவிளக்கு ஏற்றும் வைபவம் நடைபெற்றது. அது கலைப்பீட மாணவர்களுக்குரிய 'சோஷல்' நிகழ்வு ஆகையால் கலைப்பீட விரிவுரையாளர்களும் கலைப்பீடாதிபதியும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ள வந்திருந்தனர். உபவேந்தருக்குப் பதிலாக அழைப்பை ஏற்று வந்திருந்த பல்கலைக்கழக பதிவாளர் தனது ஆரம்ப பேச்சில் 'ராக்கிங்' என்ற பகிடிவதை தொடர்பாகவும் அது சிரேஸ்ட, கனிஷ்ட மாணவர் மத்தியில் ஏற்படுத்தும் பரஸ்பர தோழமை பற்றியும் அதன் ஓர் அங்கமாக நிகழும் இப்படியான சோஷல் நிகழ்வு தொடர்பாகவும் தனது பேச்சை முடித்துக் கொண்டதை தொடர்ந்து கலைப்பீடாதிபதியும் தனது உரையை சுருக்கமாக முடித்துக் கொண்டார். தொடர்ந்து ஜுனியர்ஸ் மாணவர்களின் அறிமுகம் இடம்பெற்றது. ஒவ்வொரு மாணவர்களும் தம்மைப் பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்து கொண்டனர். அறிமுகத்தை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவித்தல் செய்யப்பட்டது.

சீனியர் மாணவர்களின் ஏற்பாட்டில் ஜுனியர் மாணவர்களுக்காக நடாத்தப்படும் குழு ரீதியான விளையாட்டுகளுக்கு ஜுனியர் மாணவர்கள் அழைக்கப்பட்டனர். அதில் ஜோடி சேர்த்து நடத்தப்படும் விளையாட்டிற்கு ரதனும் நிவேதாவும் உட்பட ஐந்து ஜோடிகள் அழைக்கப்பட்டனர்.

ஒவ்வொரு ஜோடிக்கும் இரண்டு 'ஸ்ரோ' கொடுக்கப்பட்டு அவர்களின் முன்னால் பெரிய 'சோடாப் போத்தல்களும்' வைக்கப்பட்டது. விளையாட்டு ஆரம்பிக்க ஜோடிகள் போத்தலிலுள்ள சோடாவை 'ஸ்ரோ' மூலம் உறிஞ்சிக் குடிக்க வேண்டும்... எந்த ஜோடி முதலில் குடித்து விடுகின்றதோ அந்த ஜோடிக்கு பரிசு வழங்கப்படும். போட்டி ஆரம்பமாகியது. ஐந்து ஜோடிகளும் போத்தலுக்குள் ஸ்ரோவை விட்டு உறிஞ்சத் தொடங்கினர். 'கமோன் நிவேதா, கமோன் ரதன்...' பவித்திராவும் சுகந்தியும் சத்தமாகக் கத்தத் தொடங்கினர். அவர்களைத் தொடர்ந்து அந்த ஜோடிகளின் பெயரைச் சொல்லி பலர் உற்சாகப்படுத்த தொடங்கினர். அந்தப் போத்தலிலுள்ள சோடா முழுவதையும் முதலில் உறிஞ்சிக் குடித்து முடித்து போட்டியை முடிவுறச் செய்தனர் நிவேதாவும் ரதனும். அதனை தொடர்ந்து இவ்வருடத்தின் வெற்றி ஜோடிகளாக ரதன் நிவேதா பெயர்கள் அறிவிக்கப்பட்டு ஒரு சிறிய பரிசுப் பொதி சீனியர்ஸ் மாணவர்களால் வழங்கப்பட்டது. அதனை வழங்க 'பைனாட்ஸ் டிபாட்மென்ட்' தலைவர் குருமூர்த்தியே அழைக்கப்பட்டார். அவர் சிரித்தபடியே அப்பரிசை நிவேதாவிடமும் ரதனிடமும் வழங்கி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். விளையாட்டு நிகழ்வுகளைத் தொடர்ந்து கிசுகிசுக்களை வைத்து தயாரிக்கப்பட்ட செய்தி வாசிக்கப்பட்டது. அச் செய்தியில் கூட ரதனதும் நிவேதாவினதும் பெயர்கள் தாராளமாகவே அடிபட்டது. தொடர்ந்து நடைபெற்ற சினிமாப் பாடல்கள் நிகழ்வில் ஒன்றிரண்டு பாடல்களை சீனியர்ஸ் மாணவர்கள் பாடியதை தொடர்ந்து அடுத்த பாடலைப் படிப்பதற்கு ரதன் அழைக்கப்பட்டான்.

மேவும்.. .. ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கிராமத்தவள்

அவர்கள் மன்னம்பேரியை
பாலியல் பலாத்காரம் செய்து
அவளை உயிருடன் புதைத்தார்கள்
நான் பேசவில்லை
ஏனெனில்
கிளர்ச்சி எழுச்சிபெற்றிருந்தது.

பின்னர் அவர்கள்
ககவத்த பெண்களிடம் வந்தார்கள்
நான் பேசவில்லை
ஏனெனில்
நான் கஹவத்தையைச் சேர்ந்தவளல்ல.

நுரிவத்த பெண்களிடம் வந்தார்கள்
நான் பேசவில்லை
ஏனெனில்
நான் நுரிவத்தவில் வாழவில்லை.



பின்னர் அவர்கள்
வடக்கின் மகளீரிடம் வந்தார்கள்
நான் பேசவில்லை
கிரு'ாந்தி குமாரசாமி,கோணேஸ்வரி,இசைப்பிரியா
இவர்கள் என் சகோதரிகளல்ல.

பின்னர் அவர்கள்
வேறு தோல் நிறம்கொண்ட
பெண்ணிடம் வந்தார்கள்
கூட்டாய் எட்டுப்பேர்
விக்ரோறியா அலெக்ஸ்சாண்டிராவை
பாலியல் பலாத்காரம் செய்தார்கள்
நான் பேசவில்லை
ஏனெனில்
அவள் வெளிநாட்டவள் என்பதால்.

அந்தக கோரக் கும்பல்
ரீட்டா ஜானை
பாலியல் பலாத்காரம் செய்தது
அவளது உடல்
பதினைந்துமுறை குத்தப்பட்டு
மொடேரா கடற்கரையில்
வீசப்பட்டது.
நான் பேசவில்லை
ஏனெனில்
அவள் ஒரு இந்தியப் பெண் என்பதால்.
அவள் மாலை வேளை
நகைகள் அணிந்து
கடற்கரையில் நடைப்பயிற்சி செய்து
வினையை தானே தேடிக்கொண்டாள்.

பின்னர் அவர்கள் விஜேராமவில்
பெண் ஒருவரை பலாத்காரம் செய்தார்கள்
நான் பேசவில்லை
ஏனெனில்
அவள் ஒரு விபச்சாரி என்பதால்.

பின்னரும் அவர்கள்
நூற்றுக்கணக்கான கன்னிகளை
பலாத்காரம் செய்தார்கள்
சம்பையின் மதுவுடன்
அக்குரசவிலும் மொனராகலையிலும்
கொண்டாடினார்கள்
நான் பேசவில்லை
ஏனெனில்
எனக்கு அரசியல்வாதிகளுக்கு பயம்.

பின்னர் அவர்கள்
லோகராணியை
பாலியல் பலாத்காரம் செய்து
புனித தலமொன்றில் நிர்வாணமாய்
உடலை வீசியெறிந்தார்கள்

கும்பலாய் அவர்கள்
சரண்யா செல்வராசாவை
பாலியல் பலாத்காரம் செய்தார்கள்
நான் பேசவில்லை.


இன்று அவர்கள்
வித்தியா சிவலோகநாதனை
பாலியல் பலாத்காரம் செய்தனர்
நான் பேசவில்லை
ஏனெனில்
அவள் தமிழிச்சி
புங்குடு தீவு எனும்
சிறு கிராமத்தவள்.

**சர்மிளா டளுவத்தே**
**(சிங்களத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது)**

# சுயம் சார்ந்த தெரிவும் மனங்களின் வீம்பும்

மனமே!
தொலைந்து போகும்
விந்தை உலகம்!
மதியை களவாடிய
அறிவீனங்கள்
உலக அங்கீகாரங்களுக்காக
அடித்து பிடித்து கொள்கிறது
இனம் இனத்தையே
தின்று சப்புக் கொட்டியபடி . . .
எங்கும் எதிலும்
சுயம் சார்ந்தே
வரையறுத்துக் கொள்ளும்
மனங்களின் வீம்புதான்
எளியோரை வருத்தி
வலியோர் இங்கே
மேன்மை அடைவதும்
உலகின்(ல்) இயல்பாயிற்று...!
இருப்போர்க்கே வாழ்வும்
உளதெனில்
இயலாதோர்க்கும்
இனியொரு உலகம் தேவைப்படும்
அதுவரை . . .
மானுடம் இங்கே
பிளவு பட்டுக் கொண்டே இருக்கும்!!

**ஏ.ஆர்.எம்.நதார்**
**சின்னாநகர்**



# தவி முரசு

## பேணப்படாத உரிமை



மனித உரிமைகளாம்
பேணப்பட வேணுமாம்
மண்ணில் கூட வாழமுடியா
பறிபோன உடமையாம்
மனிதன் கூட மண் ஆனான்
உரிமை கூட இழந்த நிலையில்
மனிதநேயம் நிலைக்குமா?
உலக சட்டம் நிலைக்குமா?
யார் கூறுவர் நியாய உரிமை
எங்கு பார்த்தாலும்
வரம்பு மீறிய பிணக்குகள்
எதை எடுத்தாலும்
வளமற்ற நிலைமைகள்
நியாயம் கேட்க துணிந்தால்
அடி, உதை, உயிர் சேதம் பல
யார் கூறுவர் நியாய உரிமை
எங்குள்ளது நீதி நியாயம்
கூற துணிந்தால் அச்சுறுத்தல், மோசடி
நாட்டில் வாழும் முறையே
சீர்கெட்டுப் போனது.
எங்கு தேடலாம்
யார் கூறுவர் நியாய உரிமை

— ரா.ஆஷா —
தலைவி, பெண்கள் வலையமைப்பு

# வீரத் தமிழன் எல்லாளன் பற்றிய சிறு குறிப்பு


திருகோணமலை மாவட்டத்திலுள்ள நான்கு பற்றுக்களில் மத்திய பற்றான தம்பலகாமத்திலிருந்து கிழக்கே எட்டு மைல் தூரத்திலுள்ளது ஆலங்கேணி என்னும் அருமையான கிராமம். ஒரு மணல் பிரதேசமாக இந்த ஊர் காணப்படுகிறது. "ஆலங்கேணி மணல்" என்பது இப்பிரதேசத்தில் மிகவும் பிரசித்தமான ஒரு விடயமாகும்.

தொழில் செய்ய முடியாத நிலப்பகுதி என்று கூடக் கூறலாம். ஆனால் பாட்டாளிகளான இவ்வூர் மக்கள் தங்களுக்கென ஒரு தொழிலை சிருஸ்டித்து ஓயாமல் உழைத்துத் தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொண்டது குறிப்பிடத் தக்கதாகும். இந்தக் கிராமத்தில் ஒரு பெரிய ஆலமரமும் அதனருகே தாமரைக்கேணியும் இருப்பதால் காரணப் பெயராக "ஆலங்கேணி" என்று பெயர் அமைந்ததாகக் கருதப்படுகிறது.

இங்கு ஏறக்குறைய எண்ணூறு குடும்பங்கள் (1997) வரை வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் தமிழர்கள். வடக்கே உள்ள கிண்ணியாவிலிருந்து வீதிகளில் கல்பரப்பி ஆலங்கேணி மணலை அடக்கி வடக்குத் தெற்காக வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஔவைப்பிராட்டியாரின் அறிவுரையைத் தமிழர்கள் கடைப்பிடிப்பவர்களல்லவா? அதனைக் கட்டியங் கூறுவதுபோல ஆலங்கேணியின் முகப்பில் ஒரு விநாயகர் ஆலயம் வழிபாட்டுத் தலமாக உள்ளது.

ஆலங்கேணி, தாமரைக்கேணி, ஈச்சந்தீவு என மூன்று பிரிவாக இந்தக் கிராமம் அமைந்துள்ளது.




ஆலங்கேணியின் பிரதான வீதியில் விநாயகர் அரசினர் தமிழ் மகா வித்தியாலயமும் ஈச்சந்தீவில் விபுலானந்தர் வித்தியாலயமும் அமைந்துள்ளன. மற்றும் உப அஞ்சல் நிலையம், கூட்டுறவுச் சங்கம், சனசமூகநிலையம் போன்ற பல அமைப்புகள் இருக்கின்றன.

ஆலங்கேணியைச் சுற்றிச் சூழ முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஊர்களே காணப்படுகின்றன. ஆலங்கேணிக்கு வடக்கே பெருந்தொகையாக முஸ்லிம் மக்கள் வாழும் கிண்ணியா பட்டினமும் கிழக்கே உப்பாறு தென்மேற்குத்திசையில் பூவரசந்தீவு, நெடுந்தீவு, சமாவைத்த தீவு மேற்கே முனையிற்சேனை, கச்சைகொடித்தீவு, காக்காமுனை, சூரங்கல் போன்ற இடங்கள் காணப்படுகின்றன.

ஆலங்கேணிக்கு தென்மேற்கே ஏழு மைல் தூரத்தில் தமிழ்ச் சைவர்கள் அடர்த்தியாக வாழ்ந்த திருநகரில் "பாண்டியனூற்றுச் சிவாலயம்" அதற்கண்மையில் "பாவநாசத் தீர்த்தம்" போன்றவைகள் இன்று அழிந்த நிலையில் காணப்படுகின்றன. பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்புடைய மாரி வயல்களை தன்னகத்தே கொண்ட இந்தத் திருநகர் இன்று திரிபடைந்து "தீனேரி" என அழைக்கப்படுகிறது. அந்த திருநகர் அழிந்தபோது அங்கு வாழ்ந்தவர்களில் ஒரு சிறு தொகையினரே ஆலங்கேணியில் குடியேறி வாழ்ந்து வருவதாக ஐதிகம்.

ஆலங்கேணியில் வாழும் ஆண்கள் ஆஜானுபாகுவாக நல்ல திடகாத்திரமான தேக அமைப்பு உடையவர்களாகவும் காணப்படகின்றனர். பெண்கள் மெல்லியராயினும் சுறு சுறுப்புடையவர்கள். தங்கள் வாழ்விடம் கடல் நீரால் சூழப்பட்டு பயிரிட்டுத் தொழில் செய்ய வாய்ப்பற்றதாக இருக்கிறதே என்று இம்மக்கள் சோம்பியிராமல் "முயற்சி திருவினையாக்கும்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் பொய்யாமொழியைக் கருத்தில் கொண்டு ஆலங்கேணி மக்கள் தமக்கென ஒரு தொழிலை சிருஷ்டித்துக் கொண்டனர்.

தொடரும்..

**தம்பலகாமம் க.வேலாயுதம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் நீதித்துறையின் சுயாதீனம்

தேத்தாமரத்தான்




சனநாயகத்தின் மிகப்பெரும் முதுசமாக விளங்குவது நீதித்துறையின் சுயாதீனமேயாகும். ஒரு நாட்டின் நல்லாட்சி என்பது நீதித்துறையின் சுயாதீனம் என்ற காட்டி மூலமே அளவிடப்படுகிறது. ஆனால் இலங்கையில் நடப்பது என்ன............

அண்மையில் இலங்கையின் பாராளுமன்றில் நிறைவேற்றபட்ட பத்தொன்பதாம் திருத்த சட்டத்தின் விதப்புரைகளில் ஒன்றில் நீதித்துறைக்கான சுயாதீனக்குழுக்கள் உருவாக்கபடுதலும் ஒன்று. ஆனால் மாறிக்கொண்டுள்ள சூழலில் மகிந்தவுக்கான வாய்ப்புக்கள் பெருகி வரும் நிலையில் இலங்கையின் நீதித்துறையின் எதிர்காலம் என்பது ஒரு நிச்சயமற்ற நிலையினை நோக்கியே நகர்வதாக கூற முடியும்.

இலங்கையின் நீதித்துறையானது இரண்டு வேறுபட்ட காட்சிகளை இந்த நாட்களில் தரிசிக்க வேண்டியுள்ளது. இலங்கையின் தென்பகுதியில் அப்பட்டமாய் ஊழல் புரிந்த மோசடி கும்பல்கள் ஒன்றில் ஆஸ்பத்திரி கட்டிலில் இருந்தபடி ஐந்து நட்சத்திர ஹோட்டலின் சுகங்களை அனுபவிக்கிறார்கள் அல்லது தங்களை கைது செய்வதற்கு எதிராக தடை மனு வாங்கி கொள்கிறார்கள். வட பகுதியில் ஒரு அப்பாவி பெண்ணின் மரணத்துக்கு நீதி கேட்டு மக்கள் வீதிகளில் இறங்கி இருக்கின்றனர்.

இலங்கையின் நீதி துறையின் சுயாதீனமும் மகாவம்சத்துக்குள் புகுந்து விட்டதாகவே நாங்கள் கருத வேண்டியுள்ளது. காரணம் முன்னாள் பாதுகாப்பு செயலரின் வழக்குகள் சம்பந்தமான நீதியரசர் குழாமில் இருந்து ஒரு நீதிபதி வெளியேறி உள்ளார். அடுத்தது இலஞ்ச ஊழல் நிறுவக பணிப்பாளரின் பதவி விலகல். இந்த பதவி விலகல்களின் பின்னால் இரண்டே இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும். ஒன்று அச்சுறுத்தல் அடுத்தது நாட்டின் தேசபுத்திரர்களுக்கு தண்டனை விதித்த கடும்பழி தங்கள் மேல் விழக்கூடாது எனும் பௌத்த விருப்புவாதம். இவ்வாறான நிலைமைகளின் கீழ் இலங்கையில் நீதியின் விலை என்னவென்று கேட்க தோணுகிறது.

கடந்த கால வரலாறுகளை நோக்கும் போது இலங்கையின் நீதித்துறை வரலாறு எவ்வளவு கறை படிந்துள்ளது என்பதற்கு இரண்டு உதாரணங்களை நாங்கள் நோக்க முடியும். முதலாவதாக இலங்கையின் வட-கிழக்கு மாகாண பிரிப்பு. மற்றையது ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆட்சி பறிப்பு.

இரண்டு தீர்ப்புகளுக்கும் அடிப்படை தமிழர்களின் கையில் ஒன்றும் போக கூடாது என்ற நோக்கே. இந்த வழக்குகளின் பின்னால் இருந்த அரசியல் பற்றி அப்போதைய நீதியரசர் சரத் என் சில்வா அவர்கள் பின்னாட்களில் தெளிவுபடுத்தி-யிருந்தார். நாடு பிளவு படக்கூடாது என்ற நன்நோக்கில் தான் ஆற்றிய நல்ல காரியங்கள் இவை என்று சான்றுகூட வழங்கியிருந்தார்.

தலதா மாளிகையின் முன்னாள் தியவதனே நிலமே அவர்கள் இலஞ்ச ஊழல் மோசடிகளில் அண்மையில் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருந்தார். உண்மையில் நெற்றி கண்ணை திறப்பினும் குற்றம் குற்றமே. ஆனால் இதனை பௌத்தத்துக்கு எதிரான தாக்குதலாக சிலர் சித்தரிக்க முயல்கின்றனர். இலங்கையை பொறுத்தவரை ஒருவர் எவ்வளவு கொலைகள், கொள்ளைகள், பாலியல் துஷ்பிரயோகங்களையும் மேற்கொள்ள முடியும். ஆனால் அவர் பௌத்த சிங்களவராயின் அவரும் ஒரு புனிதரே.

இன்று வட பகுதியில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகி உயிரிழந்த வித்தியா என்ற மாணவியின் வழக்கில் காட்டப்படும் அசமந்த போக்குகளை கண்டித்து நீதி கேட்டு மக்கள் போராடி வருகின்றனர். நீதித்துறையின் பிடியில் இருந்து குற்றவாளிகளை தப்பிக்க செய்யும் ஒரு முயற்சி நடந்து கொண்டுள்ளது. வித்தியா ஒரு தமிழ் பெண். எனவே இங்கு அவருக்கான நீதி என்பது முயற்கொம்பே. இதற்கு சில சான்றுகளை முன் வைக்க விரும்புகிறேன்.

1. கடந்த 2008 காலப்பகுதில் பெரும்பான்மை வைத்தியர் ஒருவரினால் தீவக பகுதியில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொல்லப்பட்டதாக கருதப்படும் குடும்ப நல உத்தியோகத்தரின் வழக்கின் முடிவு என்ன....

2. கடந்த மாதம் வன்னியின் கிளிநொச்சி பகுதியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொல்லப்பட்ட மாணவியின் பின்னால் உள்ள கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனரா...

3. திருமலை ஐந்து மாணவர் கொலை வழக்கின் தற்போதைய நிலை என்ன.............

4. பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வாடும் தமிழ் இளைஞர்களின் எதிர்காலம் என்ன...

ஆக வித்தியாவும் பத்தோடு பதினொன்றாவாள் இன்னும் சில நாட்களில்.

வித்தியாவுக்கான நீதி கோரல் வட-கிழக்குக்கு மட்டுமே மட்டுப்படுதப் பட்டதாய் உள்ளது. தென்னிலங்கை புத்திஜீவிகளும் மக்களும் இந்த விடயத்தில் மௌனமாயே உள்ளனர். இறுதி யுத்தத்தில் கொத்தாக தமிழர் மடிந்த போது வெடி கொளுத்தி கொண்டாடிய ஒரு சமூகத்திடம் இருந்து நாங்கள் எதனைத்தான் எதிர்பார்க்க முடியும்.

இலங்கையின் பெரும்பான்மை சமூகத்துக்கு தேவை மகாவம்சமும் அதை கட்டி காக்கும் ஒரு அரசனுமே. இங்கு நீதி என்பதெலாம் வெறும் கோஷமே. எதிர்வரும் தேர்தல் எனது இந்த கூற்றை மெய்ப்பிக்கும்.

# இனவாதம் பேசுவோரே!!

திருகோணமலையான்

இனவாதம் பேசினால் தான் இலகுவில் ஆட்சியில் அமரலாம் என்ற ஏகாதிபத்திய சிந்தனைப் போக்கு உள்ளவர்களுக்கு எதிவரும் பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு த்குந்த பாடம் படிப்பிக்க வேண்டும்.

தற்போதைய மைத்திரிபால சிறிசேனவின் அரசு ஒரு புதிய சிந்தனைப் பார்வையில் சகல மக்களும் நாடும் பல்வேறு துறைகளிலும் ஏனைய வளர்முக நாடுகளுடன் போட்டிபோடும் அளவிற்கு அபிவிருத்தி காணவேண்டும் என்ற உயர்நோக்கில் காலடி எடுத்து வைத்துள்ளது.

தற்போதைய ஆட்சியின் ஆரம்பமே ஆன்மீக பெரியாரின் நல்வரவோடு அவரது ஆசியுடன் அமைந்தால் இந்நாடும் மக்களும் இவ்வளவு காலமாக அனுபவித்து வரும் துன்ப துயரங்கள் துன்மார்க்கங்கள் அகன்று உரிமையோடு வாழ வேண்டிய காலம் மலர்ந்துள்ளது. ஆனால் இதை பொறுக்க முடியாத தோல்வி கண்ட சக்திகள் மீண்டும் மக்களை இனவாத சேற்றுக்குள் தள்ளி ஆட்சிபீடம் ஏறப்பார்க்கி-ன்றார்கள். ஈழத்தமிழர் பிரச்சினையை வைத்து பிழைப்பு நடத்தும் கூட்டத்தினரும் உள்ளார்கள்.

யுத்தத்தை முடித்து வைத்தோம் என்பதற்காகவோ அல்லது அமைதி ஏற்பட்டு விட்டது என்பதற்காகவோ நாட்டையும் மக்களையும் சுரண்டி வாழ்ந்த குடும்ப ஆட்சியை மீண்டும் ஆட்சியில் நிலை நிறுத்த மக்கள் மடையர்கள் அல்ல.

இதே போல தமிழ் மக்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்கும் ஒரு நீதியான, நியாயமான தீர்வைக் காண ஆரம்ப அறிகுறியாக சில திட்டங்களை ஆங்காங்கே செயல்படுத்தி வருகின்றது இந்த நல்லாட்சி.

நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் கொழும்பில் குவிந்திருக்கும் அதிகாரங்களை பரவலாக்கித் தரும்படி தமிழ் மக்கள் கேட்கின்றார்கள். இதைப் புரியாமல் கிராமப் புற பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் இவ்வளவு காலமும் இருந்த ஆட்சித் தலைமைகள் நாட்டைப் பிரிக்கப் போகின்றார்கள் என்று பொய்ப் பிரசாரம் செய்து வந்ததன் விளைவே இவ்வளவு காலமும் ஏற்பட்ட அழிவுகளுக்கு மூல காரணம்.

தமிழ் மக்கள் மத்தியிலும் ஒரு சிலர் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு எதிராக புதுப் புது வியூகங்களை வகுத்து வருகின்றமையை இட்டு தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக இருந்து செயல்பட வேண்டியது அசியமானதாகும். தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் விசுவாசம் உள்ளவர்களாக இருக்கின்றனர் என்பதற்கு மூல காரணம் பிரதமர் பதவி மற்றும் சில அமைச்சு மற்று ளிநாட்டு தூதுவர் பதவிகள் அர்களைத் தேடி வந்தும் எமக்குப் பதவிகள் முக்கியமல்ல எமது மக்கள் எம் நாட்டில் சிங்கள மக்களைப் போல சமவுரிமையுடன் வாழ வேண்டும் என்பதே.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராக செயற்படுபவர்கள் எல்லாம் புதுப்புது கட்சிகளை உருவாக்கி பொய் வாக்குறுதிகளை வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளை பிரித்து தமிழ் பிரதிநிதித்துத்தை சிதறடிக்க முன்வருபவர்களுக்கு தமிழ் மக்கள் தான் தீர்வு காண வேண்டும்.

புதுப்புது பெயர்களில் தமிழ் கட்சிகளை உருவாக்கி தமிழ் மக்களிடம் வாக்கு கேட்பவர்கள் எல்லாம் யார்? தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமைகளும் கொடுக்கக் கூடாது என நினைக்கும் இனவாதம் பேசி ஆட்சிப்பீடம் ஏற நினைக்கும் குடும்ப ஆட்சியாளர்களின் கையாட்களே.

பௌத்த சிங்கள மக்கள் நல்லவர்கள் ஆனால் அவர்களைக் கெடுத்தவர்கள் ஏகாதிபத்திய சிந்தனை உள்ள ஆளும் தலைமைகளே. இதற்குத் துணைபோகும் நம்மவர்கள் ஒரு சிலரும் உள்ளார்கள்.

தென்னிலங்கையில் சென்ற ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த சில சக்திகள் மீண்டும் இனவாதத்தை தூண்டி பல பேரணிகளையும் கூட்டங்களையும் அரசுக்கு எதிராக முன்வைத்து வருகின்றனர். மக்களை பட்டினி போட்டு அம்மக்களின் வரிப்பணத்தில் குடும்ப ஆட்சி நடத்தியவர்கள் அவர்களுக்கு துணை போனவர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்ள ஒரே வழி



இனவாத அரசியல் ஒன்றே. சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் இணைக்கும் முகமாக இந்நல்லாட்சியின் சனாதிபதி பல திட்டங்களின் ஊடாக நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்பது எம்தமிழ் தலைமைகளின் கருத்தாக அமைந்துள்ளது.

சிங்கள பௌத்த மக்களுடன் இணைந்து இருந்தால் மாத்திரமே சாந்தி மற்றும் எமது உரிமைகள் எமக்குக் கிடைக்கும் வாய்ப்புள்ளதாக (நடந்த அனைத்தையும் மறந்து) எமது தலைமைகள் எண்ணுவதனாலேயே புதிய சனாதிபதியுடன் கூட்டு சேர்ந்து அவரது திட்டங்களுக்கு கைகொடுத்து வருகின்றனர்.

தற்போதைய சனாதிபதி தானொரு உண்மையான பௌத்தன் என்பதற்கேற்பவே செயல்பட்டு வருகின்றார் என்பது கண்கூடு.

யுத்தம் முடிவடைந்து விட்டது. ஆனால் யுத்தத்திற்கு காரணமான சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டால் தான் நாடும் மக்களும் நிரந்தர அமைதியுடன் சமாதானமாக வாழமுடியும். ஆகவே தற்போதைய சனாதிபதியின் கையை பலப்புடுத்த வேண்டியது சகல நாட்டு மக்களினதும் தலையாய கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

MOBILE

## தீயின் நடனம்



இசைக்கு ஏற்றாற்போல் பற்றி எரியும் ஸ்பீக்கர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கணனியில் இசைக்கு ஏற்றபடி மாறும் பிம்பங்கள் ஏற்கனவே பழக்கமான ஒன்று.

ஆனால் 'சவுண்ட் டார்ச்' எனப்படும் நவீன ஸ்பீக்கரில் கிடைக்கும் அனுபவம் புதுமையாக இருக்கிறது. இசைக்கு தகுந்தாற்போல் ஒரு தாளலயத்தோடு எரியும் ஸ்பீக்கரின் அழகு இசையை மறந்துவிட்டு அந்த தீயின் நடனத்தை ரசிக்க வைக்கிறது.

## தானியங்கிக் கார் - மீண்டும் வெள்ளோட்டம்



கூகுள் நிறுவனம் சாரதிகள் இன்றிய தானியங்கிக் கார்களை வடிவமைத்துள்ளமை அறிந்ததே. மீண்டும் பொது சாலைகளில் பரிசோதனைக்கு உட்படுத்த கூகுள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன்படி இந்த கோடைகாலப் பகுதியில் கலிபோர்னியாவில் குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. இதேவேளை விபத்துக்களினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காக இக்கார்களின் வேகம் மணித்தியால-த்திற்கு 25 மைல்கள் ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய ஸ்மார்ட் போன்

HTC One M9+ எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசி 5.2 அங்குல அளவு, 2560 x 1440 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது 2.2GHz வேகத்தில் செயல்படவல்ல Octa Core MediaTek MT6795T Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினை கொண்டது.

இவற்றுடன் 20 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 4 மெகா-பிக்சல்களை உடைய வீடியோ அழைப்பினை ஏற்படுத்துவதற்கான கமெரா, 2840 mAh மின்கலம் என்பனவும் தரப்பட்டுள்ளன.



INFOMATION TECHNOLOGY

OTHER

## ரோபோக்கள் குறித்த சுவாரஸ்ய தகவல்கள்

எந்திர அறிவியல் (Robotics) என்பது mechanical engineering, electrical engineering மற்றும் computer science ஆகிய பொறியியல் பகுதியால் ரோபோக்களுக்கு வடிவமைப்பு, கட்டுமானம், செயல்பாடு மற்றும் பயன்பாடு ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

மனிதனுடைய வேலைகளில் தற்போது ரோபோக்களின் பங்கு அதிகமாக இருப்பதால் இது தொடர்பான ஆராய்ச்சிகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. இவை அனைத்தும் மனிதனின் செயல்பாடுகளை கொண்டதாகவே தயாரிக்கப்படுகிறது.

பேரழிவின் போது மனிதர்களை மீட்பது, தீவிரவாதிகளின் சதித் திட்டத்தை முறியடிப்பது, வெடிகுண்டுகளை செயலிழக்க வைப்பது, உளவு பார்ப்பது போன்ற சேவைகள் முதல் மனிதர்களுக்கு உதவியாக வீட்டு வேலை செய்வது வரை அனைத்திற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்படுகிறது.

"ரோபட்" என்ற வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தியவர் செக் குடியரசின் Karel Capek என்ற பிரபல எழுத்தாளர். இது 1920ம் ஆண்டு வெளியானது குறிப்பிடத்தக்கது.

Robotics வளர்ச்சி காரணமாக பல்வேறு வகைப்பட்ட ரோபோக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. TALON military robots, industrial robots, robot snakes, Capuchin Climbing Robot, sailboat robot, humanoid robot, educational robot என தற்போது கலக்கிக் கொண்டுள்ளது.

Power source:
Robot இயக்கத்திற்கு முக்கியமானதரக இருக்கிறது. compressed gases, Solar power, hydraulics, flywheel energy storage இவை மூலம் ரோபட் தனக்கு தேவையான மின்சக்தியை எடுத்துக் கொள்கிறது.

Actuation:
ரோபோட்டுகளுக்கு தசைப் போன்ற அமைப்பாகும். இது தனக்கு கொடுக்கப்பட்ட மின்சக்தியை இயக்கமாக மாற்றப் பயன்படுகிறது.

Electric motors:
ரோபோக்களின் இயக்கத்தில் ஒவ்வொரு சிறிய பகுதிகளையும் அசைவிற்குள்ளாக்க இது பயன்படுகிறது.

Linear actuators:
இவற்றின் செயல்பாட்டில் இது உதவுகிறது. இது industrial robots போன்றவற்றில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. compressed air கொண்டு hydraulic actuator மூலம் ரோபோ இயங்க ஆரம்பிக்கிறது.


Air muscles:
சில டியூப்கள் மூலம் காற்று செலுத்தப்பட்டு ரோபோக்களுக்கு உந்துதல் சக்தியை கொடுப்பதாகும். Pneumatic artificial muscles சில ரோபோக்களில் பயன்படுத்தப்படுகிறது.

Muscle wire:
சிக்கலான பாகங்களில் இணைக்கப்பட்டுள்ள பல இயங்கு பாகங்களுக்கு இதன் மூலம் தேவையான சக்தி வழங்கப்படுகிறது. இவை எப்படி பாதிப்பிற்குள்ளானாலும் மீண்டும் தனது பழைய நிலைக்கு வந்துவிடும்.

Electroactive polymers:
Humanoid robots களில் அதன் முகத்தில் காட்டப்படும் ஒவ்வொரு அசைவும் இதன் மூலம் செய்யப்படுகிறது.

Sensing:
இது தான் ரோபோக்களின் துல்லியமான செயல்பாட்டிற்கு உதவுகிறது. அதாவது கொடுக்கப்படும் தகவல்களை அப்படியே எடுத்துக் கொண்டு ரோபோக்கள் ஒரு செயலை செய்ய காரணமாக இந்த Sensors-கள் இருக்கின்றன.

இவை மட்டுமல்லாமல் எண்ணற்ற நுண்ணிய பாகங்கள் ரோபோக்களின் இயக்கத்திற்கு பெரிதும் உதவியாய் இருக்கின்றன. இவை எதிர்காலத்தில் மனிதனையே மிஞ்சும் அளவிற்கு வந்தால் கூட ஆச்சரியம் இல்லை என சில தினங்களுக்கு முன்பு விஞ்ஞானி ஸ்டீவன் ஹவ்கிங் கூறியது குறிப்பிடத்தக்கது.



# குறுக்கெழுத்து புதிர் 061

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | | ■ | ■ | 2 | | ண | 16 |
| | ம் | ■ | ■ | ■ | | ■ | ■ | |
| 3 | | | 17 | | 4 | | 20 | |
| 5 | 18 க | 6 | | | 7 | | | ம் |
| ன் | | | 8 | | 19 கா | | 9 | 21 |
| 24 | | | | ■ | ஞ் | 22 | | |
| | 10 | | 23 | ■ | 11 | | | |
| ப | | ■ | 12 மெ | | . | | ■ | |
| | ம் | 13 கா | | | 14 டி | | ■ | ■ |

### இடமிருந்து வலமாக

1. போர்
2. முழு நிலவைக் குறிப்பது
3. முலையூட்டிகளில் ஒன்று
4. ஆண்களுக்கு இது ஏற்படுவதால் தான் பெண்கள் வன்புணர்வுக்கு உள்ளாகின்றனர் - திரும்பியுள்ளது
5. ஓரிடத்தில் காணப்படும் பதற்றநிலை இதனால் உருவாகும் - குழம்பியுள்ளது
6. இடம் - எதிர்சொல்
7. அகதிகள் சிலர் இந்தியாவிடம் ............. அடைந்தனர்
8. அவுஸ்திரேலியாவில் அதிகம் காணப்படும் விலங்கினம்
9. காற்றடிக்கப் பயன்படுவதை இவ்வாறும் கூறுவர் - திரும்பியுள்ளது
10. நடப்பதற்குத் தேவை
11. பரம்பரை
12. சிவகார்த்திகேயனின் ஓர் படம்
13. காற்றில் ஏற்றவது
14. மின்சாரம் குறைவாக வருவதின் பேச்சு தமிழ்

### மேலிருந்து கீழாக

1. இரவு வானில் தெரியும் ஓர் நட்சத்திரம்
2. பேரினவாதிகளின் மதம்
6. தாராளமாக தானத்தில் ஈடுபடுபவன்
9. கழிவகற்றும் உடலுறுப்பொன்று
10. நடப்பதற்கு தேவையானது
15. பிரபல்யமான ஆங்கில பேய்ப்படம்
16. எஞ்சியது
17. நாரதர் பரிவது
18. வாய் கட்டி பூசை செய்யப்படும் கோவில்
19. நகைச்சுவை மிகுந்த பேய்ப்படம்
20. நலம் விசாரிப்பதை குறிக்கும் - குழம்பியுள்ளது
21. மனைவி என்பவள் ஓர் ............ ஆவாள்
22. யானையிடமிருந்து பெறப்படுவது
23. இதன் மேலும் உறங்குவர் - குழம்பியுள்ளது
24. துயில் உரியப்பட்டவள்

**விடையை அனுப்ப வேண்டிய முகவரி :**

முடிவுத்திகதி : 28.05.2015

மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## புதிர் 060 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 16 ரா | 17 வ | ண | ன் | ■ | 2 கா | ம் | 18 பு |
| டி | 3 க | ங் | கா | ரு | ■ | ரை | ■ | ன் |
| ய | 4 வே | ள | தா | ம் | ■ | 5 க் | 19 கு | 20 நோ |
| ப் | ந் | ம் | 6 வி | 21 சி | றி | 7 கா | சு | ர் |
| 8 ப | தி | 9 கா | டு | 22 க் | ■ | ல் | ம் | 23 வே |
| ம் | ரா | ■ | க | 10 கு | று | 24 ம் | 25 பு | ங் |
| ■ | ■ | 11 ப | தை | 12 தா | ம் | ன | க | 13 கை |
| 14 தா | ம | ரை | ■ | ■ | ■ | க | ழ் | ■ |
| 15 லி | ய | னா | டோ | டா | வி | ன் | சி | ■ |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**


செல்வி. பெரில் மத்தியூஸ்.
4ம் குறுக்குத்தெரு, திருகோணமலை

திரு. கே. பாலச்சந்தர்
துவரங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்
## இயக்குனர் ஆனந்தின் விஜய் ஆண்டனி, சுஷ்மா ஆகியோர் நடிக்கும் இந்தியா பாகிஸ்தான்



விஜய் ஆண்டனி ஒரு வக்கீல், படத்தின் முதல் காட்சியிலேயே ஒரு DVD கடையில் ஹீரோயினை பார்க்க, பிறகு என்ன? 100 வருட தமிழ் சினிமாவின் லாஜிக் தான். பார்த்தவுடன் காதல், பின் சோலோ டுயட். தன் ஆபிஸை வைக்க ஒரு நல்ல வீடு தேட, ஜெகன் வீட்டு ப்ரோக்கராக வந்து ஒரு வீட்டை விஜய் ஆண்டனிக்கு பிடித்து கொடுக்கிறார். இதே வீட்டை ஹீரோயின் சுஷ்மா ராஜும் பார்க்க வர, இரண்டு பேரும் வேறு வேறு தொழில் என்றால் சேர்ந்து இருக்கிறோம் என்று சம்மதம் தெரிவிக்கின்றனர். ஆனால், இரண்டு பேருமே வக்கீல் என்பதை மறைக்கிறார்கள் ப்ரோக்கர்கள்.

இதை அறிந்து சந்தானத்திற்கு, விஜய் ஆண்டனி போன் செய்ய.. அவர் போனை ஆப் செய்ய, இவர்களாகவே யாருக்கு முதல் வழக்கு வருகிறதோ, அவர்கள் தான் இந்த வீட்டில் இருக்க வேண்டும் என்று முடிவு செய்கின்றனர். அப்போது தான் ஜெகன் மூலமாக, பசுபதி, எம்.எஸ்.பாஸ்கர் நில வழக்கு ஒன்று விஜய் ஆண்டனி, சுஷ்மாக்கு வர பின் இந்த வழக்கில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கு தான் வீடு என்று போட்டி மாறுகின்றது. இதற்கிடையில் இவர்களின் ஈகோ வழக்கம் போல காதலாக மாறி, பின் மோதலில் இடைவேளை வருகிறது.



படத்தின் முதல் காட்சியிலேயே விஜய் ஆண்டனியும், சுஷ்மாவும் காதலுக்கு மரியாதை சீடி ஒன்றை வாங்குகிறார்கள். ஆனால், பிரச்சனையே இங்கு தான், இன்ஸ்பெக்டர் ஒருவர் போலி என்கவுண்டர் செய்ததை DVD போட்டு, இந்த காதலுக்கு மரியாதை DVDயில் மறைத்து வைப்பார் ஒரு பத்திரிக்கையாளர். இதை அறிந்த போலிஸ் ஆபிஸர் சுஷ்மாவை பின்தொடர, பசுபதி மகனையும், எம்.எஸ்.பாஸ்கர் மகளையும் கடத்தி, அந்த DVDயை தரச்சொல்லி மிரட்டுகிறார்.

இந்த பிரச்சனைக்கெல்லாம் ஒரு வக்கீலான நம்ம ஹீரோ எப்படி முடிவு கட்டுகிறார் என்பதே மீதிக்கதை.

இயக்குனர் ஆனந்த் அனைவரையும் வயிறு குலுங்க சிரிக்க வைத்து விட வேண்டும் என்று முடிவோடு தான் இறங்கியிருக்கிறார் போல, படம் ஆரம்பித்தது முதல் சிரிப்பு சரவெடி தான். இசையமைப்பாளரே ஹீரோ என்பதால் நன்றாகவே தீனா தேவராஜன் அவர்களை வேலை வாங்கியிருக்கிறார். ஹீரோயினுடைய நடிப்பு நன்றாகவே உள்ளது. தேவையில்லாத இடத்தில் வரும் ஒரு சில பாடல் வருகின்றது.

மொத்தத்தில் இந்தியா-பாகிஸ்தான் மேட்ச் என்றாலே நகத்தை கடித்து கொண்டு தான் பார்ப்போம், ஆனால், இந்த மேட்சை ஜாலியாக சிரித்து கொண்டே பார்க்கலாம்.

## தோல்வியில் அனுஷ்கா



கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒரு விழாவில் அனுஷ்கா, என் வாழ்வில் ஒருவர் இருக்கிறார், நேரம்கூடி வந்தால் எல்லோரிடமும் சொல்கிறேன் என்றார். ஆனால் தற்போது ஒரு விழாவில் கல்யாணம் பற்றி கேட்கையில், எனக்கு ஏற்றார் போல் நண்பரை இன்னும் நான் பார்க்கவில்லை என்று ஊடகங்க-ளிடம் மறைக்கிறார். இதனால் இவருக்கு காதல் தோல்வி ஏற்பட்டதாக கிசுகிசுக்கப்படுகிறது.

## “அவந்திக்கா” தமன்னா

ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமன்னாவின் “அவந்திகா” போஸ்டரை வெளியிட்டுள்ளது படக் குழு. பாகுபாலி படத்தில் நடித்து வரும் அனைவரின் படத்தையும் ஒவ்வொன்றாக வெளியிட்ட இயக்குனர் தற்போது தமன்னாவின் ஒரு புகைப்படத்தை வெளியிட்டு புண்ணியத்தைக் கட்டிக் கொண்டுள்ளார்.

**ரோஷன் அன்ட்ரியுஸின் இயக்கத்தில் வெளியான “36 வயதினிலே” திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இதழில்......**



## நயன் இரகசியத் திருமணம்



த்ரிஷா திருமண முறிவில் ஆரம்பித்து, நயன்தாரா ரகசிய திருமணம் வரை வாந்திகள் கலை கட்டியது. இதில் நயன்தாரா, இயக்குனர் விக்னேஷ் சிவனை திருமணம் செய்து கொண்டார் என்ற செய்தி பெரிய சர்ச்சையை கிளப்ப, பின் அவர்களே அதை மறுத்தனர். ஆனால், கண்டிப்பாக இவர்களுக்கு காதல் தான் என்று ஒரு தரப்பு சொல்கின்றது. நயன்தாரா இனி தெலுங்கு படத்தின் தான் முழு கவனமும் செலுத்த போகிறாராம் எனவும் தெரியவருகின்றது.

## எமி என்றால் பிரியாணி

மதராசபட்டிணம் படத்தில் நாயகியாக அறிமுகமாகிய எமி ஜாக்சன் ஐ பட வெற்றிக்குப் பின் தமிழில் தொடர்ந்து நடித்து வருகின்றார்.

இந்திய கலாச்சாரமும், உணவுப் பழக்கமும் பிடித்துப் போய்விட்ட அவருக்கு பிரியாணி என்றால் கொள்ளை பிரியமாம். சாப்பிட்டு கொண்டே இருப்பாராம். அதனால் இப்போ கெத்து படப்பிடிப்பில் அரை செல்லமாக பிரியாணி என்றே அழைக்கின்றனராம்.

அவ்வாறெனின் இனி எமி நடிக்கும் படங்களில் பிரியாணிக்கென்று தனி பட்ஜெட் ஒதுக்க வேண்டுமோ என இயக்குனர்கள் கவலைப்படுகின்றனராம்.



## சமூக எதிர்ப்பில் தனுஷ்

டீஸர் முழுவதுமே தனுஷ் சிகரெட் பிடித்து வருவது போல் காட்சிகள் அமைந்திருந்தது. இதற்கு முன் தனுஷின் வேலையில்லா பட்டதாரி படத்தின் போஸ்டரில் புகைப்பது போல் வடிவமைத்திருந்ததால் பலத்த எதிர்ப்புகள் கிளம்பின. எதிர்ப்புகள் இருந்தும் மரியான், அநேகன், வேலையில்லா பட்டதாரி போன்று தனது அடுத்தடுத்த படங்களில் தொடர்ந்து புகை பிடிக்கும் காட்சிகளை வைப்பது ஏன் என்று சமூக ஆர்வலர்கள் பலரும் தேசிய விருது பெற்ற நடிகருக்கு சமூகப் பொறுப்பு சற்றும் இல்லையா? கேள்வி எழுப்பி வருகின்றனர்.

## கேங்ஸ்டராகும் ரஜினி

கோலிவுட்டின் ஹாட் நியூஸ் இப்-போதைக்கு ரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடிக்க இருக்கும் படம் தான். தற்போது மலேசியா பின்னணியில் கேங்ஸ்டராக ரஜினி நடிக்க இருப்பதாக தகவல்கள் கசிந்து-ள்ளன. இதற்கான லோகேஷன் செலக்ஷனில் ரஞ்சித் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. எனினும் அதிகாரப் பூர்வ அறிவிப்புகள் ஏதும் இன்னமும் வெளியாகவில்லை.

## தற்கொலை செய்வேன்

செம்மரக் கடத்தல் வழக்கிலிருந்து என்னை விடுதலை செய்யாவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன் என்று நடிகை நீத்து அகர்வால் மிரட்டியுள்ளார். இவ்வழக்கில் தமிழர்கள் 20பேர் ஆந்திர காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கவர்ச்சியில் குதிக்கும் காஜல்



தனுசுடன் 'மாரி' மற்றும் விஷால் ஜோடியாக பாயும்புலி படத்தில் நடித்துக் கொண்டு இருக்கிறார் காஜல் அகர்வால். அவர் ஒரு பேட்டியில் கூறும்போது, ரசிகர்கள் நடிகைகளை கவர்ச்சியாக பார்க்கவே ஆசைப்படுகிறார்கள். ஆகையால் கவர்ச்சியாக நடிக்க முடிவு செய்து விட்டேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 54

# பாலியல் வல்லுறவு என்கின்ற சாபக்கேடு

(வி.என்.சந்திரகாந்தி)






அண்மைக்காலத்தில் அதிகரித்துக் காணப்படும் குற்றச்செயல்களாக போதைப்பொருள் ,வியாபாரமும் பாலியல் வல்லுறவும் அவதானிக்கப்படுகின்றன. போதைப்பொருள் பாவனை பெரும்பாலும் அவரவர் இஷ்டத்தை முன்னிட்டதாக இருந்தே தீங்கை உண்டுபண்ணுகின்றது. ஆனால் பாலியல் வல்லுறவு என்பது நூறு வீதம் ஒரு பெண்ணின் இஷ்டத்திற்கு எதிர்மாறாக உள்ளது. ஒரு பெண்ணின் உடலை சீரழித்து உள்ளத்தை சுக்குநூறாக்கி ஈற்றில் குற்றவாளிகள் தாம் சட்டத்திலிருந்து தப்புவதற்காக அவளது உயிரையும் மாய்த்துவிடும் நன்றி உணர்வினை என்னவென்பது? இந்தக் கொடுமைக்கான தண்டனையை ஆயுட்கால சிறைவாசம் அல்ல மரண தண்டனை கூட ஈடுசெய்ய மாட்டாது!

"நாம் ஏன் சட்டத்திற்கு பணியவேண்டும்?" (வாழ்வியல்-53 மலைமுரசு) என்ற தலைப்பில் 16.05.2015ல் இப்பகுதியில் பிரசுரமான கட்டுரையில் பாலியல் வல்லுறவு பற்றி கடுமையாக சாடப்பட்டிருந்ததுடன் 'பெண்களின் வாழ்க்கையை சீரழிப்பவர்களுக்கான தண்டனையை மரண தண்டனை வரை நீடிக்கவேண்டும். அது மட்டுமன்றி மக்கள் சமூக பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டு இப்படியான சம்பவங்கள் நிகழும் இடங்களில் துரோகிகளுக்கு எதிராக திரும்ப வேண்டும். மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் சட்டம் மட்டும் வெறுமனே குற்றங்கள் நிகழ்வதை தடுக்க முடியாது.' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கட்டுரையை எழுதிய 'மை' காய்வதற்கு முன்பாகவே வடக்கின் தீவகமொன்றில் பத்து துரோகிகள் ஒன்று சேர்ந்து பள்ளி மாணவியை சீரழித்து உயிர் பறித்துவிட்ட சம்பவம் ஒன்று அரங்கேறிவிட்டது. அதே சமயம் என்றுமில்லாதவாறு சமூகமும் பெருமளவில் திரண்டு குற்றவாளிகளை தாமே தண்டித்தும். 'காவல்துறையில்' ஒப்படைத்தும், தொடர் போராட்டங்கள் நிகழ்த்தியும் சட்டத்தின் கைகளை வலுப்படுத்தியுள்ளதுடன் உறுதியான தீர்வையும் வேண்டியுள்ளனர்.

ஏன் இந்த கவலை தரும் சாபக்கேடு என்று ஒவ்வொருவரும் எண்ணிப்பார்த்து திருந்த வேண்டிய சந்தர்ப்பம் இது. எமது சமூகத்தில் பன்னெடுங்காலமாக 'கழவொழுக்கம்' என்ற நடத்தை இருந்து வந்துள்ளது. ஆனால் பாலியல் வல்லுறவு பெரிதாக குறிப்பிடப்படும் படி இருந்ததில்லை. இந்த துயரகரமான நடத்தை மிக அண்மைக்காலத்திலேயே பல்கி பெருகியுள்ளது.

என்றுமில்லாதவாறு இன்று இருபாலாரும் நெருங்கி பழகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. பாடசாலை, தொழில்சார் நிலையங்கள், பொது இடங்கள், என்று எவரும் சுதந்திரம் எடுத்துக்கொண்டு பழக முடியும். சூதுவாது நிறைந்த உலகத்தில் இந்த வாய்ப்பு பெண்களை சிக்கலில் மாட்டி விடுகிறது. இதற்கு அனுசரணை அளிக்கும் விதத்தில் இணைய தளங்கள் பெரும் தொடர்பு சாதனங்களாக இருந்து ஆண் பெண் உறவுக்கு பெரும் பங்களிப்பை உண்டு பண்ணுகின்றது. பல மோசடிகளுக்கு இத் தளங்கள் வழிவகுப்பது அண்மைக்கால நிகழ்வுகளாக உள்ளன.

உண்மையில் மனிதர்கள் மிருக இனத்தை சேர்ந்தவர்களே. நாம் எமக்கு 'மனிதன்' என்று பெயர் சூட்டி உள்ளதுதான் வேறுபாடு. மிருகங்கள் பாலியல் கட்டுப்பாடுகளுக்கு உட்படாதவை. தூண்டுதல் ஏற்படும் போது பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டு பின்னர் பிரிகின்றன. மனிதன் தனது வாழ்க்கை அனுபவத்தால் ஈட்டப்பட்ட உயர்சிந்தனை நிமித்தம் கட்டுப்பாட்டுடன் வாழ பழகிக்-கொண்டான்.

இன்னும் ஆண்கள் பற்றி குறிப்பிடுவதாக இருந்தால் பாலியல் உணர்வுக்கு வடிகாலாக சட்டபூர்வமான நிலையங்கள் இல்லா-திருத்தல், பெண்களால் புறக்கணிக்கப்படுதல், உணர்வை அடக்க முடியாமை, உரிய வயதில் விவாகம் செய்யாமை. சொல்லப் போனால் ஆண்கள் எப்போதுமே பெண்கள் மீது மேலாதிக்க சிந்தனை உடையவர்-களாவே உள்ளனர். பெண்கள் வெறுமனே போகப் பொருள் என்ற சிந்தனைக்கு உட்பட்டவர்கள். 'பெண்ணுடன் யாராவது முட்டி மோதவா போவார்கள். எனவே பாலியல் வன்முறையே தீர்மானமாக உருவெடுக்-கின்றது.

அவன் குடும்பத்தில் வளர்க்கப்பட்ட தவறான பழக்க வழக்கம் அதற்கு அனுசரணையாக இருக்கின்றது. சட்டம் ஒழுங்கு பற்றிய சிந்தனை இல்லை. தண்டனைகள் போதுமானதாக இல்லாதிருத்தலும் தீர்ப்பு வழங்குவதில் காலதாமதம், அவனை சூழ உள்ளவர்கள் வல்லுறவுக்கு தூபம் போடுதலும். தன்னை ஒரு 'ஹீரோ'வாக நினைக்கும் மனநோயும், காவல்துறையை எப்படியும் கையாளலாம் என்ற நம்பிக்கை. இக் காரணிகளே ஒருவனை வல்லுறவு மூலம் பெண்ணை பழி வாங்க தூண்டுகின்றது. அதன் பின்னர் போதை தலைக்கேறல் நண்பர் கூட்டம் என்று நிலைமை அவனது கட்டுப்பாட்டை மீறி கொலைவரை செல்கின்றது.

இனி பெற்றோர்களை எடுத்தால் அவர்கள் முக்கியமாக ஒரு உண்மையை மனதில் இருத்த வேண்டும். தமது பெண்பிள்ளை-களுக்கு குடும்பத்திலும் வெளியேயும் பாதகமான உறவுகள் இருக்கின்றனவா என்ற கண்காணிப்பு மிக மிக அவசியம். தாய் வழி மாமன், தந்தை வழி சித்தப்பா, போன்ற . மிக நெருங்கிய இரத்த உறவுகளை தவிர எவரையும் நம்பி பெண்பிள்ளைகள் மீது உரிமை பாராட்ட அனுமதிக்கக்கூடாது. இருபத்திநான்கு மணி பொழுதும் அவர்கள் விளையாடும் போதும் படிக்கும் போதும் துயிலும் போதும் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். பிள்ளைகளின் ஆடைகளில் மிகுந்த கட்டுப்பாட்டை செலுத்த வேண்டும். கணனி, தொலைக்காட்சி ஆகியனவற்றை மண்டபம் போன்ற பொது இடங்களில் வைத்து பாவித்தல் வேண்டும். தேவையற்ற இணைய தளங்களால் உண்டாக கூடிய பாதிப்புக்கள் பற்றி அவர்களுக்கு முன்கூட்டியே உணர்த்தி-வைத்தல் வேண்டும். தூரத்து உறவினர் பையன்கள் அயல் வீட்டு பையன்கள் என்று கூறி அநாவசியமாக இளைஞர்-களை உங்கள் குடும்பத்திற்குள் அனுமதி-க்காதீர்கள். உங்கள் பெண்ணுக்கு பகைமை வரும்படி எவருடனும் நடந்து-கொள்ளாதீர்கள். எவர் என்ன குற்றங்களை புரிந்தாலும் அவை பற்றி நடவடிக்கை எடுக்க கிராமிய அமைப்புக்களும் 'காவல்துறையினரும்' உள்ளனர். நீங்கள் பொறுப்புள்ள பெற்றோராக இருந்து வம்பை விலைக்கு வாங்காமல் இருந்தாலே போதும்! அதுவும் ஒரு பெண்ணுக்கு பெற்றோராக நீங்கள் அப்படித்தான் நடக்க வேண்டும்!

இனி பெண்பிள்ளைகளை எடுத்தால் இயற்கையாகவே எல்லோருடைய ஈர்ப்பும் அவர்கள் மீதே இருக்கும். போதாத குறைக்கு இறைவன் பெண்களை அடையாளம் காட்டுவது போலவும் அவள் மேல் கவர்ச்சி ஏற்படும் படியும் அவளது உருவ அமைப்பை படைத்து விட்டான். இந்திய சினிமாவில் பெண்ணே மையப் பொருளாக இருக்கின்றாள் என்றால் பாருங்களேன்! இன்று கிழக்கத்தைய மேற்கத்தைய கலாச்சார கலப்பு அதிகமாக உள்ளது. இறைவன் பெண்களுக்கு வழங்கிய அழகை காட்டிலும் மேலாக அழகு சாதன பொருட்களும். ஆடை அலங்காரங்களும் பெருகிவிட்டன. பெண்கள் இறுக்கமான ஆடை-களை பெரிதும் விரும்பி அணிகிறார்கள். அந்த ஆபாசமான ஆடைகள் ஆண்களை சீண்டி விடுகின்றன. கணனி, கைபேசி போன்றன இந்நாட்களில் பெண்களுக்கு உதவியாக இருப்பதை காட்டிலும் உபத்திரமாகவே இருக்கின்றன. அவைகள் பெண்களின் உணர்வு-களை தூண்டிவிடுகின்றன. சில பெண்கள் ஆண்கள் கவனத்தை தம் பக்கம் திருப்பும் வகையில் நடப்பதிலேயே தமது அழகும் திறமையும் இருக்கின்றது என்று நம்புகின்றார்கள் மற்றும் சிலர் தமக்கு சில இளைஞர்கள் அறிமுகம் இருப்பதாக காட்டி கொள்ள விரும்பு-கின்றார்கள். அப்படியே தாம் வெளியே செல்லும் போது துணைக்கு எவரும் தேவை இல்லை என்று காட்டிக்கொள்வதில் பெருமை கொள்கின்றார்கள். தமக்கு விவாக வயதும் அதற்கான சந்தர்ப்பமும் வர முன்னரே சில பெண்கள் தாம் பழகும் இளைஞர்களில் ஒருவனுக்கு தான் அவனை மணப்பதாக வாக்கு கொடுத்துவிடுகிறாள். அதன் பின்னர் அவள் பெற்றோருக்கு கட்டுப்படாமல் நடக்க முற்படுகிறாள். அந்த இளைஞனும் தேவையற்ற உரிமைகளை அவள் மேல் எடுத்துக்கொண்டு 'நீ அவனுடன் கதைத்தாய், இவனுடன் பேசினாய்' என்று குற்றம் காண தலைப்படுகின்றான். அதுவே சண்டையாக மாறி வல்லுறவுக்கும் பழி வாங்கலுக்கும் வழி வகுக்குமல்லவா?

பாலியல் வல்லுறவை தடுப்பதற்கு அதிகம் பொறுப்பெடுத்து கொள்ள வேண்டியவர்கள் பெற்றோரும் பெண்களுமே! சிந்தியுங்கள்!

# "தனிமை"

சஞ்சயன் செல்வமாணிக்கம்



அண்மையில் ஓர் நாள் முகப்புத்தகத்தில் அலைந்துகொண்டிருந்த போது மனம் இலகுவாய் இருப்பது போல உணர்ந்திருந்தேன். சில நண்பர்கள் வந்து உரையாடிப் போயினர். எனக்கு நெருங்கிய நண்பரொருவரின் மூலம் அறிமுகமான ஒருவர் எனது முகப்புத்தக நட்பு வட்டத்திலிருக்கிறார். அவருடன் நான் சில நாட்கள் தொலைபேசியில் உரையாடியுள்ளேன். இலங்கைக்குச் சென்றிருந்த நாட்களில் ஒரு முறை அவரைச் சந்தித்திருக்கிறேன்.

மிகவும் கலகலப்பானவர். முற்போக்குச் சிந்தனையுள்ளவர், மும் மொழிகளிலும் திறமைமிக்கவர். எனினும் வயது 35 நெருங்கியும் திருமணம் செய்யாது தாய் தந்தையருடன் வாழ்ந்திருந்தார். தகப்பனாருடன் அவருக்கு மிக நெருங்கிய உறவிருந்தது. நெருங்கிய நண்பர்கள் போன்றே இருவரும் பழகினர்.

திடீர் என்று அவரின் தந்தை நோய்வாய்ப்பட்டு சில மாதங்களின் பின் இறந்துபோனார். தந்தையின் இழப்பு அவரை மிகவும் பாதித்தது. அவரின் சகோதர சகோதரிகள் அனைவரும் வெளிநாடுகளில் இருந்தார்கள். தந்தையாரின் மறைவின் பின் மிகுந்த மன அழுத்தத்ததற்கு உட்பட்டிருந்த நாட்களில் என்னுடன் முகப்புத்தகத்தினூடாக உரையாடுவார். அவரினால் தந்தையின் இழப்பை தாங்க முடியாதிருந்தது.

இவை நடந்து சில மாதங்களுக்குள் அவரின் தாயாருக்கு புற்றுநோய் இருப்பதாக வைத்தியர்கள் கூறியபோது நண்பர் முழுவதுமாக இடிந்து போனார்.

மேற் குறிப்பிட்ட நண்பர் இன்று நான் முகப்புத்தகத்தில் குந்தியிருந்த போது "ஹாய்" என்று சம்பாஷனையைத் தொடங்கினார். நான் அவரின் தாயாரின் நிலையை கேள்விப்பட்டிருந்ததால் அது பற்றிப் பேசாமல் இருப்போம் என்றே நினைத்திருந்தேன். ஆனால் அவரின் இரண்டாவது வரியில் தனக்கு பயமாக இருக்கிறது என்ற போது எதற்கு என்று தெரிந்திருந்தாலும் சம்பிரதாயத்-திற்காக எதற்கு என்று கேட்டேன்.

தாயாரின் புற்றுநோய் மிகவும் வீரியமாக இருப்பதால் எப்போதும் எதுவும் நடக்கலாம் என்றார். தாய் தந்தையர் இருவரையும் இழந்து தனித்து வாழப்போகும் காலத்தைப் பற்றி அவர் மிகவும் கவலை கொண்டிருந்தார். அவர் திருமணமாகாதவர் என்பதாலும், தனித்து வாழ்வதால் ஏற்படப்போகும் சிக்கல்கள் அவரை பயமுறுத்துவதாகச் சொன்னார்.

அண்மைக் காலங்களில் எதிர்கால வாழ்வினை உறுதிசெய்யக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டும், தன்னை எதையும் தாங்கும் நிலைக்கு தயார்படுத்திக்கொண்-டிருந்திருந்தாலும் நிச்சயமற்ற மனநிலையில் அவர் இருந்தார்.

நானும் உலகில் எதுவும் நிரந்தரமானது இல்லை என்றும், வாழ்வினை துணிவோடு எதிர்கொள்ளுமாறும், எதற்கும் தயாராக-விருக்குமாறும் கூறிய போது சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார்.

தொடர்ந்த எமது சம்பாஷனையில் அவர் ஒரு சிறு குழந்தையைப் போல் தனியே வாழும் நாட்களையிட்டு அஞ்சுவது புரிந்தது. நம்பிக்கையானவர்களின் அருகாமை இல்லாது போகும் போது, பாதுகாப்பான எண்ணங்களும் எம்மைவிட்டு மெல்ல மெல்ல ஊர்ந்து வெளியேறுவதால் அவ் வெற்றிடங்களை பயம் கைப்பற்றிக்-கொள்கிறது. இப்பயமே வாழ்வின் மீதான பாதுகாப்பற்ற நிலையை உருவாக்குகிறது. இப்படியான நிலைகளை நானும் பல தடவைகள் கடந்திருக்கிறேன். அடர்ந்த பெரும் காட்டின் நடுவே, அல்லது வெட்ட வெளியின் நடுவே தனியே நிற்பது போன்றது அவ்வுணர்வு. ஒரு நிச்சயமற்ற நிலையை உணர்த்திப்போகும் உணர்வு அது. நாமாகவே சுதாரித்துக் கொள்ளாவிட்டால் சுயபரிதாபம் நம்மை மூச்சடைக்கச் செய்துவிடும். அதன் பின் அதிலிருந்து மீள்வது கடினமாகிவிடும். உற்ற நண்பர்களின் துணையுடனேயே நான் அக்காலங்களைக் கடந்துகொண்டேன்.

எனது அனுபவங்களைக் கூறியபடியே அவருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவருக்கு நான் கூறுவது புரிந்திருந்தாலும் அவர் மனம் சமாதானமடையவில்லை. இலங்கை வந்தால் தன்னை வந்து பார்ப்பேனா என்று கேட்ட போது அவரின் தனிமையின் பயமும், சோகமும் புரிந்தது எனக்கு. நிச்சயமாக உங்களை சந்திப்பேன் என்று கூறினேன்.

தனிமையின் பாரத்தை நான் நன்கு அறிவேன். தனிமை-யுடனேயே எனது காலங்கள் கழிந்து கொண்டிருக்கின்றன. எனது வாழ்வில் தனிமையுடன் நான் சமரசமாகிவிட்டேன் என்றே நினைக்கத்தோன்றுகிறது. இருப்பினும் மனதின் ஒரு மூலையில் தனிமை பற்றிய ஒரு பயம் இருக்கத்தான் செய்கிறது என்பதை நான் மறைப்பதற்கில்லை. ஒரேநேரத்தில் நண்பனாகவும், எதிரியாகவும் இருக்கக் கூடியது தனிமை.

முடியுமானவரை அவரை ஆறுதல்படுத்தியபின் அவரிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டேன். ஆனால் அவர் பற்றிய சிந்தனையில் இருந்து விடைபெற்றுக்கொள்ள முடியவில்லை, இன்னும்.

"தனிமை" என்னும் சொல் தந்து போகும் அனுபவங்கள் மிகவும் கொடியவை, எந்த மனிதனையும் அவை ஆட்டிப்போடும் வல்லமை கொண்டவை என்பதை நான் மிகவும் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறேன்.

வாழ்வின் இறுதியில், இந்த தனிமையை நாம் வென்றோமா அல்லது தனிமையிடம் தோற்றோமா என்பதில் மகிழ்ச்சியில்லை. வாழ்வினை திறம்பட வாழ்ந்தோமா என்பதிலேயே மகிழ்ச்சி தங்கியிருக்கிறது.

மனசாட்சி பேசுகிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# வம்பு பேசும் ஊரார்

**– பாலையூற்றான் –**

கமலாவின் பிறப்பிடமான பரவிப்பாஞ்சான் வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப் பழமை வாய்ந்த பிரதேசமாகும். அங்குள்ளவர்களில் பலர் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். அன்று விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் மத்தியில் ஏற்பட்ட கடும் சமரின் காரணமாக பலர் புலம்பெயர்ந்து இடம்பெயர்ந்து சென்ற சம்பவங்களை நாம் நன்றாக அறிவோம்.

கமலாவின் பெற்றோரினது பிரதேசமான பரவிப்பாஞ்சான் கூட போர்க்காலங்களில் பாதிக்கப்பட்ட பிரதேசம் ஆகும். அன்று போர்ச் சூழலில் தனது வயோதிப பெற்றோர்களை கமலா இழக்க நேரிட்டது. இனிமேல் அங்கு அவள் யாருக்காக வாழவேண்டும்? குடும்பத்தில் அவள் ஒரே ஒரு பிள்ளை ஆதலால் தனிமரமானாள். அவள் தனது பதுளையிலுள்ள தன் சிற்றப்பாவின் வீட்டுக்குச் சென்றாள். என்னவாக இருந்தாலும் தனது சகோதரரின் பிள்ளையை கைவிட முடியுமா? அவரும் கமலாவை ஏற்றுக்கொண்டார்.

கமலாவின் சிற்றப்பா தொழிலின் நிமித்தம் பதுளைக்குச் சென்றவர். அங்கு சொந்தமாக ஒரு மளிகைக் கடை ஒன்றை நடாத்தி வருகின்றார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். தற்போது மூன்று பிள்ளைகளாகினர். காலம் கனிந்ததும் தனது நிலைமைக்கு ஏற்ப கமலாவிற்கு திருமணம் செய்து வைத்தார் சிற்றப்பா.

என்னவாக இருப்பினும் அவள் சிற்றப்பாவிற்கு பாரமாக இருக்கக் கூடாது என்பதாலேயே உடன் திருமணத்திற்கு ஒத்துக்கொண்டாள். திருமணமும் நிறைவேறியது. அவள் வாழ்ந்த அப்பிரதேசத்தில் படிப்புக்கு பெரியளவு முக்கியத்துவம் இல்லை.

அவளது கணவன் நாட்கூலி வேலை செய்பவன். அதில் குடும்பம் நடாத்துவது சிரமம் என்பதால் கமலாவும் ஏதேனும் வேலைகள் செய்து வந்தாள். அவளது கணவனிடம் நிறைய நல்ல பழக்கங்கள் இருந்தாலும் கூட குடிக்கு அடிமையானவன் அவன்.

அவர்கள் இரு குழந்தைகளுக்கு பெற்றோராயினர். இருவருக்கே போதாதிருந்த அவனது கூலி எவ்வாறு நால்வருக்கு போதுமானதாய் இருக்கும். குடும்பத்தில் பணச்சிக்கல் உருவானது. தனது சிற்றப்பாவிடம் கேட்டு அவரை மேலும் கஷ்டத்தில் உள்ளாக்க அவள் விரும்பவில்லை. இருப்பதைக் கொண்டு சமாளிக்கும் குடும்பப் பெண்ணாக சிக்கனமாக குடும்பத்தை நடாத்தினாள்.

அவன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தாலும் தன் மனைவியின் சொல் கேட்டு மட்டுப்படுத்தியே மது அருந்தினான். அன்று ஞாயிற்றுக்கிழமை. மக்கள் பரபரப்பாக திரிந்த வண்ணம் இருந்தனர். திடீரென அங்கு மண்சரிவு ஏற்பட்டது. அந்த அனர்த்தத்தில் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. பல வீடுகள் குடை சாய்ந்து வீழ்ந்தன. மீட்புப் படையினரும் முப்படை வீரர்களும் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். எங்கு பார்த்தாலும் ஓலங்களும் அழுகைகளுமே கேட்டவண்ணம் இருந்தன.



உயிரை இழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் அரச மற்றும் தனியார் அம்புலன்ஸ் வண்டிகள் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கமலாவின் குடும்பத்திற்கு எந்தவித உயிரிழப்புகளும் நேரவில்லை. அவர்களின் வீடே முற்றாக பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டோர் அனைவரும் கமலாவின் குடும்பத்தினரும் கூட அருகிலிருந்த பாடசாலை ஒன்றினுள் தஞ்சம் புகுந்தனர்.

சொந்தப் பிரதேசமான பரவிப்பாஞ்சானுக்கு செல்லலாம் என்றால் இன்னமும் அங்கு இராணுவம் குடிகொண்டுள்ளமையால் அதுவும் முடியாமல் போனது. இன்றைய நல்லாட்சி அரசுக்கு அப்பாவி மக்களின் யதார்த்த நிலைமை நன்கு புரிந்திருந்தாலும் தெற்கு மக்களை திருப்திப் படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயத்தை மறக்குமா இவ் அரசு? வடக்கில் சொந்த வீடு வாசல்கள், காணிகள் இருந்து தான் என்ன பிரயோசனம்? என கமலா மட்டும் புலம்பவில்லை. பாதிக்கப்பட்ட எத்தனையோ வடக்கு வாழ் மக்கள் இன்னமும் புலம்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

என்ன நடந்தாலும் நடக்கட்டும் நாம் பாதுளையிலேயே இருந்துவிடுவோம் என்ற தீர்க்கமான முடிக்கு வந்தாள் கமலா. அகதிமுகாமாக இயங்கி வந்த பாடசாலைக்கு அனர்த்த கட்டுப்பாட்டு துறை அதிகாரிகள் பலர் வந்து போனார்கள். இறுதியாக அங்கு வந்திருந்த அதிகாரி ஒருவர் கமலாவை எப்படியோ இனங்கண்டு விட்டார். அவர் கமலாவின் பிரதேசமான பரவிப்பாஞ்சான் பிரதேசத்தைச் சார்ந்தவர். இனி கேட்கவா வேண்டும். கமலாவின் குடும்பம் அங்கு விசேடமாக கவனிக்கப்பட்டது. அதில் கமலாவின் கணவனுக்கு பெரும் சந்தோசம். அந்த அதிகாரி தனிப்பட்ட ரீதியிலும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தார்.

தான் அசையா விட்டாலும் தன் தசை அசையும் என்பார்களே. அது கமலாவின் விடயத்தில் நூற்றுக்கு நூறு வீதம் உண்மையாக இருந்தது. அந்த அதிகாரியின் விசேட கவனிப்பு ஏனையோர் மத்தியில் ஒரு சலசலப்பை தோற்றுவிக்கத் தவறவில்லை. அவர் கமலா தன் ஊர்க்காரி தாய் தந்தையரை இழந்த பெண் என்பதை அடிப்படையாகக் கொண்டே அனர்த்த ஊக்குவிப்புத் தொகை, மீளகுடியேற்ற வீட்டுத் திட்டம் என்பவை தொடர்பில் அவளது குடும்பத்திற்கு முக்கியத்துமும் முன்னுரிமையும் வழங்கி இருந்தார்.

கமலாவின் கணவன் அகதி முகாமில் வாழ்ந்தாலும் மாலை நேரங்களில் வழமையான தவறணைக்கு போவதை நிறுத்திக் கொள்ளவில்லை. அன்று வழமை போல் மாலை வேளையில் தவரணைக்குச் சென்று மது அருந்திக் கொண்டிருந்த வேளையில் அவனுக்கு பக்கத்தில் இருந்த ஒரு சிலரின் கிண்டலான பேச்சு அவனை முற்றாக கவலை அடையச் செய்தது. உண்மையில் கமலா கொடுத்து வைத்தவள். அவளுக்கு எல்லாம் கிடைக்குது. எங்களை-யெல்லாம் யாரப்பா கவனிப்பாங்க இதுவே அந்த குடிகார கும்பலின் குடிகார பேச்சு.

என்னவாக இருந்தாலும் தவறணையில் தனது மனைவியை கிண்டலாகவும் தரக்குறைவாகவும் பேசியதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. நாளாந்தம் குடிக்கும் அளவை கமலாவினால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அன்று அவனுக்கு ஏற்பட்ட கோபத்திற்கு முன்பு அவனால் மட்டுப்படுத்த முடியவில்லை. அளவுக்கதிகமாக குடித்துவிட்டு அகதி முகாமிற்கு தட்டுத் தடுமாறி சென்றான்.

ஆழ்ந்த நித்திரையில் இருந்த தன் மனைவியை நோக்கி சத்தமிடாமல் உன்னைப் பற்றி தெரியாமல் ஏன் இப்படி தாறுமாறாக கதைக்கிறினம் என கவலைப்பட்டு விட்டு சென்று படுத்துக் கொண்டான்.

அடுத்தநாள் அவன் தூக்கத்திலிருந்து எழும்பியிருக்கவில்லை. அவன் தனது மனைவி, பிள்ளைகள் ஏன் இந்த உலகத்தையும் விட்டு சென்றுவிட்டான். அவனது அருகில் களை கொல்லி மருந்தின் வெற்றுப் போத்தலொன்றை காவல்துறையினர் கண்டெடுத்து மன்றுக்கு தடயப் பொருளாக சமர்ப்பித்திருந்தனர். உள ரீதியான பாதிப்பினால் ஏற்பட்ட தற்கொலைச் சம்பவமென அங்கு அவனது மரணச் சான்றிதழில் பதிவானது.

# காமவெறியர்களை துன்புறுத்தி கொல்லுங்கள்

*– தன்யா –*



ஓர் தாயானவள் தனக்கு ஏதோ செய்கின்றது, ஒரே வாந்தியாக வருகின்றது, இரவு நித்திரையின் பின் எழும்பும் போது உடம்பு மிகவும் அசதியாகவும், வித்தியாசமாகவும் இருப்பதாக கூறி வைத்தியர் ஒருவரை நாடினார். அவர் அவரை பரிசோதித்து விட்டு உங்களுக்கு நல்ல செய்திதான் நீங்கள் தாயாகப் போகின்றீர்கள் என கூறியுள்ளார். இதைக் கேட்டதும் அதிர்ந்து போன அத்தாய் வைத்தியரிடம் தாறுமாறாக சண்டை இட்டார்.

பின் வேறு ஒரு வைத்தியரை அணுகி தனது பிரச்சினைகளை கூறிய அத்தாய்க்கு அவ்வைத்தியரிடம் இருந்தும் அதே பதில் தான் கிடைத்தது. கடும் கோபத்திற்கு உள்ளான அவர் பொது வைத்தியசாலையை அணுகினார். அங்கு அவருடன் கதைத்த மனோதத்துவ நிபுணர் ஏன் இதை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றீர்கள் என வினவினார். அவரது ஆறுதல் வார்த்தைகள் அத்தாயை மனந்திறக்க வைத்தது.

எனது கணவர் வெளிநாட்டில் இருக்கின்றார். நான் அவரோடு மட்டும் தான் வாழ்கின்றேன். அவ்வாறிருக்க நான் எவ்வாறு கர்ப்ப முறலாம் என கதறி அழுதார். பின்னர் அத்தாயின் நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் அவரது உணவுப் பழக்க வழக்கங்கள், வீட்டிற்கு வந்து போவோர் விபரங்களைப் பற்றி அலசி ஆராய்ந்த வைத்தியர் எதுவித தடயங்களும் கிடைக்காது திணறினார். ஏனெனில் சந்தேகப்படும் படியாக எதுவும் நடந்திருக்கவில்லை.

இறுதியில் தனக்கு இருபது வயது நிரம்பிய ஓர் மகன் இருப்பதாக தெரிவித்ததுடன் அவன் தனக்கு ஒவ்வொரு இரவிலும் பால் காய்ச்சித் தருவதாக கூறினார். எழுந்தது சந்தேகம். வைத்தியர் தாயாரிடம் கூறினார். நீங்கள் இனி அவன் தரும் பாலை அருந்த வேண்டாம் விழித்திருந்து பாருங்கள் உங்களுக்குப் புரியும் என்றார்.

குழம்பிய மனதுடன் வீடு வந்து சேர்ந்திருந்தார் தாய். தன் மகனா? தன் மகனா? இல்லை இருக்காது. வைத்தியருக்கு பைத்தியம் என பலவாறு சிந்தனையை சிதறவிட்டு கொண்டிருந்தார். இரவானதும் வழமை போல் இருவரும் சாப்பிட்டவுடன் மகன் பால் கொணர்ந்து கொடுத்தான். துணிகளை மடித்து வைத்துவிட்டு குடிப்பதாகவும் வைத்துவிட்டு செல்லுமாறும் பணித்தாள். பின்னர் விழித்தே இருந்தாள். இவ்வாறே இரண்டு, மூன்று நாட்கள் சென்றன. நாலாம் நாள் பாலைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு சரியாக ஒரு மணி நேரத்தின் பின்னர் காமக் கண்களுடன் வேறு ஒருவனாக தாயாரின் அறையினுள் நுழைந்தான் மகன். நித்திரை போல் பாசாங்கு செய்த தாய் விழித்துப் பார்த்ததும் அவன் ஓடிவிட்டான்.

இப்படியான ஒரு கொடுமைச் சம்பவம் எந்தவொரு தாய்க்கும் நிகழுமா? தாய் செய்வதறியாது துடித்தாள். அங்கும் இங்கும் அலைந்தாள். யாரிடமும் கூறவோ, கதறி அழவோ முடியவில்லை அவளால். சற்று நேரத்தில் அவள் உடல் விட்டு உயிர் பிரிந்தது. மகனை கைது செய்த காவல் துறையினர் சிறையில் அடைத்துள்ளனர்.

இப்படியும் நடக்கலாம்

- இங்கிலாந்தில் 14 வயது பள்ளி சிறுமி ஒருவர், அதே வயதுடைய சிறுவனிடம் கடந்த சனிக்கிழமை போதை மருந்தை வாங்கியுள்ளார். ஆனால் வாங்கிய போதை மருந்து தரமில்லாமல் இருந்ததை கண்டு ஆத்திரம் அடைந்த சிறுமி, அதை விற்பனை செய்த சிறுவனின் சட்டையை பிடித்து பணக்காரர்களுக்கு போதை மருந்து விற்கும்போது இதுபோன்ற போலியான போதை மருந்தை விற்க கூடாது என்பதை இப்போது நீ புரிந்துகொள்ள வேண்டும் என கூறி முகத்தில் சரமாரியாக தாக்கியுள்ளார்.
- காவல்துறையினரால் கைதாகிய அச்சிறுமி நடத்திய தாக்குதல் கொடூரமானது என நிரூபிக்க பட்டுள்ளதால், அவளை 8 மாதங்கள் தடுப்பு முகாமில் வைத்துள்ளனர்.
- சீன உணவகம் ஒன்று சிறிய ஆடை அணிந்து வரும் பெண்களுக்கு அதிக தள்ளுபடி வழங்கும் கவர்ச்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தங்கள் உணவகத்திற்கு வரும் பெண்களின் பாவாடையை ஊழியர்கள் அளவிடுகிறார்கள். முழங்காலில் இருந்து 12 இன்ச்க்கு மேலாக பாவாடை அணிந்திருக்கும் பெண்களுக்கு 90 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது.



- இந்தியப் பிரபலர் சுப்பிரமணியம் சுவாமி அவரது தலைமையில் நடைபெற்ற திருமணமொன்றில் தாலியை தொட்டு மணமகனிடம் கொடுப்பதற்குப் பதிலாக தாலியை கையில் எடுத்து, கண்களை மூடிக் கொண்டு மணமகள் கழுத்தில் கட்டுவதற்கு முயன்றுள்ளார். அருகில் இருந்த அவரது மனைவி சந்திரலேகா பதற்றத்தோடு, அவரது கையை தட்டி மணமகனிடம் தாலியை கொடுக்குமாறு கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு வரவிருந்த சோதனை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம், நல்லிணக்கம் சம்பந்தமான ஒரு பெரிய சோதனையை அடுத்த வாரத்தில் சந்திக்கப்போகிறது. வரும் மே 18ஆம் திகதியுடன் முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்தநிலையில், கடந்த ஐந்து ஆண்டுகளாக நடந்து வந்த போர் வெற்றி விழா, இம்முறை போர் வீரர்கள் நினைவு நாளாக கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் இது தொடர்பான நிகழ்வுகள் வரும் 19ஆம் திகதி ,நடைபெறவுள்ளன. முன்னைய அரசாங்கம், ஆரம்பத்தில் கொழும்பு காலிமுகத் திடலிலும் அதன் பின்னர் கடந்த ஆண்டு மாத்தறையிலும் பெரியளவிலான வெற்றி விழாவாகவே கொண்டாடியது. தற்போதைய அரசாங்கம் போர் வெற்றி விழாவை கொண்டாடவும் முடியாத அதேவேளை, அதனை முற்றாக கைவிடவும் முடியாத நிர்ப்பந்தத்துக்குள் சிக்கிப் போயிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம், வரப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தல் தான்.

முன்னைய அரசாங்கம், மே 19ஆம் திகதியை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வெற்றி கொண்ட நாளாக மட்டும் கொண்டாடியிருக்கவில்லை. அது தமிழரை வெற்றி கொண்ட நாளாகத் தான், கொண்டாடப்பட்டது. 2009ஆம் ஆண்டு போர் வெற்றி கொள்ளப்பட்ட நாளில் இருந்து, இன்று வரை அத்தகைய நிலையே நீடித்து வந்திருக்கிறது. தாம் தமிழ்மக்களுக்கு எதிராகப் போரை நடத்தவில்லை என்றும், பயங்கரவாதத்துக்கு எதிராகவே போரை நடத்தியதாகவும், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கூறிய நியாயங்கள் எதுவும் இன்று வரை தமிழ்மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அதுமட்டுமன்றி, விடுதலைப் புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை மீட்பதற்கே போர் நடத்தப்பட்டதாக அரசாங்கம் கூறிய காரணமும், இன்று வரை தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கவில்லை. போர் நடத்தப்பட்ட முறை மட்டுமன்றி, போருக்குப் பிந்திய நிலையும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில், தமிழ் மக்களுக்கு எதிராகவே போர் நடத்தப்பட்டது. அதில், தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டதாக, ஐ.நா. அறிக்கைகளில் கூட பதிவாகியிருக்கின்றன. இன்னும் பெரும் எண்ணிக்கையானோர் காணாமற்போகவும், ஆயிரக்கணக்கானோர் தமது அங்கங்களை இழந்து நிரந்தர வடுக்களுடன் வாழவும் இந்தப் போர் காரணமாகியது. அதைவிட, தமது சொந்தங்களையும், சொத்துக்களையும், இழந்து வீதிகளிலும் முகாம்களிலும் ஆண்டுக்கணக்காக அலையும் தமிழர்களின் அவலநிலை இன்னமும் தீரவில்லை.

வன்னியில் போருக்குள் வாழ்ந்த மக்களுக்கு நேரடியான வடுக்களையும் காயங்களையும் கொடுத்த இந்த போர், வன்னிக்கு வெளியே இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் அவர்களின் உறவுகளுக்கும் ஆழமான வடுக்களை ஏற்படுத்தத் தவறவில்லை. இதனால், இந்தப் போர் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்ற கருத்தை தமிழ்மக்களிடம் ஏற்படுத்தவும் இல்லை, இனிமேல் ஏற்படுத்தப் போவதுமில்லை. ஏனென்றால், இதில் கொல்லப்பட்ட, பாதிக்கப்பட்ட தமது உறவுகள் ஆயுதமேந்திய புலிகள் அல்ல, வெறும் அப்பாவிகள் என்பதை அவர்கள் அறிவார்கள்.

அவர்களால் எப்படி இதனை தமிழருக்கு எதிரான போர் அல்ல, புலிகளுக்கு எதிரான போர் தான் என்று ஏற்றுக் கொள்ள முடியும்? அதுபோல, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மக்கள் தம்மை விடுவிக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரியிருக்கவும் இல்லை. அவ்வாறு கோரியிருந்தாலும் கூட, புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து, இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வந்த மக்கள் உரிய கௌரவத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், முள்வேலி முகாம்களுக்குள் மாதக்கணக்கில் அடைத்து வைக்கப்பட்டு. சொல்ல முடியாத துன்பங்கள் வேதனைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில், அதனை ஒரு விடுதலையாக தமிழ்மக்களால் எப்படி உணர்ந்திருக்க முடியும்? போருக்குப் பின்னரும் தொடர்ந்த தமிழர்கள் மீதான அடக்குமுறைகளும் கெடுபிடிகளும் போரும் புலிகளும் மட்டும் தான் அதற்குக் காரணமில்லை என்ற உண்மையை மீண்டும் தமிழர்களுக்கு உறைப்பாக உணர்த்தியிருந்தது.

போருக்குப் பின்னர் தமிழர்கள் தமது சொந்த இடங்களில், பழையபடி வாழ்க்கையை எந்த அச்சமும் இல்லாமல் வாழவும் எல்லா உரிமைகளை அனுபவிக்கவும் கூடிய நிலையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தால் கூட, அதனை விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைத்த விடுதலையாக தமிழ் மக்களால் கருத முடிந்திருக்கும். ஆனால் இன்றும் கூட, தமது நிலத்துக்காகவும் அடிப்படை உரிமைக்காகவும் அச்சமில்லா இயல்பு வாழ்வுக்காகவும் போராட வேண்டிய நிலையில் தான் தமிழர்கள் இருக்கின்றனர். இந்தநிலையில், விடுதலைப் புலிகளிடம் இருந்து தமிழ்மக்களை மீட்கவே போரை நடத்தினோம் என்ற மஹிந்த அரசாங்கம் கூறிய நியாயமும் பொய்யாகிப் போய் விட்டது.

போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில், கடந்த நான்கரை ஆண்டுகளாக தமிழ்மக்களை நசுக்கி வந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டு விட்டது. இப்போது நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரில், மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கம், பதவிக்கு வந்து ஐந்து மாதங்கள் தான் ஆகியுள்ளன. இந்த அரசாங்கத்தில் இருந்தவர்களும் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட போரை ஆதரித்தவர்கள் தான், அந்தப் போரில் தமிழர்கள் பட்ட அவலங்களையும் துன்பங்களையும் கண்டு ரசித்தவர்கள் தான் வெற்றி விழாக்களிலும் பங்கேற்றவர்கள் தான்.

ஆனால், ஆட்சிமாற்றத்துக்கு தமிழர்களின் ஆதரவு தேவைப்பட்ட போது, ஆட்சி மாற்றத்துக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவைப்பட்ட போது, அதற்கேற்ப தமது கொள்கையை மாற்றிக் கொண்டவர்கள். முன்னைய அரசாங்கத்தை விட முற்றிலும் மாறுபட்ட கொள்கையுடையவர்கள் என்றில்லா விட்டாலும் கொஞ்சம் வேறுபட்டவர்களாக காட்டிக் கொள்கின்றனர். இறுதிப்போரில் குற்றங்களோ, மீறல்களோ நடக்கவில்லை என்று சாதித்தது முன்னைய அரசாங்கம். அதனால், அதுகுறித்த எத்தகைய விசாரணைகளையும் நிராகரித்து, தமிழர்களுக்கான நீதியை மறுத்து வந்தது. இப்போதைய அரசாங்கம், போரின் போது குற்றங்கள், மீறல்கள் நடந்திருக்கலாம், அதற்கு வெளிநாட்டு விசாரணை தேவையில்லை, உள்நாட்டு விசாரணை நடத்தி குற்றவாளிகளை தண்டிப்போம் என்கிறது. இதன்மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம் என்று இப்போதைய அரசாங்கம் சொல்கிறது.

இப்போது, போர் முடிந்து விட்டது, ஆனால் அதன் வடுக்கள் இன்னும் ஆறவுமில்லை, அதனை ஆற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படவுமில்லை.

முன்னைய அரசாங்கம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, இனரீதியாக சமூகங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தும் கொள்கையைத் தான் கடைப்பிடித்தது. தமிழர்களின் போர் நினைவுச் சின்னங்கள் அனைத்தையும் அழித்து விட்டு, படையினருக்கான போர் நினைவுச் சின்னங்களையும் பௌத்த விகாரைகளையும் அமைத்து, தமிழர்கள் மீது மேலாதிக்கத்தை திணிக்கும் முயற்சிகள் தான் நடந்தன. இது தமிழர்களை இன்னும் இன்னும் சீண்டும் வகையிலும் கொதிப்படையச் செய்யும் வகையிலும் அவர்களைக் காயப்பட வைக்கும் வகையிலும் அமைந்திருந்தன.



ஆனால், புதிய அரசாங்கம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்புக்கூறல் உள்ளிட்ட சாத்தியமான வழிகளைக் கடைப்பிடிக்கப் போவதாக, உறுதியளித்திருக்கிறது. தனியே பொறுப்புக்கூறல் மட்டுமே, தமிழர்களுக்குத் தேவையான நீதி மட்டுமல்ல. அவர்களின் மனங்களில் உள்ள காயங்களும் ஆற்றப்பட வேண்டியது அவசியம்.

நல்லிணக்கம் குறித்து இப்போது அதிகம் பேசப்படுகிறது. வெளிநாடுகளும் அதனை வலியுறுத்துகின்றன. உள்நாட்டிலும் வலியுறுத்தகப்படுகிறது. அரசாங்கமும் அது தமது கடமை என்கிறது. அந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முக்கியமான இரண்டு விடயங்கள் வடுக்களை ஆற்றுதலும் பொறுப்புக்கூறலும் ஆகும். வடுக்கள் அல்லது காயங்களை ஆற்றுவதில், இறந்தவர்களை நினைவு கூருதல் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. இது போரில் மட்டுமன்றி சாதாரண மனித வாழ்வில், இறந்து போனவர்களுக்காக ஆண்டுதோறும் அஞ்சலி செலுத்தும் நினைவு கூரும் பாரம்பரியம், எல்லா இன மக்களிடையேயும் ஒரு வழக்கமாகவே இருந்து வந்திருக்கிறது.

தமிழர்களைப் பொறுத்தவரையில், இதற்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வந்திருக்கின்றனர். தமிழ் நாளிதழ்களில், இறந்து போனவர்களை நினைவு கூர்ந்து வெளியிடப்படும் அதிகளவிலான விளம்பரங்களே இதற்கு சாட்சி. இது இப்போது ஏற்பட்ட வழக்கமல்ல. நீண்டகாலமாகத் தொடருகின்ற பாரம்பரியம். ஆனால், இந்த உரிமை சுதந்திரம் இன்னமும் கூடத் தமிழர்களுக்குக் கிடைக்கவில்லை.

தமிழர்களை விடுவிப்பதற்காக போர் நடத்திய அரசாங்கம், அவர்களின் சுதந்திரத்துக்காக போரை நடத்தியதாக கூறிய அரசாங்கம், இன்று வரை இறந்து போன தமிழர்களை நினைவு கூர அனுமதிக்கவில்லை. போரில் இறந்து போன, தமது உறவுகளுக்காக ஒன்று கூடி கண்ணீர் விட்டு அழும் சுதந்திரத்தையோ, அவர்களுக்காக ஒரு விளக்கை ஏற்றி வைத்து மலர்களைத் தூவுகின்ற உரிமைகளையோ கொடுக்காமல் தான், அரசாங்கம் இதுவரை காலத்தைக் கடத்தி வந்திருக்கிறது.

ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்காலில் மட்டுமன்றி, பொது இடங்களிலும் தமது வீடுகளிலும் கூட தமிழ்மக்களால் நினைவு கூறல் நிகழ்வுகளை நடத்த முடியாத நிலையே நீடிக்கிறது. முன்னைய அரசாங்கம் இந்த விடயத்தில் இராணுவத்தினரையும் பொலிஸாரையும் ஏவி விட்டு கடுமையாக தமிழ்மக்களை அடக்கியது. அதையும் மீறி நினைவுகூறல் நிகழ்வுகளை நடத்திய-வர்களை கடுமையான சட்டங்களின் மூலமும் அச்சுறுத்தல்கள் மூலமும் அடக்கியது.

ஆனால், இப்போதைய அரசாங்கம், நல்லிணக்கத்துக்கான கதவுகளை திறப்பதாக கூறிக் கொள்கிறது. இந்த அரசாங்கம், போர் வெற்றி விழாவை எப்படி நடத்தப் போகிறது என்பதும் முள்ளிவாய்க்காலில் மரணமான மக்களை நினைவு கூரும் நிகழ்வுகள் விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறது என்பதும் முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

போர் வெற்றி விழா இம்முறை இல்லை என்று அரசாங்கம் அறிவித்திருந்தாலும், அன்றைய நாளில் படையினரையும் போரில் உயிரிழந்தவர்களையும் நினைவு கூரும் நாளாக கடைப்பிடிக்கவுள்ளதாக, அரசாங்கம் கூறுகிறது. ஆனால், அன்று இராணுவ அணிவகுப்புகள் நடத்தப்படவுள்ளன. இது போரில் பெற்ற மேலாதிக்கத்தை உணர்த்துகின்ற ஓர் அம்சம் தான்.

நினைவு கூரும் நிகழ்வாகவும் இல்லாமல்

## அரசியல் அலசல்

வெற்றி விழாவாகவும் இல்லாமல் இரண்டுக்கும் நடுவே ஏதோ ஒன்றை நடத்தி விட்டுப் போக நினைக்கிறது அரசாங்கம். இதன் மூலம் சிங்கள மக்களிடையே, நாமும் படையினரைக் கௌரவிக்கிறோம் என்று காட்டவும் முடியும். அதேவேளை, தமிழர்களிடம், நாம் போர் வெற்றியைக் கொண்டாடவில்லை என்றும் கூறவும் முடியும். விரைவில் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக இப்படியொரு இரண்டும் கெட்டான் வேடத்தைப் போடும் நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

இதன் மூலம் சிங்கள மக்களிடையே, நாமும் படையினரைக் கௌரவிக்கிறோம் என்று காட்டவும் முடியும்.

அதேவேளை, தமிழர்களிடம், நாம் போர் வெற்றியைக் கொண்டாடவில்லை என்றும் கூறவும் முடியும். விரைவில் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக இப்படியொரு இரண்டும் கெட்டான் வேடத்தைப் போடும் நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

ஆனால், இந்த இரண்டும் இல்லாத நிலை என்பது, நிச்சயமாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது.

போரில் இறந்தவர்கள் அனைவரையும் நினைவு கூரும் நாளாக கடைப்பிடிக்கவுள்ளதாக கூறும் அரசாங்கம், முள்ளிவாய்க்காலில் மட்டுமன்றி, தமிழர்கள் தாம் விரும்பிய இடங்களில் இறந்தவர்களுக்காக நினைவு கூரும் உரிமையையும் வழங்க வேண்டும்.

அத்தகைய உரிமை அளிக்கப்படுமா அல்லது அதனை நசுக்கும் வகையில் வடக்கு, கிழக்கில் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் தொடருமா என்று பார்க்க வேண்டும்.

முன்னைய அரசாங்கத்தைப் போலவே இந்த அரசாங்கமும், மே 18ஆம் திகதியை முள்ளிவாய்க்காலில் மரணித்த மக்களை நினைவு கூருவதற்கு அனுமதி மறுத்தால், இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையில் வேறுபாடு இல்லையென்றாகி விடும். அது தமிழர்களைக் கடுப்பாக்கி விடும்.

அதேவேளை, முள்ளிவாய்க்காலில் நினைவு கூரலுக்கு அரசாங்கம் அனுமதி அளித்தால், அதை மஹிந்த ராஜபக்' தரப்பு இனவாதப் பிரசாரமாக்கி விடும் ஆபத்து உள்ளதை மறுக்க முடியாது.

எனவே, இந்த அரசாங்கம் எதையும் உறுதியாகவோ வெளிப்படையாகவோ அறிவிக்க முடியாது. அதேவேளை, எதையும் கண்டும் காணாத ஒரு போக்கை கடைப்பிடிக்கலாம். ஆனால், மரணித்தவர்களை நினைவு கூரும் உரிமையும், பொறுப்புக்கூறலும் நல்லிணக்கத்துக்கு மிகவும் அவசியமானவை.

இவற்றைத் தாண்டி நிலையான அமைதியை நாட்டில் ஏற்படுத்தி விட முடியாது. அந்தவகையில், தற்போதைய அரசாங்கத்துக்கு, அடுத்த வாரம் ஒரு முக்கியமான சோதனையாகவே இருக்கும். ஏனெனில், நினைவுகூரும் உரிமையை தமிழருக்கு அரசாங்கம் அளிக்கப் போகிறதா என்பதை வைத்து, பொறுப்புக்கூறலை அரசாங்கம் நியாயமாக நிறைவேற்றுமா என்பதையும் சர்வதேசம் கணக்கிடலாம்.

**இக்கட்டுரை நடந்து முடிந்த மே 18 அன்றைய நிகழ்வினுடைய மக்கள் மத்தியில் இருந்த எதிர்பார்ப்பை பறை சாற்றுகின்றது**

**– –நிலாந்தன்– –**

- www.mattramcom -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரே சீரான வீதத்தில் நீர் பாயும் மூன்று திருகு பிடிகளைப் பயன்படுத்தி ஒரு தொட்டியில் நீரை நிரப்புவதற்கு 8 நிமிடங்கள் எடுக்கின்றது. ஒரே நேரத்தில் மூன்று திருகு பிடிகளும் திறக்கப்பட்டு 4நிமிடங்களுக்குப் பின்னர் ஒரு திருகுபிடி மூடப்படும் எனின், தொட்டியின் எஞ்சிய பகுதி நிரப்புவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

02. 1-6 வரைக்கும் எண்களிடப்பட்ட ஒரு கோடாத தாயக்கட்டையை ஒரு தடவை மேலே எறியும் போது ஓர் ஒற்றை எண் கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?

03. கொழும்பு பிரதான பேரூந்து நிலையத்தில் இருந்து கண்டிக்கு 10 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் காலிக்கு 20 நிமிடங்களுக்கு ஒரு தடவையும், அநுராதபுரத்திற்கு 35 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் பேரூந்துகள் புறப்படுகின்றன. அதிலிருந்து நண்பகல் 12 இற்கு இம்மூன்று நகரங்களுக்கும் ஒரே தடவையில் மூன்று பேரூந்துகள் புறப்பட்ட ஒரு நாளில் அடுத்ததாக அந்நகரங்களுக்கு ஒரே தடவையில் மூன்று பேரூந்துகள் எவ்வளவு நேரத்திற்கு பின்னர் புறப்படும்?

04. 1.5கிலோ நிறையுள்ள ஒரு வெற்றுப் பெட்டியினுள்ளே சம நிறையுள்ள 5 புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ளன. புத்தகங்கள் உள்ள பெட்டியின் மொத்த நிறை 5.2கிலோ எனின், ஒரு புத்தகத்தின் நிறையைக் காண்க.

**பகுதி 02**

01. வர்த்தகர் ஒருவர் ரூ8000 இற்கு ஒரு சைக்கிளை வாங்கிக் கொண்டு 20சதவீத இலாபம் கிடைக்கத்தக்கதாக அதன் விற்பனை விலையை குறிக்கின்றார். எனினும் அதனை விற்கும் போது அவர் குறித்த விலையில் 10 சதவீத கழிவு கொடுக்கின்றார்.
   1. சைக்கிளின் குறித்த விலை யாது?
   2. சைக்கிள் விற்கப்படும் விலை யாது?
   3. வர்த்தகருக்கு கிடைக்கும் இலாபத்தை சதவீதமாக எழுதுக.

## பாடம் : வரலாறு

1. விஜய நகர பேரரசின் அரசர்கள் ஈட்டிய மிக முக்கியமான சாதனை?
   1. தெலுங்கு இலக்கியம் வளர்ச்சிக்கு ஆதர அளித்தமை
   2. இந்து கட்டிட கலையினை உன்னத நிலைக்கு வளர்ச்சி பெறச் செய்தமை
   3. இஸ்லாமிய வா..மனி அரசுடன் நீண்டகால போர் புரிந்தமை
   4. முஸ்லீம் ஆதிக்கத்தில் இருந்து தென்னிந்திய இந்து பண்பாட்டை காப்பாற்றியமை

2. நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலாக இறந்த காலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் எனும் கூற்றை தெரிவித்தவர் யார்?
   1. E.H.கார் 2. ஜவகர்லால்நேரு 3. G.M.திரிவிலியஸ்
   4. வின்சண்ட் சேர்ச்சில்

3. சிகிரியா, அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி முதலான இடங்கள் பாரம்பரிய சின்னங்கள் அடங்கிய தலங்களாக பிரகடனப்படுத்தப் பட்டிருப்பது?
   1. தேசப் பண்பாட்டு பெருமையும், மகிமையும் பிரதிபலிப்பதால்
   2. வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பலர் அங்கு வருவதால்
   3. அவர்கள் இலங்கையின் புராதன இராசதானிகள் என்பதால்
   4. இந்நடவடிக்கை இவ்விடங்களிலே தொல் பொருள் ஆய்வுகளைச் செய்வதற்கு உதவியாகும் என்பதால்

4. எந்த கணவாயினூடாக ஆரியர் இந்தியாவுக்குள் வருகை தந்தனர்?
   1. போலன் 2. கைபர் 3. ஸ்டெப்பீஸ் 4. மக்ரான்

5. கீழ்வருவனவற்றுள் குகைக்கல்வெட்டு அல்லாதது எது?
   1. சிதுல்பவ்வ 2. கல்பொத்த 3. வெஸ்ஸகிரிய 4. மிகிந்தலை

6. இலங்கையின் கிழக்குப் பகுதியில் ஆரியர் அமைத்துக் கொண்ட குடியேற்றம்
   1. தீககம, உபதிஸ்ஸகம 3. மஹாகம, தீககம
   2. உபதிஸ்ஸகம, அனுராதகம 4. தீககம, விஜிதபுர

## பாடம் : விஞ்ஞானம்

01. குழந்தைப் பருவத்தில் வயதிற்கு ஏற்ப உயரம் இல்லாத ஒரு பிள்ளைக்கு ஓமோனை தொடர்ச்சியாக உட்செலுத்திய போது அது சாதாரண உயரத்துடன் வளர்ந்தது. இந்த ஓமோன்
   1. சோமாற்றொரொபின் 2. தைரொட்சின்
   3. புரோலக்ரின் 4. அதிரீனலின்

02. தெசுத்தொசுத்தெரோன் ஓமோனின் தொழில் யாது?
   1. உடலின்வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
   2. குரதிக் குளுக்கோசு மட்டத்தை மாறாது பேணுதல்
   3. பெண்களில் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்
   4. ஆண்களில் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்

03. 8g ஒட்சிசனிலுள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கையைச் சரியாகக் குறிப்பது எது?
   1. $3.011 \times 10^{23}$ 2. $6.023 \times 10^{23}$ 3. $2 \times 6.023 \times 10^{23}$ 4. $\frac{1}{4} \times 6.023 \times 10^{23}$

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

**குற்றியலுகரம்**

உகரத்துக்குரிய மாத்திரையளவு ஒன்று. ஆனால் உகரம் சில இடங்களில் தன் மாத்திரையளவினின்றும் குறைந்தொலிக்கும். அத்தகைய உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

(குற்றியலுகரமாவது தனிக்குற்றெழுத்து அல்லாத மற்றைய எழுத்துக்களின் பின்னே சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஏறிவரும்.)

எடுத்துக்காட்டு - ஆடு பாக்கு கொம்பு

குற்றியலுகரத்துக்கு உரிய மாத்திரை ½ குற்றியலுகரத்தின் அயல் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு ஆறாக வகைப்படுத்துவர்.

**குற்றியலுகரத்தின் வகைகள்**

அ. வன்றொடர் குற்றியலுகரம்
நாக்கு, பேச்சு, தட்டு, பத்து, சிரிப்பு, நாற்று

ஆ. மென்றொடர்க் குற்றியலுகரம்
தங்கு, நெஞ்சு, வண்டு, சிந்து, விரும்பு, அன்பு

இ. இடைத்தொடர்க் குற்றியலுகரம்
நெய்து, மார்பு, சால்பு, அமிழ்து

ஈ. நெடிற்றொடர்க் குற்றியலுகரம்
பாகு, தூசு, நாடு, தூது

உ. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
வரகு, பயறு, படகு, தராசு

ஊ. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
அஃது, இஃது, எஃகு



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: **Fill in the blanks using the words given**

A tourist was once on a holiday cruise to India. He was looking at all the sights and (1) ...................... taking photos. He had completely (2) .................. about the time. When he (3) .................. that his ship was leaving (4) ......................... he rushed anxiously to the (5) ............ When he got there he (6) .................. that the ship was moving (7) ............... away from the port. He (8) .................... to jump onto the ship. (9) ................ he fell into the water. (10) ................ some sailors saw what was (11) .................... and fished him out. Then (12) ............... told him that it was the (13) ............. ship. The right one sailed (14) .................. hour later. Well, everyone makes mistakes sometimes.

| | | | | |
|---|---|---|---|---|
| **forgotten** | **Soon** | **tried** | **wrong** | **eagerly** |
| **realized** | **saw** | **slowly** | **unfortunately** | |
| **luckily** | **port** | **happening** | **they** | **an** |

04. 100N விசையைப் பிரயோகித்து பொருள் ஒன்றை 5m தூரம் அசைத்தால் செய்த வேலை என்ன?
   1. 500Kg 2. 100J 3. 500J 4. 20J

05. மின்காந்தம் பயன்படுத்தும் சந்தர்ப்பம்
   1. நுண்மின்னுடைப்பான்களில் 2. தொலைபேசி செவிபன்னியில்
   3. மின் மணியில் 4. மேற்கூறிய மூன்றும் சரியானவை

06. பயன்படுத்தப்படா எண்ணெயை பகுதிபடக் காய்ச்சி வடிக்கும் போது கிடைக்கும் 4 வகை விலை பொருட்கள் அ, ஆ, இ, ஈ எனக் கீழே காட்டப்பட்டுள்ளன.
   அ - காசலீன் (பெற்றோல்) ஆ - மண்ணெண்ணெய்
   இ - டீசல் ஈ - மசகீடு எண்ணெய்

பகுதிபடக் காய்ச்சி வடிக்கும் போது இவை ஆவியாகிப் போகும் ஒழுங்குமுறையை சரியாகக் காட்டும் விடை யாது?
   1. அ, ஆ, இ, ஈ ஆகியன 2. அ, இ, ஆ, ஈ ஆகியன
   3. ஆ, இ, அ, ஈ ஆகியன 4. இ, அ, ஆ, ஈ ஆகியன

07. நீள் வளைய மையவிழையத்தினால் கட்டுப்படுத்தப்படும் செயல்
   1. பார்வை 2. தசை அசைவு இயைபாக்கம்
   3. இதயத்துடிப்பு 4. உடலின் சமநிலையைப் பேணல்

08. மின்பகுப்பின் மூலம் மின்முலாமிடும் போது யாதாயினும் ஓர் உலோக மேற்பரப்பின் மீது நிலையான சீரான மின் முலாமிடுதலைப் பெறுவதற்குப் பின்பற்றவேண்டிய நடைமுறை யாது?
   1. மின்பகுபொருளை அசையாமல் வைத்திருத்தல்
   2. மின்பகு பொருளின் வெப்பநிலையைத் தொடர்ச்சியாக மாற்றுதல்
   3. மின்பகுப்பிற்கு மிகச் சிறிய மின்னோட்டத்தைப் பிரயோகித்தல்
   4. மின்மூலாமிட வேண்டிய பொருளின் மீது கொழுப்புப் படையை பூசுதல்

09. நரம்பின்றிய இயைபாக்கத்தில் ஈடுபடுவது எது?
   1. தசைகள் 2. என்புகள் 3. ஓமோன்கள் 4. கசியிழையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 21

01. அயடீன் குறைபாட்டைத் தவிக்க ஒருவர் அதிகளவு உண்ண வேண்டிய உணவு ?
   i. மரக்கறிவகை ii. தானியங்கள் iii. கடல் உணவு
   iv. பழவகை

02. சர்வதேசரீதியில் ஒரு பொருள் தரம் வாய்ந்தது என்பதை உறுதிப்படுத்தும் தரச்சான்று?
   i. ISO ii. SLS iii. ISBN iv. SLDA

03. கத்தரி பயிர்களை சேதமாக்கும் பூச்சி?
   i. வெண்மூட்டுப்பூச்சி ii. தந்திகள்
   iii. மீலி மூட்டைப்பூச்சி iv. நெற்தண்டுகோதி

04. பின்வருவனவற்றுள் இலங்கைக்கேயுரிய ஈருடகவாழி
   i. சேல் கொண்டை ii. கொம்பு ஓணான் iii. புள்ளிக்கோட்டி
   iv. மரததேரை

05. உப்புக்கட்டியைச் சுடுநீரில் இட்டால்
   i. மெதுமெதுவாக கரையும் ii. கரையாது அப்படியே இருக்கும்
   iv. விரைவாகக் கரையும் iv. வெடித்துச்சிதறும்

06. இலங்கையின் முதன்முதலில் குளத்தைக் கட்டுவித்த மன்னன்?
   i. தாதுசேனன் ii. பராக்கிரமபாகு iii.பண்டுகாபயன் iv. வசபன்

07. இலங்கையின் மிகப் பெரிய தாவரவியற் பூங்கா அமைந்துள்ள இடம்?
   i. கொழும்பு ii.ஹக்கல iii. பேராதனை iv. நுவரெலியா

08. நெற்பயிரின் சாற்றை உறிஞ்சி சேதம் ஏற்படுத்துவது
   i. பழஈ ii. கருவண்டு iii. நத்தை iv. கபில நிறத்தத்தி

09. சட்டங்காந்தங்கள் இரண்டின் ஒவ்வாத முனைகளை அருகே கொண்டு செல்லும் போது நடைபெறக்கூடியது யாது?
   i. விலகும் ii. கவரும் iii. தள்ளும் iv. உருகும்

10. ஆனைக்கால் நோய் பரவுவது?
   i. நுளம்புகள் மூலம் ii. யானைகள் மூலம்
   iii. வீட்டு ஈயின்மூலம் iv. நீரின் மூலம்

11. இலங்கையில் உள்ள மிகப்பெரிய இயற்கைக் காடு
   i. அமேசன் காடுகள் ii. படகமுவவனம்
   iii. சிங்கராஜ வனம் vi. முத்துராஜவள வனம்

01. தமயந்தி மு.ப 5.30க்கு புறப்பட்டு 45 நிமிடங்களில் பேரூந்து நிலையத்தை அடைந்தாள் வழமையாக மு.ப 6.30க்கு வரும் பேரூந்து 15 நிமிடங்கள் தாமதமாக வந்தது. பேரூந்தில் 25 நிமிடங்கள் பயணித்த பின் பாடசாலையை அடைந்தாள்.
   I. அவள் பாடசாலையைச் சென்றடைந்த நேரம்?

   மு.ப...............................................

   ii. தமந்தி வீட்டிலிருந்து புறப்பட்டு பாடசாலைக்குச் செல்வதற்கு எவ்வளவு நேரம் செலவானது?

   ............... மணித்தியாலயம் ..................... நிமிடம்

02. நிவேதனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 5km 750m ஆகும். அவன் 1km 900m ஐ துவிச்சக்கர வண்டியிலும் மீதித்தூரத்தை பேருந்துவண்டியிலும் செல்வான். அவன் பேரூந்தில் பயணம் செய்யும் தூரம் யாது?

   ............Km .............m

03. தரப்பட்ட வாக்கியங்களை தொடர்வாக்கியமாக எழுதுக
   சிற்பம் ஒரு கலை. ஓவியம் ஒரு கலை.
   கட்டிட அமைப்பு ஒரு கலை.

04. சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிந்து வெற்றிடத்தில் எழுதுக
   i. தொழிலாளி நெற்றி ......................... நிலத்திலே சிந்த உழைத்தான்.
   (உழைத்தான் (வேருவை / வேர்வை / வியருவை/ வியர்வை)



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

---

## சிறுவர் முரசு



குட்டிக்கதை

## அறியாது செய்த நன்மை





ஒரு காலத்தில் இந்திரத்யும்னன் என்று ஒரு மாமன்னன் இருந்தான். அவன் ஆட்சி காலத்தில் மக்கள் போற்றும் வண்ணம் தான தர்மங்கள் செய்து, சிறப்பாக அரசாண்டு, நேரே சொர்க்கத்திற்குப் போனான். சொர்க்கபுரியின் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்த அவனை ஒரு நாள் சொர்க்கத்தின் "தல" கூப்பிடுவதாக தேவதூதன் வந்து சொன்னான். மன்னன் சென்று என்னவென்று கேட்ட போது "உனக்கு சொர்க்க வாசம் முடிந்து விட்டது. பூலோகத்திற்கு நாளை கிளம்பத் தயாரக இரு" என்று கட்டளை போட்டது "தல". ஏனென்று மன்னன் கேட்டான். "மன்னா, நீ கீழே போய் உனது நற்காரியங்களால் இன்னும் பலன் பெறும் ஒரு ஜீவனையாவது கண்டு பிடித்தால் உனக்கு சொர்க்கம் நீடிக்கப் படும்" என்று சொன்னது.

மன்னனும் கிளம்பிப் பூலோகம் வந்தான். யாரையும் அவனால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. மனதைத் தேற்றி நம்பிக்கையை ஏற்றிக் கொண்டு விடாமுயற்சியாகத் தேடி, இருப்பதிலேயே வயதான ஒரு மனிதரை சந்தித்தான். அவரிடம் "ஐயா! உமக்கு இந்திரத்யும்னன் என்று இந்தப் பகுதியை அரசாண்ட மன்னனைப் பற்றித் தெரியுமா?" என்று ஆர்வத்துடனும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் கேட்டான். வயோதிகர் இடுங்கிய கண்களால் அவனை மேலும் கீழும் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கி விட்டார். "வேண்டுமானால் என்னை விட வயதான ஆந்தை ஒன்று பக்கத்து மரப் பொந்தில் உள்ளது. அதனிடம் போய்க் கேள்" என்று சொல்லி விட்டார்.

தலையை முதுகுப் பக்கம் வைத்து ஒரு இரையைக் குறி வைத்துக் கொண்டிருந்த ஆந்தையிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். இரையைத் தப்ப விட்ட எரிச்சலில் ஆந்தை "எனக்குத் தெரியாது. இங்கே ஒரு கிழட்டு நாரை திரியும். வேண்டுமானால் அதைக் கண்டு பிடித்துக் கேள்" என்று சொல்லி விட்டு போய் விட்டது.

காலையில் அலைந்து திரிந்து நாரையைக் கண்டு பிடித்தான். அதனிடம் கேட்டபோது. "எனக்கு நினைவில்லை. ஆனால் பக்கத்து ஏரியில் ஒரு ஆமை கிடக்கிறது. அதற்கு நினைவிருக்க வாய்ப்பிருக்கிறது" என்று நம்பிக்கையை வளர்த்தி விட்டது. மன்னன் ஏரியைத் தேடி ஓடினான். அங்கே வயதான ஆமையைப் பார்த்தான். மன்னன் அதனிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். ஆமை உடனே "ஆமாம். அவனால்தான் இந்த ஏரியும் இருக்கிறது, இவ் உயிரினங்களும் நன்றியுடன் உயிர் வாழ்கின்றன" என்று சொன்னது. அப்போது மன்னன் "நானேதான் அந்த இந்திரத்யும்னன்! எனக்கு இந்த ஏரியை ஏற்படுத்தியதாக நினைவில்லையே." என்று நம்பிக்கை இழந்து போய் ஆமையிடம் சொன்னான். ஆமையும் "நீ அரசாண்ட போது மக்களுக்குத் தினமும் தானமாக வழங்கிய பசுக்களை மக்கள் இந்தப் பகுதியிலுள்ள புல் தரையில் மேய விட்டார்கள். மாடுகள் தினமும் அலைந்து திரிந்து தன் குளம்புகளால் மண்ணைக் கிளப்பி விட்டதால் இந்தப் பகுதி நாளடைவில் பள்ளமாகப் போய் விட்டது. மழை பெய்து நீர் பிடித்ததால் ஏரியாக மாறிவிட்டது. இத்தனை நாள் நன்றியுடன் வாழ்ந்திருக்கிறேன். பல உயிரினங்களும் வாழ்கின்றன." என்றது.

தூரத்தில் சொர்க்கபுரி விமானம் வருவது

- நாம் அறியாது செய்யும் சிறு நன்மையும் கூட நன்மை பயக்கும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்திக்க .. ..**
நீ சுமக்கின்ற நம்பிக்கை
நீ கீழே விழும் போது
உன்னை சுமக்கும்...

## பண்புடன்!

தாமரைத்தீவான்
ஈச்சந்தீவு- கிண்ணியா

செல்லங்களே எழும்புவீர்,
திறந்திடுவீர் கண்களை!
பல்விளக்கிக் குளிக்குமுன்
பல கடன் கழிப்பிரே!

உண்ணுவீர் - உடுத்துவீர்,
உங்கள் தோழரோடுமே
பண் ஒலிக்கும் பள்ளியை
பாடிச்சென்றடைவிரே!

படிக்கவேண்டும் பாடமே,
பழக வேண்டும் பண்புடன்!
முடிக்க வேண்டும் யாவுமே,
முதகில் கொண்டு வாருமே!

உணவை உண்டிருந்த பின்
ஓடியாடப் பொழுதுபோம்!
மணக்கும் இரவு மல்லிகை,
மனதுள் கற்று உறங்குவீர்!

## பொது அறிவு - 23

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. 2014இல் மையில்லா புதிய வகைப் பேனாவை அறிமுகப்படுத்திய நாடு எது?
   இத்தாலி

02. சிகிரியாவிற்கு அண்மையில் அமைக்கப்பட்ட 96 அறைகள் கொண்ட விடுதியின் பெயர் யாது?
   அலியா ரிசோட்

03. ஆடைக் கைத்தொழில் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் சராசரி வருமானம் எவ்வளவு?
   $4.5 பில்லியன்

04. BRICS வங்கி உருவாக்கத்தின் போது இடப்பட்ட முதலீடு எவ்வளவு?
   100 பில்லியன் டொலர்

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

-சேனையூர் நிரூபர்-

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட வரோதயநகர் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் 16.05.2015 அன்று வரோதயநகர் பாரதி வித்தியாலயத்தில் இடம் பெற்றபோது இந்நிகழ்விற்கு அதிதிகளாக கிழக்கு மாகாணசபையின் உறுப்பினர் ஜெ.ஜெனார்தனன் மற்றும் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் திரு.அருந்தவராஜா திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டிருப்பதையும் நிகழ்வகளையும் படங்களில் காணலாம்.









## உபகரணம் வழங்கும் நிகழ்வு

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் வசிக்கும் விஷேட தேவையுடையோருக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாநகர சபையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண அமைச்சர்களான எம்.ஐ.எம்.மன்சூர், தண்டாயுதபாணி, ஆரியபதி கலபதி, துரை ராஜசிங்கம், மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.





ரபைதீன்

## சைக்கிள் வழங்கி வைப்பு



கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரையப்பா நவரெட்ணராஜாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், வறிய நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் கடந்த 18.05.2015 அன்று பிரதேச செயலாளர் வி.ஜெகதீசன் தலைமையில் இடம்பெற்றது.

வறிய மாணவர்களின் அவசியத்தேவை கருதி வழங்கப்பட்ட 12,500 ரூபாய் பெறுமதியான துவிச்சக்கரவண்டிகளை ஆலையடிவேம்பு பிரதேச மாணவ, மாணவிகள் 20 பேர் பெற்றுக் கொண்டனர்.

## மக்கள் முரசு

### வைகாசிப் பொங்கலை முன்னிட்டு

## சேனையூர் ஸ்ரீ நாகம்பாள் ஆலயம்

நாட்டிலுள்ள ஆலயங்களின் வரலாறுகளின் பல அற்புதங்களையும் தெய்வீக அனுபவங்களையும் அருட்காட்சிகள் பற்றியும் கேள்விப்படுகின்றோம். அவை புராணங்களாகவும் கர்ணபரம்பரை கதைகளாகவும் ஒளி ஒலி செய்தி ஊடகங்கள் வாயிலாகவும் எம்மை வந்தடைகின்றன. அவற்றை அறிந்து பார்த்து மெய்சிலிர்க்கின்றோம். அவ்வாறான தெய்வீக அனுபவங்களை நாமும் பெறமாட்டோமா? எங்கள் கண்முன்னே அவைகள் நிகழாதா? என ஏங்குகிறோம். ஆனால் அவ்வாறான அற்புத நிகழ்வுகள் ,ப்போதும் நிகழ்த்திக் கொண்டுதான் ,ருக்கிறது.

கலியுகத்தில் கண்கண்டதெய்வம் எனநடமாடும் தெய்வமென அற்புதங்கள் வழங்கி அருள்மழை பொழிபவள் தான் நாகம்மாள். ,வ்வாறான புகழுக்கும் போற்றுதலுக்கும் பெயர்போன ஆலயம் தான் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கு பிரதேசத்தில் கட்டைபறிச்சான் வடக்கு பகுதியில் ,யற்கைஎழில் சூழவிளங்கும் சேனையூர் திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலயமாகும். ,வ்வருட ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா எதிர்வரும் 31.05.2015 ஞாயிற்றுக்கிழமையாகும். மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது. இப் பொங்கல் விழாவுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருமளவில் பக்த அடியார்கள் வரக்கூடும் என ஆலய நிர்வாகம் எதிர்பார்த்து அதற்கேற்ப ஆலயபொங்கல் விழாப்பணிகளை ஆவ்வமுடன் முன்னெடுத்து வருகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

பரந்த நிழல் பரப்பி ஆலய முன் முகப்பில் விழுதுகள் விட்டு காட்சி தரும் ஆலமரத்தை தலவிருட்சமாக கொண்ட ,வ் ஆலயம் சுற்றி வர வெண் மணல்கள் பரவியுள்ளது. பக்கமெல்லாம் குருந்தை, பாலை, நெய்கொட்டை, விண்ணாங்கு, வேம்புமரங்கள் நிரல் பரப்பிநிற்கும் இயற்கை எழில் சூழ்ந்த அழகிய ,டத்தில் அமைந்திருப்பதும் அற்புத காட்சியாகும். ,வ் ஆலய அமைப்பை பற்றி பாடிய கும்மிப்பாடலில் ஒன்றை குறிப்பிடுவது பொருத்தமென்று எண்ணுகின்றோம்.

பாலை குருந்தையும்
பாக்குடன் ஆலையும்
பக்கமெல்லாம் மரஞ்சோலைகளும்
கூடியே வீதியேக்கூடாரம் போல் சுற்றி
கூட்டமாய் நிற்பதை பாருங்கடி

புலவரின் வரிகள் ஆலயம் அமைந்துள்ள பதியின் அழகை சித்தரிக்கிறது. அல்லவா? ,ற்றைக்கு 111 வருடங்களுக்கு மேலாக ,வ்ஆலயம் வரலாற்றுச் சிறப்புடன் பக்திபூர்வமான பூசை நிகழ்வுகளுடன் வாராந்தம் ஞாயிறு நாட்களிலும் வருடாந்தம் வைகாசிமாதம் விசாக நட்சத்திரத்தை அண்டிவரும் பூரணை தினத்தினை ஒட்டியும் வரும் பூர்வபட்சம் வளர்பிறையில் வரும் ஞாயிறுதினத்தில் வருடாந்த பொங்கல் விழா பெருவிழாவாக நடைபெற்றுவது ஆலயம் தோன்றியகாலம் முதலாகும்.

அந்தவகையில் இவ்வருடமும் அமைதியான சூழலில் சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயபொங்கல் விழா 31.05.2015 ஞாயிற்றுகிழமை மிகேகோலாகலமாக நடைபெற ஏற்பாடாகி வருகிறது. பாம்புக்கோயில்களில் பிரசித்தி பெற்றதாக கிழக்கிலங்கையிலே மிகவும் அற்புதமாக பேசப்படும் இக் கோயில் வரலாறும் அதன் மகிமைபற்றியும் யாழ்ப்பாணம் சித்தன் கேணிபண்டிதர் த.சுப்பிரமணியம் அவர்களால் நாகதம்பிரான் மான்மியம் என்ற நூலில் எழுதப்பட்டுள்ளதையும் திருகோணமலை பண்டிதர் ,. வடிவேல் அவர்கள் திருகோணமலை மாவட்டகோயில் வரலாறுகளில் இவ் ஆலயமும் சேர்க்கப்பட்டிருப்பதையும் ,வ் ஆலயத்தின் புகழ் பரவுவதற்கு காரணமாய் அமைந்திருப்பதையும் குறிப்பிட்டாகவேண்டும்.

ஆகமரீதியான கோயில் அமைப்போ ஆகமமுறையான பூசைகளோ இவ் ஆலயத்தில் இல்லை. ஆலய மூலஸ்தானம் சிறிய ஆசிவடிவிலானது. இதுவே 111 வருடங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டதாகும். அது அப்படியேதான் இன்னும் இருக்கிறது. அதன் பின்புறம் ஒருபுற்றும் அதனைசுற்றி ஒருவில் வளைவுடனான சுற்றுமதிலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த மதிலுக்குள் அமைந்துள்ள புற்றுவாயிலாகவே ஆலய அர்ச்சகர் நாகம்மாளுக்கு பால் பலக்[illegible] இப் பால்[illegible] பழப்பூசை காண வாரஞாயிறுநாட்களிலும் வருட வைகாசிப் பொங்கல் நாளிலும் முண்டியடிக்கும் பக்தர்கள் அனேகர்.



அருள் உள்ளோருக்கு கண்களுக்கு நாகதெய்வம் அருட்காட்சி கிடைப்பதுண்டு. 'நாகதெய்வத்தை கண்டவர்கள் அருட்பேறு பெற்றவர்கள் தான் என்றால் அதுமிகையல்ல.

"சேனையூர் பதிக்கே வாருங்கள் - ஸ்ரீ
நாகம்மாளை போற்றுங்கள்
தேனாய் ,னிக்கப் பாடுங்கள் - தேவி
தரிசனம் தருவாள் பாருங்கள்"

என சேனையூர் கவிக்குயிலன் சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் மீதுபாடிய பாடல் வரி மூலம் அம்பாளின் தரிசனம் பற்றியசிறப்பு சொல்லப்பட்டுள்ளதைஅறியலாம்.

,வ் ஆலயத்தில் மூல மூர்த்தியாக நாகசிலையும் எழுந்தருளியாக அன்னை புவனேஸ்வரி 05 தலைநாகம் குடைபிடித்தால் போல் காட்சிதர அபயவரதம் காட்டி எழுந்தருளியுள்ளார். ,ங்கே வரசித்திவிநாயகர் சூரியநாராயணர் ஆஞ்சனேயர் வைரவமூர்த்தி, ஆகியதெய்வங்கள் வெளிப்புரங்களிலும் ஆலய உட்புறவாகத்திலும் சக்திவேலன் சந்தானகோபாலசுவாமியும் உண்டு. ஆலயஅர்ச்சகர் மஞ்சள் நிறதுணியினால் வாய் மூக்கு காதுகளை கட்டிக் கொண்டே நாகதேவிக்குறிய பலபூசை வழிபாடுகளையும் செய்துவருகின்றார்.

சற்பம் தீண்டியவர்களுக்கும் விசசம்மந்தமான பிணியாளர்களுக்கும் திருமணத்தடை புத்திரபாக்கியமற்றோருக்கும் விசேடமான தோஷ பரிகாரங்கள் அர்ச்சகரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நினைத்தகாரியங்கள் நிறைவேற்றவும் நேர்த்தி வைத்த அடியார்கள் நிறைவேற்றுவதை நிறையகாணலாம். ,வ் ஆலயத்தில் கட்டப்படும் மஞ்சள் நிறவேளை நூலுக்கு மிகவும் மகத்துவமுண்டு என அடியார்கள் தெரிவிக்கின்றனர்.

– அ.அச்சுதன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில் இயல்பு...

ஆசிரியர் சங்கம், திருகோணமலை மாவட்ட தமிழ் சிவில் சமூக அமைப்பு, இலங்கை முஸ்லிம் ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை சனநாயக ஆசிரியர் சங்கம் ஆகியன கூட்டாக இணைந்து விடுத்த கோரிக்கைகளை ஏற்று கிழக்கின் பெரும்பாலான பாடசாலைகள் இன்று மூடப்பட்டிருந்தன.

இதேவேளை திருகோணமலையில் வர்த்தகர்கள் பலரும் தமது சுயவிருப்பின் பேரில் கடைகளை அடைத்து இந்தப் போராட்டத்திற்குத் தார்மீக ஆதரவை நல்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் இயங்கும் நாம் திராவிடர் அமைப்பானது மேற்கூறப்பட்ட நான்கு அமைப்புக்களினதும் கோரிக்கைகளுக்கு மேலும் வலுச் சேர்க்கும் முகமாக கடையடைப்பைக் கோரியிருந்தது. அக்கோரிக்கையை ஏற்று மட்டக்களப்பில் வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததாக அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை பகிஷ்கரிப்பானது வெற்றிகரமாக நிறைவடைந்ததை அடுத்து கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் ஏனைய அமைப்புக்களின் சார்பில் அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆசிரியர் சி.ஜெயராசா அவர்கள் இந் நன்றியைத் தெரிவிக்கையில் மானுட குலத்திற்கு எதிரான இந்நடவடிக்கையைத் தமிழ் சமூகம் என்ற பொதுமைப்பாட்டில் எதிர்க்கவேண்டிய கடப்பாட்டினாலேயே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் அதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

## திருகோணமலை.....

கடற்கரையில் உள்ள தியாகிகள் மண்டபத்தில் பொது நினைவேந்தலைச் செய்வதற்கான ஏற்பாடுகளைத் திருகோணமலைத் தமிழ்ச் சிவில் சமூகம் முன்னெடுத்திருந்தது.

அதற்காக தியாகிகள் மண்டபத்தினை நகரசபையின் அனுமதியூடாகப் பெற்றிருந்த தமிழ்ச் சிவில் சமூக அமைப்பினருக்கு அங்கு நடத்துவதற்கான அனுமதியை வழங்க காவல்துறை மறுத்திருந்தமை குறிப்பிடத்- தக்கது.

சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டியே இம் மறுப்பு விடுக்கப்பட்டதாக தமிழ் சிவில் செயற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தனர்.

எனினும் கடற்கரைக்கு முன்பாகவுள்ள எகெட்-ஹரித்தாஸ் நிறுவனத்தின் முன்றலில் பொது நினைவேந்தல் நடாத்தப்பட்டது. மலைமுரசின் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந் நினைவேந்தலில் திருமறை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள், வண. அடிகள் யோகேஸ்வரன், பிரபாகர், சுஜி, நிதி மேலும் சில வண. அடிகளார்களும் பொது மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

யுத்தத்தின் இறுதியில் தமிழ் மக்கள் உண்ண உணவின்றி இருந்ததை நினைவுகூர்வதற்காக நிகழ்வின் இறுதியில் உப்பற்ற அரிசிக் கஞ்சி அனைவருக்கும் வழங்கப்பட்டது.

## தமிழ்த் தேசிய....

இதனைத் தெரிவித்- திருந்தார்.

ஸ்ரீலங்காவில் தற்போதுள்ள அரசாங்கத்தைக் காப்பதற்காக மேற்குலகும், அமெரிக்காவும் கடுமையான எத்தனங்களைச் செய்து வருகின்றது.

அவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது இலங்கைத் தமிழர்களுக்கு சிறிலங்காவில் எவ்வித பிரச்சனைகளும் இல்லை என்பதை வெளிக்காட்ட வேண்டிய தேவைகள் இருக்கின்றன. தமிழர்களுக்கு உள்ள பிரச்சனைகளை மூடிமறைக்க சிங்களக் கட்சிகள் மட்டுமின்றி தமிழ்க் கட்சிகளையும் துணைக்கு வைத்துக்கொண்டே இந் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த நிலையில் உண்மையிலேயே தமிழர்கள் தற்போதும் முகாம்களில் இருப்பதையும் அவர்களுக்கான வாழ்விடங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் அவர்கள் தற்போது வரை மீளக்குடியமர்த்தப்படவில்லை என்பதையும் உலகிற்கு வெட்டவெளிச்சப் படுத்தியது பிறேம்குமாரின் போராட்டம்.

இப்போராட்டம் தமிழர்களின் தேசிய இருப்பைத் தக்கவைத்துக்- கொள்வதற்கான போராட்டமாகவே கருதப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவிப்பின் ஊடாக விடுவிக்கப்பட்ட காணிகள் காடுகளாகக் காணப்படுகின்ற போதிலும் அவற்றைச் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மக்களை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சென்று சந்தித்து உரையாடியிருந்தார்.

## மீள்குடியேற்றப்...

நடைபெற்ற இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர், உறுப்பினர்கள் ஜெனார்த்தனன், நாகேஸ்வரன் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள். திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டம் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த கி.மா.ச. உ. ஜெனார்த்தனன் சம்பூர் மீள்குடியேற்றத்திற்கு மாகாண சபையின் திணைக்களங்களங்களினால் ஆற்றக்கூடிய பங்களிப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்றும் திணைக்களத்திற்கு ஒருவர் வீதம் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அக்குழு எதிர்வரும் திங்கட்கிழமை சம்பூருக்கு சென்று கள அறிக்கையைத் தயாரிக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப் பட்டதாகவும் மக்களின் உடனடிதேவையினை பூர்த்தி செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு ஏழு அலுவலக நாட்களுக்குள் பருமட்டான திட்டத்தைச் சமர்ப்பித்து எதிர்வரும் ஜூன் நான்காம் திகதி இடம்பெற இருக்கும் கூட்டத்தில் அது ஆராயப்படும் என்றும் தெரிவித்தார்.

தற்போது தமது காணிகளுக்கு சென்று சுத்தமாக்கும் மக்களுக்கு வழங்கவேண்டிய அடிப்படை உதவிகள் செய்வது எனத் தீர்மானிக் கப்பட்டது.

## நீராடிய.....

இன்று வேலைகளை முடித்து விட்டு நீராடிய போதே இவ் அணர்த்தம் இடம் பெற்றதாக குறித்த வேளையில் வந்த மற்றொரு இளைஞர் தெரிவித்தார்.

## தமிழில் தேசிய...

பத்தக்குட்டி சுமன் (வயது 30) மீது சிங்கள மாணவர்கள் தாக்குதலை நடாத்தியிருந்தனர்.

தேசிய கீதத்தைத் தமிழில் ஒலிபரப்பியது தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து இவர்

## நடக்க வேண்டிய...

இடைக்காலத் தடை தற்போது இல்லை. தடை இல்லாத சூழலில் நடைபெற வேண்டிய விடயங்கள் நடைபெற வேண்டும். அவ்வளவே" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

சம்பூர் காணிகளை விடுவிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலின் மீதான இடைக்காலத் தடையை நீடிக்காமலிருந்ததை அடுத்து ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தார்

## மாவட்டப் பெண்கள்.....

தபால் நிலையச் சந்தியின் ஊடாக உட்துறைமுக வீதி வழியே ஆளுனர் அலுவலகத்தை நோக்கிச் செல்லும் என அவ்வமைப்பின் பேசவல்ல அதிகாரியான வினுசியா மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

புங்குடுதீவு வன்புணர்வுக் கொலைக்கான கண்டன அறிக்கையை ஊடகங்களுக்குக் கையளித்துப் பேசிய வினுசியா பெண்கள் மீதான இவ்வகையான வன்முறைகளைத் தமது அமைப்பு கடுமையாக கண்டிப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் பெண்கள் மீதான வன்முறைகள் ஒரு வியாதியாகப் பரவியுள்ளதாகவும் அதனைத் தடுப்பதற்காக தற்போது நல்லாட்சியின் பெயரில் உருவாகியுள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நடைபெறும் கண்டனப் பேரணிக்கு தார்மீக ஆதரவை வழங்குமாறு அனைவரையும் திருகோணமலை மாவட்டப் பெண்கள் வலையமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சம்பூரிற்கு.....

சந்திப்பொன்றை நடாத்துவதற்காகச் சென்றிருந்தார். அவருடன் திருகோணமலை தமிழ் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள், வண. அடிகள் பிரபாகர் மற்றும் மலைமுரசின் ஆசிரியர் இரா. ஸ்ரீஞானேஸ்வரனும் சென்றிருந்தார்.

உண்ணாவிரதத்தை முடித்துக்- கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றிருந்த பிறேம்குமார் அங்கு வருகைதந்திருந்ததை அடுத்து ஆயர் மக்களின் போராட்டம் தொடர்பாக மக்களுடன் பேசினார்.

இக்கலந்துரையாடல்களின் போது மறுநாட்காலை மக்கள் சம்பூருக்குச் செல்லவிருப்பதாகவும் அதனைத் தடுக்க ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமானால் அவற்றை நீக்க வேண்டும் என்றும் மக்கள் ஆயரை வேண்டியதை அடுத்து சம்பூர் கடற்படைக் கட்டளை அதிகாரி கப்டன் டயஸ் மற்றும் காவல்துறை ஆய்வாளர் ஆகியோருடன் இவ் விடயம் தொடர்- பாக ஆயரும் குழுவினரும் உரையாடியிருந்தனர்.

## சம்பூர் போராட்ட....

கடந்த 18ம் திகதி அதிகாலையிலேயே கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமின் வாயிலில் அமைக்கப்பட்ட சிறிய பந்தலில் தவராசா பிறேம்குமார் தனது உண்ணாநோன்பினை அரம்பித்திருந்தார்.

இவ்வுண்ணா நோன்பானது சம்பூர் பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலன சபையின் பூரண ஆதரவுடனும் சம்பூர் மக்களின் முழுமையான ஆதரவுடனும் மக்களால் முன்னெடுக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வுண்ணா நோன்பு தொடர்பாகத் தகவல்களைப் பெற்றுக்கொண்ட தமிழ் சிவில் சமூக அமைப்பினர் அங்கு சென்று ஆதரவளித்ததுடன் போராட்டத்தைப் பல்வேறு இடங்களுக்கும் அறியத்தந்து தீர்வைக் காண்பதற்கான அழுத்தங்களை உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

அதேவேளை சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களில் ஒருவரும் மலைமுரசு பத்திரிகையின் ஆசிரியருமான இரா.ஸ்ரீஞானேஸ்வரன் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் அவர்களுக்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் "மே 18ம் நாளான நேற்று நாம் இழந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை எங்கள் தேசமெங்கும் நினைவுகூர்ந்த பொழுது இனி எவ்விதமான உயிர்பலியும் நிகழக் கூடாது என எல்லாம் வல்ல இயற்கையிடம் மன்றாடியிருந்தோம்.

எனவே தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ள உண்ணாநோன்புப் போரை முடிவிற்குக் கொண்டு வர உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய வலு உங்களுக்கே இருக்கின்றது. சனாதிபதியுடன் தனிப்பட்ட முறையில் பேசவும், தேசிய நிறைவேற்றுச் சபையைக் கூட்டித் தீர்வைக் காணவும், அமைச்சரவைக்கு அவசர அறிவிப்பொன்றை மேற்கொண்டு சம்பூர் காணிகளை விடுவிக்கவும் அதிகாரம் கொண்டிருப்பவர் நீங்களே!

அத்துடன் இந்தியாவிடம் பேசக்கூடிய வல்லமையைக் கொண்டுள்ள நீங்கள் சம்பூர் காணிகள் தொடர்பாக இந்தியாவிடம் உடனடியாகப் பேசவேண்டிய தருணம் இதுவென்றே நான் நினைக்கின்றேன். இந்தியாவிடமிருந்து அழுத்தம் இலங்கை அரசின் மீது பிரயோகிக்கப்- படுமாயின் உடனடியாகவே காணிகள் விடுவிக்கப்படும் என்பது திண்ணம். எனவே உயிர்ப்பலிகள் இன்றி இப் போராட்டத்தைச் நிறைவு செய்ய வேண்டிய தலையாய கடப்பாடு உங்களுக்கே உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன் தயவு செய்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு" கோரியிருந்தார்.

அதேவேளை சம்பூர் மக்கள் எதிர்கொண்டுள்ள நிலையினை அனைத்து நாடுகளுக்கும் எடுத்துச் சொல்வதற்கான கடிதமொன்றைத் தயாரித்து அதனை உண்ணா நோன்பிருந்த பிறேம்குமார் அவர்களின் கையெழுத்துடன் அனைத்துத் தூதுவராலயங்களுக்கும் திருகோணமலைத் தமிழ் சிவில் சமூக அமைப்பு அனுப்பிவைத்திருந்தது. சிவில் சமூக அமைப்பின் சார்பில் வண. பிரபாகர் அடிகள் மற்றும் வண. சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் ஆகியோரும் இந் நடவடிக்கைகளில் பங்காற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மரணித்தும் வாழும் உயிர்கள்

கடந்தவார தொடர்ச்சி .. ..

அன்றாடம் உண்ண உணவில்லாமல் வாடும் அவரிடம் சென்று ஒரு கோடிப் பணம் வேண்டும் என்று கேட்டால் ஒன்று, அவரைக் கிண்டல் பண்ணுவதாக எடுத்துக் கொள்வார். அல்லது கேட்பவரைப் பைத்தியமாகப் பார்ப்பார்கள்.

உயிருடன் இயங்கிக் கொண்டிருப்பவரிடமே எதைக் கேட்க முடியுமோ எதை அவரால் செய்ய முடியுமோ அதை மட்டுமே கேட்க வேண்டும் என்றிருக்கும் போது, மகான்களின் மண்ணறைகளில் மண்டியிட்டு பிள்ளைப் பாக்கியத்தையும், நோய் நிவாரணத்தையும் கேட்பது எப்படி அறிவுப் பூர்வமாக அமையும் என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இவர்கள் யாரிடம் உதவி தேடுகின்றார்களோ அவர்கள் பூமிக்கு மேலே உயிருடன் இருந்தால் கூட இவற்றைக் கேட்க முடியாது எனும் போது பூமிக்குக் கீழே இறந்து போன நிலையில் இருப்பவர்களிடம் எப்படிக் கேட்க முடியும்!? உயிர்த்தியாகிகள் கூட சுவர்க்கத்தில்தான் உயிருடன் உள்ளனர் மண்ணறைகளில் அல்ல என்பது கவனிக்கத் தக்கதாகும்.

அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் செய்வதை ஊக்குவிப்பதற்காக அருளப்பட்ட இந்த வசனங்களைத் தமது தவறான கொள்கைக்கு ஆதாரமாக இவர்கள் முன்வைக்கின்றனர். இவர்களின் இந்தச் செயற்பாட்டிற்கும் இந்த வசனங்களுக்கும் எள்ளளவு கூட சம்பந்தம் இல்லை என்பதே உண்மையாகும்.

முற்றும் .. ..

– இஸ்லாம்கல்வி –

# கத்தோலிக்கம் ஒரு மேலோட்டம்



ஒரு மீட்பரை எதிர்பார்த்திருக்கும் யூதர்கள் மத்தியில், யூதராய் தோன்றுகிறார் இயேசு. இவர் பிறப்பு கி.மு 6 முதல் 4க்குள் இருந்திருக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது. இளம் போதகராய், யூத மத குருக்களை வெளிப்படையாக கண்டிக்கிறார். அவரின் போதனைகள் மனிதம் சார்ந்ததாக இருக்கின்றன அமைப்பு சார்ந்ததாக இல்லை. மோயீசனின் பத்து கட்டளைகளை சுருக்கி, "எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை நேசி தன்னைத்தானே நேசிப்பது போல பிறரையும் நேசி" என்கிறார். ஒருவருக்கொருவர் அன்பு செய்வது, பகைவரை மன்னிப்பது, கடவுளின் அளவில்லா இரக்கம், பாவத்திற்கு மன்னிப்பு இவையே இயேசுவின் முக்கிய போதனைகளாயிருந்தது. வெறும் போதனைகள் மட்டுமில்லாமல் சில அற்புதங்களையும் இயேசு செய்கிறார். இவர் இறைமகன் என பலரும் சொல்ல இந்த அற்புதங்கள் உதவுகின்றன.

துநளரள யனெ னளைஉனிடநளஇயேசு 12 சாதாரண மனிதர்களை (அதிகம் மீனவர்கள்) தன் சீடர்களாகத் தேர்ந்தெடுத்து தன் செய்தியை பரப்ப அவர்களை தயார் செய்கிறார். இவர்களில் ஒருவரான தோமையார்(தாமஸ்) சென்னை வந்து, இங்கே கொல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளார். சாந்தோம் தேவாலையத்தில் இவரது கல்லறை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இயேசு தன் சீடர் இராயப்பரை(பீட்டர்) சீடர்களின் தலைவராக நியமிக்கிறார். "நீ இராயப்பர். உன் மீது என் திருச்சபையை கட்டுவேன்... விண்ணரசின் திறவுகோல்களை உன் கையில் கொடுப்பேன்" என்கிறார் இயேசு.

தொடரும் .. ..

www.tamiloviam.com

# புற்றுநோய் கட்டுப்பாடு



கண்ணை கவரும் நிறத்தில் இருக்கும் பப்பாயா உடலுக்கு ஆரோக்கியமான நன்மைகளை வழங்குகிறது. இத்தகைய அதிகமான அளவு ஆன்டி- ஆக்ஸிடன்ட்கள் இருப்பதால், அவை உடலில் இருக்கும் கொலஸ்ட்ராலை கரைக்கின்றன. பப்பாளியை சாப்பிட்டால் மலச்சிக்கல் இருந்தாலும் சரியாகிவிடும். பப்பாளியில் இருக்கும் நொதிப்பொருள் மற்றும் நார்ச்சத்துக்கள், குடல் இயக்கத்தை சரியாக இயக்குவதால் செரிமானம் எளிதில் நடைபெற்று மலச்சிக்கலும் குணமாகிறது. பப்பாளியில் உடலில் ஏற்படும் அலர்ஜியை எதிர்த்து போராடும் பண்புகள் இருக்கின்றன. அதனால் தான் உடலில் எரிச்சல் அல்லது புண் இருந்தால் பப்பாளியை சாப்பிடுகின்றனர். மேலும் மூட்டுவலி அல்லது ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பப்பாளி ஒரு சிறந்த மருந்தாகும்.

பப்பாளியில் இருக்கும் பலவித பண்புகளோடு புற்றுநோயை குணப்படுத்தும் பொருளும் இருக்கிறது. இதில் இருக்கும் நார்ச்சத்து, புற்றுநோய் உண்டாக்கும் டாக்ஸின்களை உடலில் இருந்து முற்றிலும் வெளியேற்றி, வயிற்றில் ஏற்படும் புற்றுநோயை தடுக்கிறது. இதில் இருக்கும் போலேட், வைட்டமின் சி, பீட்டா-கரோட்டீன் மற்றும் வைட்டமின் ஈ ஆகியவையும் புற்றுநோய் உண்டாக்குவதை தடுக்கும் சத்துக்களாகும்.



# இறால் பிரியாணி

**தேவையான பொருட்கள்**

பச்சரிசி - அரை கிலோ, இறால் - கால் கிலோ, வெங்காயம் - கால் கிலோ, தக்காளி - மூன்று, பச்சைமிளகாய் - நான்கு, பூண்டு - பத்து பல், இஞ்சி - 2 அங்குல துண்டுகள், மிளகாய்தூள் - 3 தேக்கரண்டி, மஞ்சள் தூள் - ½ தேக்கரண்டி, எண்ணெய் - 1 குழி கரண்டி, நெய் - 2 மேசை கரண்டி, கறிவேப்பிலை - 1 கொத்து, கொத்தமல்லி - 1 பிடி, புதினா - 1 பிடி, உப்புதூள் - 2 தேக்கரண்டி, பட்டை - 2 துண்டுகள், பிரிஞ்சி இலை - 2 எண்ணிக்கை

**செய்முறை**



முதலில் போட்டு நன்கு வதக்கவும். பொன்
பச்சரிசியை கழுவி நிறமாக வதங்கியதும் தட்டி வைத்துள்ள
வடித்து இஞ்சி பூண்டு, மிளகாய்தூள்,
கொள்ளவும். மஞ்சள்தூள், உப்புதூள் போட்டு நன்கு
இறாலை நன்கு கிளறவும். அரை கோப்பை தண்ணிர்
சுத்தம் செய்துக்கொள்ளவும். ஒரு ஊற்றி வேகவைக்கவும். மசாலா தொக்கு
அகலமான பாத்திரத்தை அடுப்பில் போல் ஆன உடன் கொத்தமல்லி,
வைத்து எண்ணெய்யை ஊற்றவும், புதினாவை போட்டு கிளறவும். பிறகு
காய்ந்ததும் வெங்காயம் தக்காளி, வடித்து வைத்துள்ள சோற்றை கொட்டி,
பச்சைமிளகாய் ஆகியவற்றை நெய்யை ஊற்றி நன்றாக கிளறிவிட்டு
நீளவாக்கில் நறுக்கிப் போடவும். பிறகு இறக்கி வைக்கவும். சுவையான இறால்
பட்டை, கறிவேப்பிலை, இறாலை பிரியாணி தயார்.

# அழகு கொஞ்சும் முகம் வேண்டுமா?

**அழகு குறிப்பு**

இன்றைய இளம் பெண்கள் தங்கள் சருமத்தை அழகாக்க அழகு பொருட்களால் தங்கள் முகம் அழகை கெடுப்பதைவிட, வீட்டில் இருந்து செய்யக்கூடிய இந்த ∴பேஸ் பேக்கை பயன் படுத்தி சருமத்தை பொலிவாக்கலாம்.



தேவையான பொருட்கள்:

கடலை மாவு - இது சருமத்தில் பருக்கள் வருவதை தடுத்து சருமம் கருமை அடைவதை தடுக்கிறது.

வெள்ளரிக்காய் - இது வெயில் காலத்தில் சருமத்தில் வேர்குரு வருவதை தடுக்கிறது.

கேரட் விழுது - இது சருமத்தின் ஆரோக்கியத்தை காக்கிறது. மேலும் சூரியனின் கடுமையான கதிர் வீச்சில் இருந்து தோலையும், தோல் திசுக்களையும் பாதுகாக்கிறது.

தேன் - இது சருமத்தை சுத்தப்படுத்த உதவுகிறது. மேலும் சருமத்தை பளபளப்பாகவும், மென்மையாகவும் வைத்திருக்க உதவுகிறது.

குளிர்ந்த பால் - இது தோலில் உள்ள இறந்த செல்களை நீக்கி சருமத்தை பொலிவாக்குகிறது.

**செய்முறை:**

ஒரு கிண்ணத்தில் 1 கரண்டி கடலை மாவை போட்டு இதில் 1 கரண்டி வெள்ளரிக்காய், கேரட் விழுதை சேர்க்கவும். அடுத்து அதில் அரை கரண்டி தேன், 1 கரண்டி பால் சேர்த்து நன்றாக கலக்கவும். கலந்த இந்த பேஸ்ட்டை முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்த பின் குளிர்ந்த நீரால் முகத்தை கழுவி விடவும். இந்த பேஸ் பேக் போட்டிருக்கும் போது சிரிக்கவோ, பேசவோ கூடாது. அமைதியாக இருக்க வேண்டும். இந்த பேஸ் பேக் இயற்கை அழகுடன் உங்கள் சருமத்தை மிளிரச்செய்யும்.

# இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** :எவரிடமும் வெளிப்படையான மனதுடன் பழகுவீர்கள். பிரிந்த சொந்தங்கள் சேரும். உடன்பிறந்தவரால் உதவி உண்டு.



**ரிஷபம்** :மனச் சோர்வுக்கு இடம் தர வேண்டாம். வார்த்தையின் வசீகரத்தால், புதிய நண்பர்களைப் பெறுவீர்கள்.



**மிதுனம்** : செயலில் தெளிவு பிறக்கும். வளர்ச்சிக்குரிய வாய்ப்புகள் தேடி வரும். குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தியாகும்.



**கடகம்** : பொருளும், புகழும் கிடைத்து, எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும்.



**சிம்மம்**: மதி நுட்பத்துடன் செயல்பட்டு, வாழ்வை செம்மைப்படுத்துவீர்கள். புதியவர்களின் நட்பு, உதவி கிடைக்கும்.



**கன்னி** : புகழ் பெறுகிற எண்ணத்துடன் திட்டங்களை அமைப்பீர்கள். அடுத்தவர்களுடன் பேச்சைக் குறைக்க வேண்டும். பணத்தேவை அதிகரிக்கும்.



**துலாம்** : கதிட்டங்களை மாற்றியமைத்து, முன்னேற்றத்திற்கு வழிவகுப்பீர்கள். பணவரவுக்கு ஏற்ப செலவும் அதிகரிக்கும். உதவி உண்டு.




**விருச்சிகம்** :சோம்பலைத் தவிர்ப்பதால், நன்மை உண்டாகும்புகழ் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களை குறை சொல்ல வேண்டாம்.



**தனுசு** : நடக்காதோ என இருந்த வி'யங்களில், மாற்றம் உருவாகும். ஆர்வமுடன் பணிபுரிந்து, செல்வ வளம் பெறுவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.



**மகரம்** : இடம் உணர்ந்து பேசி, அனைவரது மதிப்பையும் பெறுவீர்கள். தாயின் தேவைநிறைவேற்றுவதால், குடும்ப ஒற்றுமை பலம் பெறும். சொத்துகளை பராமரிக்க அதிகம் செலவாகும்.



**கும்பம்** :செயல்கள் நிறைவேற துணையாக இருக்கும். குடும்பத்தேவையை நிறைவேற்ற பணம் செலவாகும். உடன்பிறப்பை குறை சொல்ல வேண்டாம்.



**மீனம்** : சமூகத்தில் அதிக மதிப்பு, மரியாதை ஏற்படும். மனமும், செயலும் புத்துணர்வு பெறும். தம்பி, தங்கையின் அன்பு, 'பாசம் நெகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### ஜூபிலியை முன்னிட்டு விளையாட்டுப் போட்டி

– சேனையூர் நிரூபர்–

பாலையூற்று லூர்து அன்னையின் ஜீபிலியை முன்னிட்டு திருக்கோணமலை, பாலையூற்று இளைஞர்களால் 4 நாட்களாக நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் போட்டிகள் 17.05.2015அன்று பரிசளிப்பு விழாவுடன் இனிதே நிறைவு பெற்றது. இப்போட்டிகளில் ஆனந்தபுரி, ஜமாலியா, சல்லி, பாலையூற்று செல்வநாயகபுரம், புளியங்குளம், திருக்கோணமலை மற்றும் பல பகுதிகளிலிருந்து தமிழ் சிங்கள மற்றும் முஸ்லிம் இளைஞர்கள் கலந்து கொண்டார்கள். 16க்கு மேற்பட்ட உதைப்பந்தாட்ட குழுக்களும் 20க்கும் மேற்பட்ட கிரிக்கட் கழகங்களும் இப்போட்டிகளில் கலந்து கொண்டன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதீதியாக திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினரும் கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சரின் இணைப்பாளரும், வர்த்தக மற்றும் கைத்தொழில்கள் சம்மேளன தலைவர் வ.கலைச்செலவன் அவர்களும் சிறப்பு அதீதியாக பாலையுற்று லூர்து அன்னை திருக்கோவிலின் பங்குத் தந்தை வணக்கத்துக்குரிய மதுரங்கன் குருஸ் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மேலும் அப்பிரதேசவாழ் மக்கள் மற்றும் அபிவிருத்தி சங்க, விளையாட்டு கழக தலைவர்கள் உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.







## கபடி சங்கம் உருவாக்கம்

மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் எம்.உதயகுமார், கடந்த சனிக்கிழமை (17.05.2015) அன்று இலங்கையில் தரமான கபடி வீரர்களைக் கொண்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் திகழ்வதாக தெரிவித்தார். மட்டக்களப்பில் 20வருடங்களுக்கு பின்னர் கபடி சங்கம் அமைக்கும் கூட்டம் மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது போது மட்டக்களப்பு மாவட்ட கபடி சங்கம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான நிர்வாகத்தெரிவும் நடைபெற்றது. இந்த நிர்வாகத்தின் புதிய தலைவராக மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம். உதயகுமார் தெரிவுசெய்யப்பட்டார். புதிய கபடி சங்கத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கபடி வீரர்களை ஒருங்கிணைத்து அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிவகைகள் எதிர்காலத்தில் இந்த சங்கம் மூலம் ஏற்படுத்தப்படவுள்ளது.

## சம்பியனானது சிவானந்தா பாடசாலை

"பொன் அணிகளின் சமர்" என வர்ணிக்கப்படும் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்துக்கும் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் சிவானந்தா தேசிய பாடசாலை அணி வெற்றிபெற்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இரு அணிகளுக்குமிடையே இடம்பெற்ற 22ஆவது பொன் அண்களின் கடின பந்து கிரிக்கெட் சமர் முதலாவது முறையாக வர்ண சீருடையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## பாலியல் இலஞ்சம் கோரினார்

இலங்கை கிரிக்கெட் மகளிர் அணி பணிப்பாளர் மற்றும் தேசிய தேர்வாளர்கள் பாலியல் இலஞ்சம் பெறுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் நிமல் திஸாநாயக்க தலைமையிலான குழு விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்கவிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இது தொடர்பில் ஆராய 2014ஆம் ஆண்டு அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே விசாரணை குழுவொன்றை நியமித்தமை குறிப்பிடத்தக்கது.



## சர்ச்சையான அசாருதீன் வாழ்க்கை படமாகியது



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் முகமது அசாருதீனின் சர்ச்சைகள் நிறைந்த வாழ்க்கை படமாக்கப்பட்டு உள்ளது.

இவருக்கு இரண்டு மனைவிகள், முதல் மனைவி நவ்ரீன். இதன் பிறகு அசாருதீன் வாழ்க்கையில் இந்தி நடிகை சங்கீதா பிஸ்வானி வந்தார். இதையடுத்து முதல் மனைவியை விவாகரத்து செய்த அசாருதீன், சங்கீதா பிஸ்வானியை 1996ல் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.

இதன் பின்னர் மேட்ச் பிக்சிங் எனும் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதனையடுத்து அசாருதீனுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் கடந்த 2000ம் ஆண்டு ஆயுட்கால தடை விதித்தது.

இதை எதிர்த்து அவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். கடந்த 8ம் திகதி அசாருதீன் மீதான தடை சட்ட விரோதமானது என்று ஆந்திர உயர்நீதி மன்றம் அறிவித்தது. மேலும், அவர் மீதான தடையையும் நீக்கியது.

இந்நிலையில் சர்ச்சைகள் நிறைந்த அசாருதீனின் வாழ்க்கை படமாக்கப்பட்டு உள்ளது. இதற்கு "அசார்" எனப் பெயரிட்டுள்ளனர்.

## 6 ஆண்டுகளுக்குப் பின்முதல் தடவையாக

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு சர்வதேச அணி பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் போட்டியில் விளையாட சென்றுள்ளது. சிம்பாப்வே வீரர்கள் லாகூர் விமான நிலையத்தில் வந்திறங்கினார்கள். பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில் இது முக்கிய நிகழ்வு.

ஆயிரக்கணக்கான பொலிஸார் பாதுகாப்பு அளித்தார்கள். சிம்பாப்வே அணி, 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 2 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடவுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக, இந்த கிரிக்கெட் தொடருக்கு நடுவர்களை நியமிக்க, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) மறுப்பு தெரிவித்துவிட்டது. இதனால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு சொந்தமான நடுவர்களை நியமித்துள்ளது.

## விராட்டுக்கு நல்ல நேரம் போலும்

கடந்த ஞாயிற்றுக்கிழமை டெல்லி டெயார் டெவில்ஸ் அணியுடன் நடைபெற்ற போட்டியின் போது மழை காரணமாக போட்டி நிறுத்தப்பட்டு இருந்தது. அந்த நேரத்தில் கோலி தன்னுடைய காதலி அனுஷ்கா ஷர்மாவை பார்வையாளர் அரங்கில் சென்று சந்தித்தார். போட்டி ஒன்று நடைபெறும் போது அணியுடன் சம்மந்தப்பட்டவர்கள், தொடர்பாடலுக்கு அனுமதிக்கப்பட்டவர்களை தவிர வீரர்கள் வேறு யாரையும் சந்திக்கவோ, பேசவோ முடியாது என்பது சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் விதிமுறை. ஐ.பி.எல் தொடரிலும் அதே விதிமுறை பாவிக்கப்படுகின்றது. இந்த விதிமுறையை மீறியமைக்காக கோலிக்கு குறைந்தது தண்டம் அறவிட முடியும். ஊழல் தடுப்பு பிரிவின் அதிகாரி இந்த விடயம் தொடர்பாக விராத் கோலிக்கு அறிவித்த அதேவேளை, சிறிய குற்றமாக இதனை கருதி அவரை விடுவித்துள்ளனர்.



## பிரிவு வேணாம் விடுங்களேன்

திருமணம் ஆன கையோடு புதுமாப்பிள்ளை ரெய்னா, ஐபிஎல் போட்டிக்கு விளையாட வந்துவிட்டார். இந்நிலையில் மனைவியின் பிரிவை தாங்க முடியாமல் நேற்று பிரியங்கா சவுத்ரி படத்தை டுவிட்டரில் பதிவேற்றி "Can't wait to see u my love" என்று கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து ரசிகர்கள் சரமாரியாக தங்களது கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் போராட்டத்திற்கு ஆதரவளித்த திருகோணமலைத் தமிழ் சிவில் சமூக அமைப்பு!





சம்பூரில் மீள்குடியேற்றத்திற்கு விடுவிக்கப்பட்ட காணிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க ஏற்படுத்தப்பட்ட தடைக்கு எதிராக கடந்த 18ம் திகதி சம்பூர் மக்களால் கிளிவெட்டி முகாமில் நடாத்தப்பட்ட உணவொறுப்புப் போராட்டத்திற்கு திருகோணமலைத் தமிழ் சிவில் சமூக அமைப்பானது தனது முழு ஆதரவையும் வழங்கியதுடன் போராட்டத்தைச் சர்வதேச மயப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட தினமான 17

## மாவட்டப் பெண்கள் வலையமைப்பின் கண்டன ஊர்வலம்

திருகோணமலை மாட்டப் பெண்கள் வலையமைப்பினர் யாழ்ப்பாணம் புங்குடுதீவில் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்புணர்வுக் கொலைக்கு எதிராகத் தமது கண்டனத்தைத் தெரிவிப்பதற்காக இன்று காலை ஊர்வலமொன்றை நடாத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இவ் ஊர்வலமானது காலை 8.30மணிக்கு கடற்படைத்தள வீதியிள் உள்ள நெல்சன் படமாளிகைக்கு முன்பாக ஆரம்பித்து 17

## திருகோணமலை தியாகிகள் மண்டபத்தில் பொதுநினைவேந்தலைத் தடுத்த காவல்துறையினர்





திருகோணமலையில் கடந்த 18ம் திகதி தியாகிகள் மண்டபத்தில் நடைபெறவிருந்த பொது நினைவேந்தலை நடாத்த விடாமல் காவல்துறை தடைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 18ம் திகதி மாலை 5 மணிக்கு 17

## திருகோணமலையில் கடும் எதிர்ப்பு





மூதூர் முஸ்லிம் பாடசாலை மாணவர்கள்



நாமகள் தமிழ் வித்தியாலய மாணவிகள்



சிவன் கோவில் முன்றலில் மக்கள்



புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்களில் ஒருவர்



கோணலிங்க வித்தியாலய மாணவிகளின் ஊர்வலம்



மாதுமை அம்பாள் வித்தியாலய மாணவ மாணவியர்



கைலேஸ்வரா கல்லூரி மாணவ மாணவியர்

திருகோணமலையில் மக்களும் பாடசாலைச் சமூகமும் வித்தியாவின் கொலை தொடர்பாகக் கண்டனம் தெரிவித்துத் தமது குரலை எழுப்பியுள்ளன.

கண்டனப் போராட்டங்களை நிலாவெளி கைலேஸ்வராக் கல்லூரி திருமலையில் ஆரம்பித்து வைத்தமை பாராட்டத்தக்கது.

கோணலிங்க வித்தியாலய மாணவ மாணவிகள் கண்டன ஊாவலமொன்றை நடத்தியதை அடுத்து காவல்துறையின் கெடுபிடிகளுக்குள்ளாகியிருந்தனர்.

ஊர்வலம் செய்வதற்கான அனுமதியை அவர்கள் பெறவில்லை என்பதாலேயே இந்நிலை உருவாகியிருந்தது

### மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்கள்

மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்களில் உங்களின் விபரங்களும் இடம்பெற வேண்டுமாயின் தகவல் அனுப்புங்கள். அனுப்புபவரின் அடையாள அட்டைப் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி திறவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738

### நீராடிய தொழிலாளி உயிரிழப்பு



கிளிவெட்டி பிரதேசத்திலுள்ள வாய்காலில் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் கடந்த 21ம் திகதி மாலை நீராடும் போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக மூதூர் காவல்துறை தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் திருகோணமலை அன்புவழிபுரத்தைச் சேர்ந்த தவராசா அஜந்தன் வயது (20) என இணங்காணப்பட்டுள்ளார்

குறித்த இளைஞன் சன்லைட் கம்பனிக்குச் சொந்தமான வாகனம் ஒன்றில் கூலி வேலை செய்பவர். 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரந்திர பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 23.05.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.